930

அ.இ. முஸ்லிம் லீக்

8-வது (சென்னை) மகாநாடு

'மல

31 MAY 1941
MADRAS

1941௵ ஏப்ரல்மீ

சென்னை,

"ஸைபுல் இஸ்லாம்'' பதிப்பக வெளியீடு.

ப்பி ரைட்] [விலை அணா 10.

"ஸைபுல் இஸ்லாம்

ஓர் உயரிய வாரமிருமுறை
இஸ்லாமியப் பத்திரிகை

முஸ்லிம்கள் மார்க்கக் கட்டளைகளின்படி நட அதன் வரம்பைக் கடக்காமல் அரசியல் ஞானம் சமூக சீர்திருத்த அரசியல் துறையில் உழைக்கவும் ப்பதே ஸை. இ. த்தின் கொள்கையும் நோக்கமும் இந்நோக்கத்தில் ஒரு சிறிதளவும் மாறுதலின்றி 31 களாக "ஸைபுல் இஸ்லாம்'' மார்க்க, சமூக, தொண்டு புரிந்து வருகிற தென்பதை ஸை. இ. வாச நன்கறிவர்.

முஸ்லிம் உலக சமாசாரங்களையும், முழு உல சாரங்களையும், முஸ்லிம் லீக் சமாசாரங்களையும் அ தைக் கப்போது முஸ்லிம்கள் நடந்து கொள்ள வே மார்க்க, சமூக ராஜீய விஷயங்களையும் முஸ்லிம் சமு ணருக்குப் போதித்து உணர்ச்சி யுண்டுபண்ணி வ "ஸைபுல் இஸ்லாம்" ஒன்றே.

இதன் சந்தா உள்நாட்டுக்கு

வருஷம் 1-க்கு ரூ. 11—0—
6 மாதத்திற்கு ரூ. 6—0—
3 மாதத்திற்கு ரூ. 3—4—

வெளிநாட்டுக்கும், பர்மா நாடுகளுக்கு
வருஷம் 1-க்கு ரூ. 13—0—
6 மாதத்திற்கு ரூ. 7—0—

மானேஜர் :

"ஸைபுல் இஸ்லாம்" ஆபீஸ்
47, செம்புதாஸ் தெரு, சென்னை

அ. இ. முஸ்லிம் லீக்

28-வது (சென்னை) மகாநாடு

'மலர்'

31 MAY 1941
MADRAS
707
320.158
707

1941௵ ஏப்ரல்௴

சென்னை,

"ஸைபுல் இஸ்லாம்" பதிப்பக வெளியீடு.

V44:511
V44:511

சென்னை,
"ஸைபுல் இஸ்லாம்" பிரஸில் அச்சிடப்பட்டது.
— 1941 —

707
31 MAY 1941
MADRAS
458

786

முபஸ்மிலன் முஹம்திலன்
முஸல்லியன் வ முஸல்லிமா

முன்னுரை

சென்னையில் நடைபெற்ற அ. இ. முஸ்லிம் லீக் 28-வது மகாநாடு, சென்னை சரித்திரத்தில் மட்டுமின்றி, இந்திய சரித்திரத்திலேயே பொன்னெழுத்துகளால் பொறிக்கக் கூடிய மகாநாடாகும். இம் மகாநாட்டின் மகத்துவம் பற்றியும், இம் மகாநாட்டிற்குத் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் காட்டிய ஊக்கம், உற்சாகம், தியாகம் பற்றியும் "காயிதே ஆஜம்" அவர்களே போற்றிப் புகழ்ந்துள்ளனரெனில், இம் மகாநாட்டின் மகத்துவம்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

இம் மகாநாட்டில் நடைபெற்ற வடநாட்டுத் தலைவர்களின் ஆணித்தரமான பிரசங்கங்களை நம் தமிழ் நாட்டு மக்கள் அறிவதால், அவர்களுக்கு மார்க்க, சமூக, தேச பக்தியும், அரசியல் ஞானமும் உண்டாவதுடன், முஸ்லிம் லீக், பாகிஸ்தான் திட்டம் முதலியவை பற்றிய முழு விவரங்களும் நன்கு விளங்கும். "காயிதே

ஆஜம்" அவர்களின் தலைமைப் பேருரை, இதுவரை எம் மகாநாட்டிலும் அவரால் செய்யப்பட்டிராதபடி, அவ்வளவு உணர்ச்சி ததும்பக் காணப்படுகிறது. அஃதோர் 'அரசியல் பொக்கிஷம்' எனக் கூறுதல் பொருந்தும்.

எனவே, தமிழ்நாட்டு முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் இம் மகாநாட்டின் ஞாபகார்த்தமாக, இதன் முழு விவரங் களையும் தங்கள் வசம் வைத்திருக்க வேண்டுவதசியமென் பதைக் கருதியே இம்மலர் வெளியிடப்படுகிறது. இம்மல ரைத் தமிழ் முஸ்லிம்கள் வாசித்துணர்ந்து, அரசியல் ஞான மும், விழிப்புணர்ச்சியும் பெற வேண்டுமென்பதே நமது ஆவல். ஆண்டவன் நமது ஆவலைப் பூர்த்தி செய்து வைப் பானாக! ஆமீன்!.

(மௌலவி) அஹ்மத் ஸயீத்,
ஆசிரியர்,
"ஸைபுல் இஸ்லாம்"

சென்னை,
20—4—'41

அ. இ. முஸ்லிம் லீக்

28-வது (சென்னை) மகாநாடு

'மலர்'

---

1. பந்தல் அமைப்பு

சென்னை பீபிள்ஸ்பார்க், எஸ். ஐ. ஏ. ஏ. கிரவுண்ட்ஸ் 'ஜின்னாஹ் ஆபாத்'தில், 1941ஷு எப்ரல்மீ மத்தியில் அகில இந்திய முஸ்லிம் லீக் 28-வது மகாநாடு நடைபெறுவதற்காக சுமார் ஒரு இலட்சம் பேர் வரை அமரக் கூடிய விஸ்தாரமான பந்தல் வெகு நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தது. பந்தலின் கிழக்குப் பகுதி மத்தியில் சுமார் 500 பேர்களுக்குமேல் வசதியாக அமரக்கூடிய ஒரு மேடையமைக்கப்பட்டிருந்தது. இம் மேடை, இதுவரை எந்த மகாநாடுகளிலும் அமைக்கப்பட்டிராத நூதன முறையில் மொகலாய அரசர்களின் சிம்மாசன பீடம் போன்று செங்கற்களால் 'பக்கா' கட்டிடமாக கட்டப்பட்டது. இம் மேடைக்குப் பின்புறத்தில் ஒரு ஒதுக்கமான இடத்தில் தலைவர்களுக்காகவென்று தனி 'ப்ளஷ் அவுட்' கக்கூஸ் 'பக்கா' கட்டிடமாக அமைக்கப்பட்டது. இது போன்றே

மகாநாட்டுக்கு வரும் இதரர்களின் சௌகரியத்திற்காகப் பல கக்கூசுகள் கட்டப்பட்டன.

பந்தலில் ஏராளமான மின்சார விளக்கு அலங்காரங்கள் செய்யப்பட்டன. பர்தாப் பெண்களுக்கு கோஷா முறைப்படி தனி ஏற்பாடுகள் தக்கவிதமாகச் செய்யப்பட்டன.

தண்ணீர் ஸப்ளை, சுகாதார வசதிகள் முதலிய எல்லா வகை வசதிகளும் செய்யப்பட்டன. இரண்டு தீயணைக்கும் என்ஜின்கள் பந்தலின் மேல் புறத்திலும், கீழ் புறத்திலும் தயாராக வைக்கப்பட்டன.

“ஜின்னாஹ் ஆபாத்” காம்பவுண்டின் வடமேற்கு மூலையில் ஒரு தற்காலிக மஸ்ஜித் நிர்மாணிக்கப்பட்டது. தெற்கு வரிசைகளிலும், மேற்கு வரிசைகளிலும் ஸோடா முதலிய குளிர்ந்த பானக் கடைகள், புத்தகாலயங்கள், பீடி ஸ்டால்கள், ஜவுளிக்கடைகள், இளநீர், வாசனைத் திரவியங்கள், தபால் தந்தி ஆபீஸ்கள், அ. இ. முஸ்லிம் லீக் காரியாலயம், வரவேற்புக் கமிட்டி காரியாலயங்கள், அவசர ஆரம்பச் சிகிச்சை செய்யும் முஸ்லிம் செஞ்சிலுவைப் படையினரின் முகாம்கள், முதலியவை விசேஷமாக அமைக்கப்பட்டிருந்தன.

2. தலைவர்கள் வருகை

அகில இந்திய முஸ்லிம் லீக் 28-வது மகாநாட்டுத் தலைவர் “காயிதே ஆஜம்” ஜனாப் முஹம்மத் அலி ஜின்னா அவர்கள், 1941ஹு ஏப்ரல்மீ 11உ வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கு சென்டிரல் ஸ்டேஷனில் வந்திறங்குவதாக ஏற்பாடாகி யிருந்தது.

நமது மாபெருந் தலைவரைச் சிறப்பாகவும், கண்ணியமாகவும், வரவேற்கவும், பொது மக்கள் சௌகரியமாக

சமது மாபெருந் தலைவரைக் கண் குளிரக் கண்டு மகிழ்ச்சி யடையவும் வசதியான முறையில் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியாரால் முன்னேற்பாடுகள் பலமாகச் செய்யப் பட்டிருந்தன.

'ஜனத் திரள் அரண்' :

வரவேற்புக் கமிட்டியினரால், ரயில்வே பிளாட்பார அனுமதி டிக்கட்டுகள் கொடுக்கப்பட்ட சுமார் 1000 பேர்களும், சுமார் 100 முஸ்லிம் லீக் தொண்டர்களும் சுமார் 50 போலீஸும், போலீஸ் மேல் அதிகாரிகளும், ஸிவிக் கார்ட்ஸுகளும் பிளாட்பாரத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

முன்னேற்பாட்டின்படி மக்கள் அன்று அதிகாலை முதல் பெரும் உற்சாகமடைந்து, சென்னை சென்டிரல் ஸ்டேஷனிலும், அங்கிருந்து ஊர்வலம் செல்லும் பாதையாகிய ஸ்டான்லி பாலம், பாடிகார்டுரோட், மவுண்ட்ரோட், வாலாஜாரோட், திருவல்லிக்கேணி ஹைரோட் ஆகிய ரஸ்தாக்களின் இரு மருங்குகளிலும், திருவல்லிக்கேணி வாலாஜா மஸ்ஜித் வரை காலை 6 முதலே பெருந் திரளாகக் கூட ஆரம்பித்து விட்டனர். சுருங்கக் கூறுமிடத்து, மேற்கண்ட ரஸ்தாவின் இரு மருங்குகளிலும் இரண்டு 'ஜனத் திரள் அரண்' கட்டப்பட்டது போன்று காணப்பட்டது.

இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட திரள் :

சென்டிரல் ரயில்வே ஸ்டேஷன் தலைவாயில்கள், பிரிட்டிஷ் அரசாங்கக் கொடிகளாலும், முஸ்லிம் இளம் பிறைக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அழகிய பச்சை சட்டையும், காகி காற்சட்டையும், வெள்ளைப் பிறை யிடப்பட்ட பச்சை நிறத் தொப்பியும் அணிந்த முஸ்லிம் லீக் தொண்டர்கள் சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேல், சென்டிரல் ஸ்டேஷன் நான்காம் பிளாட்பாரத்திலிருந்து ரோடு வரையிலும் அணிவகுத்து நின்றனர். பெருந் தொ

கையினரான மக்கள் ஜெனரல்ஆஸ்பத்திரி சுவற்றின் மீதும் ஏறி நின்றுக் கொண்டிருந்தனர். ஏற்கெனவே அறிவிக்கப் பட்டபடி காலே 7-30 மணிக்கெல்லாம் வழிநெடுக சுமார் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் பெருந் திரளா கக் கூடி விட்டனர்.

* * *

அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாட்டின் வரவேற் புக் கமிட்டி காரியாலயத்திற்கு 10—4—41 வியாழனன்று மாலே (வெள்ளி இரவு) பின்கண்ட தந்தி கிடைத்தது:

"காயிதே ஆஜம்" (தலைவர்) சுகவீனமா யிருக்கிறார். ஊர்வலத்தையும், ரயில்வே ஸ்டேஷனில் பெருங் கூட்டத் தையும் ரத்து செய்து விடுங்கள்"

* * *

இதை முன்னிட்டு, சென்னை பிளாட்பாரத்தில் சுமார் 7-45 மணிக்கு ரேடியோ அமைக்கப்பட்ட மோட் டார் ஒன்று, "ஜனுப் ஜின்னுவுக்கு உடம்பு அசௌக்கிய மாகி விட்டதால், ரயில் வண்டி சற்று தாமதமாக வந்து சேரும்" என்று அறிவித்துக் கொண்டே சென்றது.

அப்போதும் மக்கள் இருந்த இடம் விட்டு சற்றும் அசையாமல், அப்படியே அமைதியாக நின்றிருந்தனர். நேரம் அதிகரிக்க அதிகரிக்க மக்களின் ஆவலும் அதி கரித்து விட்டது. போலீஸ் ஏற்பாடுகளும், ரிஸர்வ்படை யும், மலையாள போலீஸ் படைகளும் பெருந் திரளாக அணி வகுத்து நின்றன. மக்களைச் சமாளிக்கப் பலத்த ஏற்பாடு கள் செய்யப்பட்டிருந்தும் கூட்டம் சமாளிக்க முடியாத அளவுக்குப் பெருகி விட்டது.

ஸ்பெஷல் ரயில் வருகை :

சரியாக மணி 9-15-க்கு ஸ்பெஷல் ரயில் வண்டி சென் டிரல் ஸ்டேஷன் வந்து சேர்ந்தது. ரயில் வண்டி முஸ்லிம்

லீக் கொடிகளாலும், தோரணங்களாலும் விசேஷமாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

அ. இ. முஸ்லிம் லீக் காரியதரிசி நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான் அவர்களும், மஹ்மூதாபாத் ராஜா, ஸர். அப்துல்லாஹாரூன் தம்பதிகள், ஸர். ஸஅதுல்லா, ரவூப்ஷா, எஸ். எம். ஷரீப், ஸர்தார் அவ்ரங்க ஜேப்கான், (வடமேற்கெல்லைப்புறம்) காஜி முஹம்மத் இஸா, (பலூச்சிஸ்தான்) மௌலானா ஜமால் மியான் (லக்னோ), ஐ. ஐ. சந்திரிகார் (பம்பாய்), ஹாஜி நூர்முகம்மத் அஹ்மத், பேகம் முஹம்மத் அலி, பேகம் ஹாபிஜுத்தீன், லேடிஹுமாயூன் மிர்ஜா முதலிய முஸ்லிம் லீக் தலைவர்களும், சுமார் 200-க்கு மேற்பட்ட டெலிகேட்டுகள், அ. இ. முஸ்லிம் லீக் நிர்வாகசபை அங்கத்தினர்கள் முதலியவர்களும் ரயிலை விட்டிறங்கினர். 'அல்லாஹு அக்பர்' 'ஜின்னா ஜிந்தாபாத்' 'முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்' என்றகோஷங்கள் வானைப்பிளந்தன. ஒவ்வொரு ஜில்லா முஸ்லிம்லீக்தலைவர்களும் ஜனாப்ஜின்னா அவர்களுக்காகக் கொண்டுவந்திருந்தஏராளமான சரிகைமாலைகளையும், புஷ்ப மாலைகளையும் நவ்வாப்ஜாதா லியாகத் அலிகானவர்களுக்குச் சூட்டினர்.

"காயிதே ஆஜம்" ஜனாப் ஜின்னா அவர்கள் அங்கு காணப்படவில்லை. பிளாட்பாரத்தில் கூடியிருந்த திரளான மக்கள் ஆவல் கொண்டு விஷயமென்ன என்று விசாரித்ததில், ஜனாப் ஜின்னா அவர்கள், தேக சுகவீனத்தின் காரணமாக பேஸின்பிரிட்ஜ் ஸ்டேஷனிலேயே இறங்கி, நேராக அவரது ஜாகைக்கு அழைத்துச் செல்லப்பட்டு விட்டாரெனத் தெரிந்தது.

பேகம் முஹம்மத் அலி முதலிய முஸ்லிம் பெண்கள் ரயிலை விட்டிறங்கியதும், பேகம் மீர் அமீருத்தீன், யாகூப் ஹஸன் மர்ஹூமவர்களின் மனைவி கதீஜா பேகம் ஆகிய இருவரும் அவர்களை வரவேற்றனர்.

பூச்சக்கரக் குடை :

நவ்வாப் ஜாதா லியாகத் அலிகானும், அவரது சகாக்களும் ஸ்டேஷன் பிளாட்பாரத்திலிறங்கியவுடன், சுமார் 100க்கு மேற்பட்ட முஸ்லிம் லீக் தொண்டர் படையினரும், போலீஸ் நிர்வாகிகளும், பிளாட்பாரத்திலிருந்த மக்கள், தலைவர்களை நெருக்கி விடாவண்ணம் இருபுறங்களிலும் தடுத்து அணிவகுத்து நின்று, தலைவர்களை கீழ்புற ரஸ்தாவுக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு மல்லிகைப் புஷ்பங்களால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த மோட்டார் வண்டியில் நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான் அவர்கள் ஏறி அமர்ந்ததும், அவருக்குப்பின்னர் பண்டைய மொகலாய அரசர்களின் பவனியின்போது பிடிக்கப்படும் பூச்சக்கரக் குடை உயர்த்திப் பிடிக்கப்பட்டது. பச்சைப்பட்டினலாக்கப்பட்ட இக்குடை, பார்வைக்கு வெகு அழகாகக் காணப்பட்டது. நவ்வாப் ஜாதா லியாகத் அலிகானுக்கு இருபுறங்களிலும் மஹ்மூதாபாத் ராஜாவும், நவ்வாப் பஹதூர் யார்ஜங் பஹதூரும் அமர்ந்திருந்தனர். நவ்வாப்ஜாதா லியாகத் அலிகானவர்களின் மோட்டாரின் இருபுறங்களில் உள்ள கால் படிகளில் பச்சையுடையணிந்த இரண்டு மெய்பாதுகாப்பாளர்கள் கம்பீரமாக நின்றுக்கொண்டிருந்தனர்.

3. ஊர்வலச் சிறப்பு

தலைவர்கள் ஏறியிருந்த மோட்டார் வண்டி மெதுவாக ஊர்வலப் பாதைகளில் நகர்ந்து சென்றதும், அதற்குப்பின் பல மோட்டார்கள் வரிசைக் கிரமமாகச் சென்றதும் பண்டைய மொகலாய சக்கரவர்த்திகளின் பவனியையும், இஸ்லாத்தின் கம்பீரத்தோற்றத்தையும் தெற்றென விளக்கிக் காட்டக் கூடியதா யிருந்தது. நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான் அவர்கள் ஏறியிருந்த மோட்டாருக்குப் பின், ஸர்.

ஹாஜி அப்துல்லா ஹாரூன் அவர்கள் ஏறியிருந்த காரும், அப்துல் ஹமீத்கான் முதலிய பிரபலஸ்தர்களின் கார்களும் சென்றன. இவைகளுக்குப் பின் லீக் கொடிகளாலும், தோரணங்களாலும் அழகாக அலங்கரிக்கப்பட்டு, ஊர்களின் பெயர்களுள்ள பெரிய போர்டுகள் தொங்கவிடப்பட்ட ராமநாதபுரம், அனந்தப்பூர், மலபார், தென்கன்னடம், வடஆற்காடு, பல்லாரி, மதுரை, கடப்பை, கர்னூல், திருச்சி, கிருஷ்ணா, கோயம்புத்தூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, செங்கல்பட்டு, நெல்லூர், தென்னாற்காடு முதலியஜில்லாக்களின் முஸ்லிம் லீக் கார்கள் வரிசைக் கிரமமாகக் சென்றன. முன்னேற்பாட்டின்படி பொது மக்கள், ஊர்வலத்தைப் பின் தொடர்ந்து செல்லவில்லை.

சென்னை சென்டிரலிலிருந்து காலை 9-30 மணி சுமாருக்குப் புறப்பட்ட ஊர்வல மோட்டார்கள், வாலாஜா மஸ்ஜிதை யடைய 11 மணியாகி விட்டது.

* * *

4. கொடி யேற்று விழா

1941ஹு ஏப்ரல்மீ 12உ சனிக்கிழமை யன்று மாலை எஸ். ஐ. ஏ. ஏ. கிரவுண்ட்ஸ், "ஜின்னாஹ் ஆபாத்" திலுள்ள அ. இ. முஸ்லிம் லீக் 28-வது மகாநாட்டுப் பந்தலின் வடபுறத்தில் நாட்டப் பெற்றிருந்த 72 அடி உயரமுள்ள வானளாவிய கம்பத்தில் இளம் பிறை தாங்கிய பச்சைக் கொடி ஏற்றப்பட்டது.

மாலை சுமார் 5 மணிக்கு "ஜின்னாஹ் ஆபாத்" திலுள்ள மூர்பெவிலியனுக்கு அ. இ. முஸ்லிம் லீக் காரியதரிசி நவ்வாப்ஜாதா லியாகத்அலிகான் அவர்கள், மஹ்மூதாபாத் ராஜா, பாத்திமா ஜின்னா, பேகம் முஹம்மத் அலி, நவ்வாப் பஹாதூர் யார்ஜங் பஹாதூர் ஆகிய முஸ்லிம் தலைவர்கள் வந்து சேர்ந்தனர்.

மகாநாட்டுப் பந்தலில் வட புறத்திலுள்ள வெட்ட வெளியில், சுமார் முப்பதினுயிரத்துக்கு மேற்பட்ட முஸ் லிம் பொது மக்கள், இஸ்லாத்தின் கம்பீரச் சின்னமாகிய இளம்பிறைச் பச்சைக் கொடியைக் கண்டு ஆனந்திக்கக் குழுமி யிருந்தனர்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் வரவேற்பு :

மகாநாட்டு வரவேற்புத் தலைவர் ஜனுப் அப்துல் ஹமீத் கான் அவர்கள், "காயிதே ஆஜம்" ஜனுப் முஹம்மத் அலி ஜின்னு அவர்களையும், நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான், மஹ்மூதாபாத் ராஜா, பாத்திமா பேகம் முதலிய முஸ்லிம் லீக் தலைவர்களையும் நல்வரவு கூறி விட்டு, ஜனுப் ஜின்னு அவர்கள் தற்சமயம் பூரண சுகத்துடன் இருப்பதாகவும், அவர் இப்போது டாக்டர்களின் ஆலோசனைக் கிணங்க ஓய்வு மட்டும் எடுத்து வருகிருரென்றும், மகாநாட்டிற்கு அவர் தலைமை வகிப்பாரென்றும் ஒலிபெருக்கி மூலம் கூறி ஞர். (அங்கு குழுமி யிருந்த மக்கள் பெரும் ஆரவாரம் செய்து, தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டனர்)

பின்னர், ஜனுப் அப்துல் ஹமீத்கான் அவர்கள, முஸ் லிம் லீக் கொடியின் தத்துவம் பற்றிப் பேசுகையில், "இக் கொடி நமது விடுதலை, சகோதரத்துவ இலட்சியங்களைக் குறிப்பிடுவதாகும்" எனக்கூறி விட்டு, கனம் மஹ்மூதாபாத் ராஜா அவர்களை, இளம் பிறைப் பச்சைக் கொடியைப் பறக்க விடும்படி கேட்டுக் கொண்டார்.

பச்சை மணிக் கொடி பறக்குது பார்! :

பின்னர், கனம் மஹ்மூதாபாத் ராஜா அவர் கள் மூர்பெவிலியனின் மேன் மாடியில் 'அல்லாஹு அக்பர்' என்ற தக்பீர் முழக்கத்திடையே, கம்பீரமாக

எழுந்து நின்று, ஒரு மின்சார விசையை அழுத்தி, கொடியைப் பறக்க விடுவதற்கு முன் செய்த உணர்ச்சி மிக்க பிரசங்கம் வருமாறு:—

"இதோ இவ்விளம்பிறைப் பச்சைக்கொடி இஸ்லாத்தின் ஆரம்ப காலம் முதல் நாளிது வரை 1300 ஆண்டுகளாக உண்மையான சமாதானம், சகோதரத்துவம் முதலிய உயரிய இலட்சியங்களைப் போதித்து வருகிறது. உண்மையான மானிடத்துவமென்பதன் உட்கருத்தையப்படியே உலகினருக்கு அறிவிக்கக் கூடிய ஒரு உயர் சின்னமாக விளங்குகிறது. இது முஸ்லிம் சமூகத்திற்கு மட்டும் குறிப்பான உரிமையுடையதல்ல. உலகிலுள்ள எல்லா மானிட கோடிகளுக்கும் இக் கொடியில் பூரண உரிமையிருக்கிறது. இக் கொடியின் கீழ் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹுதஆலாவின் கட்டளையும் இது தான்; நமது இஸ்லாத்தின் தூதர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் ஆணையும் இது தான். நமது புனித மதமாகிய பரிசுத்த தீனுல் இஸ்லாத்தின் சித்தாந்தமும் இதுவே.

"நம் புனித இஸ்லாம் மதத்தின் முக்கிய இலட்சியமே சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் தான். இஸ்லாமிய ஜனநாயக ஆட்சியின் கீழும், சகோதரத்துவத்தின் கீழும் ஜாதி, சமூக, நிறப் பாகுபாடுகளே கிடையா. இவ்விரிந்த உலகில் முதன்முதலாக ஏற்படுத்தப்பட்டதும், பழைமையானதுமான ஜனநாயக ஆட்சி முறை இஸ்லாத்தில் பொதிந்து கிடக்கிறது.

"இஸ்லாம் மதம், மனித சமூக சமாதானத்தையும், அமைதியையும் பாதுகாப்பதற்காகவே தொண்டாற்றுகிறது. அடிமைத்தனத்துக்கு இஸ்லாத்தில் இடமில்லை. சுதந்திரமே அதன் உயிர் நாடியான இலட்சியம். இந்த இலட்சியத்தை பிரதிபிம்பித்துக் காட்டும் இவ்விளம்பிறைப் பச்சைக்கொடியின் கீழ் பெரும் சிக்கலான பிரச்னைகள் எல்

லாம் வெகு எளிதாகத் தீர்க்கப்பட்டு விடுமென்பது திண்ணம். மேனுடுகளில் தீர்க்கப்பட முடியாத பெரும் கஷ்டமான பிரச்னைகளை இக்கொடியின் கீழ் வெகு எளிதாகத் தீர்த்து விடலாம்.

"உலகிலுள்ள முஸ்லிம் பொதுமக்களனைவரும், இந்தியாவின் சுதந்திரத்துக்காகவும், விடுதலைக்காகவும் மட்டும் உழைக்கவில்லை; பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டு, ஒடுக்கி நசுக்கப்பட்ட மக்களனைவருடையவும் கதிமோட்சத்திற்காகவும் விடுதலைக்காகவும் உழைத்து வருகின்றனர். இத்துணை உயரிய இலட்சியமுடைய முஸ்லிம் சமுதாயத்தினர் பின் பற்றும் இவ்விளம் பிறைப் பச்சைக் கொடியின் கீழ், முஸ்லிம்கள் ஒன்று கூடி, அக்கொடி என்றென்றும் பறந்துகொண்டே இருப்பதற்காக ஒவ்வொரு தியாகத்தையும், செய்ய வேண்டுவது முஸ்லிம்களின் இன்றியமையாக் கடமையாகும். நீங்கள் இவ்வாறு செய்யத் தயாரா யிருக்கிறீர்களா?"

கனம் மஹ்மூதாபாத் ராஜா அவர்கள் இவ்வாறு கேட்டவுடன் அங்கு குழுமியிருந்த மக்கள் அனைவரும் ஒரே குரலில் "ஆம்" என்று பதில் கோஷம் செய்தனர். பின்னர், 'அல்லாஹு அக்பர்' என்ற பலத்த தக்பீர் கோஷத்திடையே கனம் மஹ்மூதாபாத் ராஜா அவர்கள், ஒரு மின்சார விசையை அழுத்தி கொடியைக் கம்பீரமாக ஏற்றி வைத்தார். இளம்பிறை பச்சை மணிக் கொடி வானேங்கிப் பறந்து ஊசலாடியது.

முஸ்லிம் லீக் தொண்டர்கள், முஸ்லிம் லீக் கொடிக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தினர்.

5. மகாநாடு முதல் நாள் — தலைவர் முன்னுரை

அகில இந்திய முஸ்லிம் லீக் 28-வது மகாநாட்டின்

முதல் நாள் நடவடிக்கைகள், 1941ஹு எப்ரல் மீ 12-உ சனிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாயின. பகல் 12 மணி முதல் பெருந் திரளான மக்கள் கூட்டம்கூட்டமாகச் சென்னையின் பல்வேறு பாகங்களில் தங்கியிருந்தவர்கள் "ஜின்னுஹ் ஆபாத்"தில் வந்து குழுமலாயினர்.

மகாநாட்டுப் பந்தல் சிறப்பு:

மகாநாட்டுப் பந்தல் முழுமையும் பச்சைக்கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. 'ஜின்னு ஜிந்தாபாத்', 'முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்', 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று ஆங்கிலத்திலும், தமிழிலும், உர்தூவிலும் வரையப்பட்ட துணி போர்டுகள் ஆங்காங்கே வெகு அழகாகக் கட்டப்பட்டிருந்தன. மகாநாட்டுப் பந்தலின் நடுவில் நான்கு புறங்களிலும் தெரியக் கூடிய மின் சாரக் கடியார மொன்று அமைக்கப்பட்டிருந்தது. மேடை மீது நூற்றுக்கணக்கான நாற்காலிகளும்,முன்புறத்தில் ஒரு நீண்ட மேஜையும் போடப்பட்டிருந்தன. மேஜையின் இடையே போடப்பட்டிருந்த நாற்காலியில் வரவேற்புத் தலைவர் ஜனுப் எம். அப்துல் ஹமீத்கான் அமர்ந்திருந்தார். பகல் 1 மணி முதல் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டேயிருந்தனர். மகாநாட்டுப் பந்தலின் மேல்வாயிலிலிருந்து மேடை வரை, இரு புறமும் முஸ்லிம் லீக் தொண்டர் படையினர் அணிவகுத்து நின்று, தலைவர்களை ஒருவர் பின் ஒருவராக மேடைக்கழைத்துச் சென்றனர். சரியாக மணி 2½-க்கு அ. இ. முஸ்லிம் லீக் பொதுக் காரியதரிசி நவ்வாப்ஜாதா லியாகத் அலிகானும் அதற்குச் சற்று நேரத்துக்குப் பின் பேகம் முஹம்மத் அலி, பேகம் தமீஜுத்தீன், பேகம் மீர் அமீருத்தீன் முதலிய முஸ்லிம் பெண்களும், மணி 2-30 க்கு, நீதிக் கட்சித் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும், அதற்குப் பத்து நிமிஷத்துக்குப் பின், "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். சீனுவாசனும் மேடைக்குச் சென்றனர். மேடையின் மீது

போடப்பட்டிருந்த மேஜையின் முன் நடுவில் அமர்ந்திருந்த வரவேற்புக் கமிட்டித் தலைவர், ஜனாப் எம். அப்துல் ஹமீத் கான் அவர்களின் வலப்புற நாற்காலியில் நவ்வாப் ஜாதா லியாகத் அலிகான் அவர்கள் அமர்ந்திருந்தார். மேடை மீது அமர்ந்திருந்த சுமார் 500 பிரபலஸ்தர்களில் முக்கிய ஸ்தர்கள் வருமாறு:—

ஜனாப்கள் கனம் மஹ்மூதாபாத் ராஜா, ஸர். அப்துல்லா ஹாரூன், ஸர்தார் ஔரங்கஜேப்கான், ரவூப் ஷா, இஸ்பஹானி, நவ்வாப் யார்ஜங் பஹதூர், பேகம் முஹம்மத் அலி முதலிய வட இந்தியத் தலைவர்கள், மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவர், காரியதரிசிகள், மாகாண முஸ்லிம் லீக் தலைவர், காரியதரிசிகள், ஸர். முஹம்மத் உஸ்மான், "ஸைபுல் இஸ்லாம்" ஆசிரியர் மௌலானா மௌலவி அஹமத் ஸயீத் சாஹிப், "தாருல் இஸ்லாம்" ஆசிரியர் பா. தாவூத்ஷா, கூத்தாநல்லூர் ஜ. ம. ஹாஜி முஹம்மத் இஸ்மெயில் சாஹிப். இதர கூத்தாநல்லூர் பிரபல தலைவர்கள், ஸ்ரீமான்கள் பெரியார் ஈ. வெ. ராமசாமி, கே. வி. ரெட்டி, குமார ராஜா எம். ஏ. முத்தைய செட்டியார், சென்னை நகர மேயர் வி. பாஸுதேவ், "சுதேசமித்திரன்" ஆசிரியர் வி. ஆர். சீனுவாசன்.

மகாநாட்டின் நடவடிக்கைகள் சரியாக மாலை 2-30 மணிக்கு ஆரம்பமாகுமென நிகழ்ச்சிமுறையில் குறிப்பிடப்பட்டிருந்தும், அதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னரே மகாநாட்டுப் பந்தலிலும், வெளிகளிலும் எள்விழ இடமில்லாதபடி பெருந்திரளான முஸ்லிம் பொது மக்கள் சுமார் ஒரு இலட்சம் பேர் வரை கூடியிருந்த காட்சி இஸ்லாத்தின் கம்பீரத் தோற்றத்தை தெற்றென விளக்கிக் காட்டியது.

தலைவர் வருகை:

சரியாக மூன்று மணிக்கு, 'காயிதே ஆஜம்' ஜனாப்

முஹம்மத் அலி ஜின்ஞ அவர்கள் மகாநாட்டுப் பந்தலின் மேடைக்கு வந்து சேர்ந்தார். அவர், மேடைக்குப் பின்புறமாக மேடை மீது அழைத்துச் செல்லப்பட்டு, அமைதியாக ஓர் ஆசனத்தில் ஜனுப் அப்துல் ஹமீத்கான் அவர்களுக்கு இடது பக்கத்தில் உட்கார வைக்கப்பட்டார். "காயிதே ஆஜம்" அவர்கள் சற்று பலஹீனமடைந்தவராக இருந்தும், மக்களின் குதூகலத்தைக் கண்டு, உற்சாக முடையவராய் காணப்பட்டார். அவருடன் வந்த அவரது சகோதரி மிஸ் பாத்திமா ஜின்ஞ அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டார். அவரை மேடை மீது கண்ட உடன் மக்கள், நெடுங்காலம் தன் தாயைப் பிரிந்த கன்று, மீண்டும் அதனைக் கண்டது போன்று பெரும் ஆனந்தம் கொண்டு, தங்களையும் மறந்து தக்பீர் கோஷமிட்டனர். இத் தக்பீர் கோஷம் சுமார் 10 நிமிஷங்கள் வரை ஓயவேயில்லை. "காயிதே ஆஜம்" அவர்களைத் தரிசித்த பின் மக்களடைந்த குதூகலம் சொல்ல முடியாது.

சரியாக 3-10-க்கு மகாநாட்டின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. முதலில் பரிசுத்த திருக்குர்ஆன் ஷரீபிலிருந்து சில ஆயத்துகள் (கிராஅத்து) இனிய தொனியில் ஓதப்பட்டன. அதற்குப் பின் மகாநாட்டுக் கென்றே தொகுக்கப்பட்ட உணர்ச்சி மிக்க உர்தூ தேசீயபாடல்கள் அழகாகப் பாடப்பெற்றன.

பின்னர் வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஜனுப் அப்துல் ஹமீத்கான் அவர்கள், தமது வரவேற்புப் பிரசங்கத்தை நிகழ்த்தினர்.

[வரவேற்புத் தலைவர் பிரசங்கம், தமிழில் தனியாக அச்சிடப்பட்டு, மகாநாட்டின் வரவேற்புக்கமிட்டியினரால் வெளியிடப்பட்டதால், அதன் விவரம் இங்கு பிரசுரிக்கப்படுவேது அவசியமில்லை யெனக் கருதி, நிறுத்தப்பட்டது.]

தலைவர் முன்னுரை :

தலைவர் "காயிதே ஆஜம்" முஹம்மத் அலி ஜின்னா அவர்கள் எழுந்து நின்று சுற்றிலும் அனைவருக்கும் வந்தனம் செய்த பின் தலைமை ஆசனத்தி லமர்ந்து, 10 நிமிஷ நேரம் வரை உட்கார்ந்திருந்தார். இந்தப் பத்து நிமிஷ நேரமாகத் தக்பீர் முழக்கம் ஓயாது ஒலி செய்து கொண்டேயிருந்தது. தக்பீர் முழக்கம் எல்லையில்லாமல் அதிகரித்துக் கொண்டே யிருந்ததைக் கண்ட நமது மாபெருந் தலைவர் "காயிதே ஆஜம்" அவர்கள் எழுந்து ஒலிபெருக்கிக் கருவியின் முன்வந்து ஆங்கிலத்தில் 'சீமாட்டிகளே! கனவான்களே!!' என்று கூறினர். அப்போதும் தக்பீர் முழக்க ஒலி ஓயவில்லை. மீண்டும் "காயிதே ஆஜம்" அவர்கள் அனைவரையும் கையமர்த்தி, ஆங்கிலத்தில், 'சீமாட்டிகளே! சீமான்களே!!' என்று ஆரம்பித்தார். தக்பீர் முழக்கமும், கரகோஷ ஆரவாரங்களும் அப்போது ஒருவாறு ஓய்ந்தன.

பின்னர் "காயிதே ஆஜம்'' ஜனப் ஜின்னா அவர்கள் ஆங்கிலத்தில் முன்னுரையாகச் செய்த பிரசங்கத்தின் விவரம் வருமாறு:—(ஜனப் ஜின்னா அவர்கள் சுகவீனமா யிருந்த போதிலும், அவரது குரலில் கம்பீரமும், உணர்ச்சியும், உற்சாகமும் ததும்பின.)

"உங்கள் மாகாணம், உலகில் உள்ள எல்லா மொழிகளையும் அறிந்துக்கொள்வதில் பிரசித்திபெற்றது. (பலத்த சிரிப்பு) ஒரு மனிதன் எந்த மொழியில் பேசினலும் அவசியமில்லை. நீங்கள் அப்பிரசங்கத்தை நன்ருக விளங்கிக் கொள்வீர்கள். நான் இப்போது எந்த மொழியில் பேசுவது? இது தான் இப்போதுள்ள முக்கிய கேள்வி. ('உர்தூ' என்று சில குரல்களும், 'ஆங்கிலம்' என்று சில குரல்களும்)

"எனக்குத் தெலுங்கு தெரியாது. எனக்குத் தமிழும் தெரியாது. எனக்குப் பாமர உர்தூ மொழி கொஞ்சம்

தெரியும் (சிரிப்பு). நான் முதலில் உர்தூவில் பேசிக் காட்டுகிறேன்.”

பின்னர் ஜனுப் ஜின்னு அவர்கள், உர்தூ மொழியில் சில நிமிஷநேரங்கள் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:—

“நீங்கள் என்பால் பேரன்பு காட்டி, வரவேற்பளித்த தற்கு, உங்களுக்கு மனமார்ந்த நன்றியறிதலை யறிவித்துக் கொள்வதற்காகவும், நான் சென்டிரல் ஸ்டேஷனில் வந்திறங்காமலும், ஊர்வலத்தில் கலந்துக் கொள்ளாமலும் உங்களுக்கு ஏமாற்ற மளித்ததற்கு வருத்தந் தெரிவித்துக் கொள்வதற்காகவுமே இப்போது உங்கள் முன் நின்று பேசுகிறேன். என்னைச் சிறப்பான முறையில் வரவேற்பதற்காக இலட்சக் கணக்கான முஸ்லிம்கள் மட்டுமின்றி, நீதிக் கட்சி முதலிய இதர கட்சியைச் சேர்ந்த முஸ்லிமல்லாத நண்பர்கள் பலரும், பிராமணரல்லாத மக்கள் பலரும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தனர். இதற்கு என் மனமார்ந்த நன்றியறிதல் உரித்தாகுக.”

இதற்குப் பின், “காயிதே ஆஜம்” அவர்கள் மீண்டும் ஆங்கிலத்தில் பேசியதாவது:—

“ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி, நான் சென்டிரல் ஸ்டேஷன் வந்து சேர முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதற்கு ஆழ்ந்து வருந்துகிறேன். இதனுல், மக்கள் அடைந்த கஷ்டத்திற்காக என்னை மன்னிப்பீர்களென நம்புகிறேன். நீங்கள் என்னை வரவேற்பதற்காக இலட்சக் கணக்கான மக்கள் பெருந் திரளாகக் கூடியிருந்ததற்கு என் மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்திக் கொள்ளுகிறேன். நீங்கள் இவ்வளவு பெருந்திரளாகக் கூடியதன் அர்த்தம், அகில இந்திய முஸ்லிம் லீக் இலட்சியத்துக்கு உங்களனைவருடையவும் அங்கீகாரத்தையும், ஆதரவையும், அனுமதியையும் அளிக்கிறீர்களென்பதேயாகும். (கரகோஷம்)

"நான் இப்போது உங்கள் முன் என் தலைமைப் பிரசங்கத்தைச் செய்வதற்கு முற்படவில்லை. நான் சமீப காலம் முதல், என் பிரசங்கங்களை எழுதி அச்சடித்து வைத்துக் கொள்ளும் வழக்கமில்லை. நான் இதற்கு முன் மயக்கமுற்று இருந்தமையால், நான் என் கருத்துகளை ஹிருதயத்தில், ஒன்று திரட்ட இயலவில்லை. ஆதலால், நான் இப்போது உங்கள் முன் என் தலைமைப் பிரசங்கத்தைச் செய்வதற்கு முற்படவில்லை.

"இன்று இரவு விஷயாலோசனைக் கமிட்டி அமைக்கப்பட்டு, அதன் கூட்டம் நடைபெறும். நாளையும், நாளை மறு தினம் மாலையும் இக் கூட்டம் நடைபெறும். 14-உ திங்களன்று காலை மகாநாடு நிகழ்ச்சி முறையில் குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பமாகும். அது சமயம் நம் முன் எதிர்பட்டுள்ள பல்வேறு பிரச்னைகளைப்பற்றி என் அபிப்பிராயத்தை (தலைமைப் பிரசங்கம்) வெளியிடுகிறேன். மீண்டும் ஒரு முறை உங்கள் நல்வரவேற்புக்காக வந்தனம் கூறுகிறேன். இப்போது நமது முஸ்லிம் லீக் காரியதரிசி, நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான், நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்"'' (பலத்த கரகோஷம்).

நவ்வாப் ஜாதா பிரசங்கம் :

பின்னர், அகில இந்திய முஸ்லிம் லீக் பொதுக் காரிய தரிசி நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான் அவர்கள் நீண்ட கரகோஷத்திடையே எழுந்து உர்தூவிலும், ஆங்கிலத்திலும் பேசியதாவது:—

"தலைவர் 'காயிதே ஆஜம்' அவர்களைப் பின்பற்றி நானும் உர்தூவிலும், ஆங்கிலத்திலுமாக நிகழ்ச்சிக் குறிப்புகளை அறிவிக்கும்படி ஆணையிடப் பட்டிருக்கிறேன். ஆகையால், அக்குறிப்பை உர்தூவிலும், ஆங்கிலத்திலும் உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். மறுமுறை உங்கள்

மாகாணத்தில், அ. இ. முஸ்லிம்லீக் மகாநாடு நடைபெறும் போது, பல மொழிகளில் பேச வேண்டிய தேவை நேரிடாமல், ஒரே மொழியில் பேசப்படுவதை நீங்கள் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில், எல்லோரும் உர்தூ மொழியைத் தெரிந்துக் கொள்வீர்களென நம்புகிறேன். இப்போது நான் உர்தூவிலும், ஆங்கிலத்திலும் பேச வேண்டியவனு யிருப்ப தாகக் கூறினேன். உர்தூ மொழியில் நான் பேசுவதையே ஆங்கிலத்திலும் சொல்லக்கூடிய அவசிய மென்ன வென்று நீங்கள் கேட்கலாம்.

"இங்கு உர்தூ மொழி யறிந்துள்ள முஸ்லிம்கள் மட்டு மல்லாமல், உர்தூ மொழியே இன்னதென் றுணராத முஸ்லி மல்லாதார் பலரும் இம்மகாநாட்டுக்கு வந்திருக்கிறூர்கள். நாம் உர்தூ மொழியில் மட்டும் பேசுவதால், இங்கு வெகு சிரமமெடுத்து விஜயம் செய்த அவர்கள், நாம் என்ன பேசு கிறேமென்பதையே உணராமல் போய் விட நேரிடுகிறது. அதனுல், அவர்களுக்கு மனதில் ஒரு வெறுப்பும், அருவரு ப்பும் ஏற்பட இடமுண்டாகிறது. எனவே, நான் உர்தூவி லும், ஆங்கிலத்திலும் பேசக் கடமைப் பட்டிருக்கிறேன்."

இதற்குப் பின் நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான் அவர்கள், மகாநாட்டின் எதிர்கால நிகழ்ச்சி முறைகளைப் பற்றிய விவரத்தைக் கூறிய பின், மாலை 4 மணிக்கு மகா நாட்டின் முதற் கூட்டம் முடிவடைந்தது.

6. மகா நாடு 2-ம் நாள்
தலைமைப் பேருரை

அகில இந்திய முஸ்லிம் லீக் 28-வது மகாநாட்டின் இரண்டாம் நாள் நடவடிக்கைகள் 14-4-41 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாயின. மகாநாட்டுக்காக முஸ்லிம் பொதுமக்களும், ஹிந்துக்களில் சிலரும் காலை 8 மணி முதலே திரள் திரளாக மகாநாட்டுப் பந்தலில் வந்து குழுமலாயினர்.

மேடை மீதமர்ந்திருந்த சுமார் 500 பேர்களில் முக்கியஸ்தர்கள் பின்வருமாறு:—

நவ்வாப் முஹம்மத் இஸ்மெயில்கான் (பாட்னு), சங்கிரிகார் (பம்பாய்), கனம் அப்துல் மதீன் சௌதரீ (அஸ்ஸாம் மந்திரி), காஜி முஹம்மத் ஈஸா (பலுச்சிஸ்தான்), நவ்வாப் ஸித்தீக் அலிகான் (நாகபுரி), ஸர்தார் அவ்ரங்கஜேப்கான், ஜியாவுத்தீன் அஹ்மத் (வடமேற் கெல்லைப்புற மாகாணம்), முஸப்பர் ஹுஸேன் (அஸ்ஸாம் மந்திரி, எஸ். எம். ஷரீப் (பாட்னு), எஸ். ஏ. ரவூப்ஷா (ம. மா.), மௌலானு ஜபரலிகான் சாஹிப், எஸ். என். ஜாப்ரீ (அலாஹாபாத்), அப்துல் ஹமீத் பதாயூனி, கனம் ஸையத் ஹுஸேன் இமாம் (பீஹார்), ஜாயா (ஸிலோன் முஸ்லிம் லீக் தலைவர்), ஸர். முஹம்மத் யூசுப் (ஐ.மா. மாஜி மந்திரி), நவ்வாப் யார்ஜங் பஹதூர் (ஹைதராபாத்), கான் சாஹிப் அப்துர் ரஹ்மான்கான் சாஹிப் (பீரார்), நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான், கனம் ஷுஹரவர்த்தி (வங்க மந்திரி), பேகம் முஹம்மத் அலி.

தலைவர்கள் ஒவ்வொருவரும், வரவேற்புக்கமிட்டித்தலைவர் ஜனப் எம். அப்துல் ஹமீத்கானவர்களால், சபையினருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர். அது சமயங்களில் கரகோஷ ஆரவாரங்கள் வெகு பலமாயிருந்தன.

தலைவர் வருகை :

சரியாக மணி 10-க்கு தலைவர் 'காயிதே ஆஜம்' ஜனப் முஹம்மத் அலி ஜின்னு அவர்கள் மகாநாட்டுப் பந்தலுக்குள் பிரவேசித்தார். அவருடன் அவரது சகோதரி மிஸ் பாத்திமா ஜின்னுவும் வந்தார். தலைவரவர்கள், பந்தலுக்குள் கால் வைத்தது முதல் அவர் மேடை மீது வந்தமரும் வரையிலும் தக்பீர் முழக்கமும், 'முஹம்மத் அலி ஜின்னு ஜிந்தாபாத்' என்ற முழக்கமும் வானைப் பிளந்தன. தலைவரவர்கள் எல்லோருக்கும் வந்தனம் செய்த பின், அ. இ.

முஸ்லிம் லீக் காரியதரிசி, நவ்வாப்ஜாதா லியாகத் அலி கான் அவர்கள் மகாநாடு ஆரம்பமாவதாக அறிவித்தார். ஜனுப் அப்துல் ஹமீத் பதாயூனி அவர்களால் கிராஅத் ஓதப்பட்டது. பின்னர் மகாநாட்டிற்கென்றே தயாரிக்கப் பட்ட உர்து கீதமும், ஸர். முஹம்மத் இக்பால் அவர் களின் 'ஹிந்துஸ்தான் ஹமாரா' என்ற கீதமும் பாடப் பெற்றன.

பின்னர் காரியதரிசி நவ்வாப்ஜாதா லியாகத் அலி கானவர்கள், 'காயிதே ஆஜம்' ஜனுப் முஹம்மத் அலி ஜின்னு அவர்களைத் தலைமைப் பிரசங்கத்தை நிகழ்த்து மாறு வேண்டிக் கொண்டார்.

தலைவர் பிரசங்கம் :

சரியாக 10-10 மணிக்குத் தலைவர் 'காயிதே ஆஜம்' முஹம்மத் அலி ஜின்னு அவர்கள், தமது தலைமைப் பிரசங் கத்தை ஆரம்பித்து, 110 நிமிஷங்கள் அதாவது 12 மணி வரை சிம்ம கர்ஜனை போன்று உருக்கமாகச் செய்தார். தலைவரின் பிரசங்க விவரம் வருமாறு:—

"அ. இ. முஸ்லிம் லீக் டெலிகேட்டுகளே !

சீமாட்டிகளே !! சீமான்களே !!!

"முதலாவதாக என் தேக சுவீனத்தைக்கருதி,எனக்கு செய்திகளும், சுகவீன நிலைமையைப் பற்றிய டெலிபோன் விசாரணைகளும் அனுப்பியவர்கள் அனைவருக்கும், உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலை அறிவித்துக் கொள்ளுகிறேன். நான் உங்கள் அனைவருக்கும் தனித் தனி யே வந்தனங் கூறிக் கொள்ள அசக்தனு யிருக்கிறேன். ஆதலால், இந்த என் தலைமைப் பிரசங்கத்தில் உங்களுக்கு நன்றி பாராட்டுகிறேன்.

5 வருஷங்களில்.......... :

"நமது உள்நாட்டுப் பிரச்னைகளுக்குக் கணக்கு வழக்கில்லை. இவைகளை யெல்லாம் போக்குவதற்காகவே நமது அ. இ. முஸ்லிம் லீக் வெகு கஷ்டப்பட்டு வேலை செய்து வருகிறது. அ. இ. முஸ்லிம் லீக் புனருத்தாரணம் செய்யப்பட்ட விஷயத்தை நீங்கள் அறிவீர்களென நான் நம்புகிறேன். அ. இ. முஸ்லிம் லீக் புனருத்தாரணம் செய்யப்பட்டு 5 வருஷமாகிறது. 1936-ம் ஆண்டில் பம்பாயில் அ. இ. முஸ்லிம் லீக் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இதை ஒரு 5 வருஷத் திட்டமாகக் கொள்ளலாம். இந்த 5 வருஷ காலத்திற்குள் முஸ்லிம் இந்தியாவை அற்புதமான விதத்தில், கட்டுப்பாடடையச் செய்து, ஒற்றுமைப் படுத்துவதில் முஸ்லிம் லீக் வெற்றி யடைந்திருக்கிறது. மொகலாய ஆட்சியின் வீழ்ச்சியிலிருந்து இதுவரை, முஸ்லிம் இந்தியா, இன்றிருப்பது போல் கட்டுப்பாடாகவும், ஒற்றுமையாகவும், அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றதாகவும் எப்போதுமிருந்தது கிடையாது.

"நாம், நமக்குச் சொந்தமானஒருகொடியை நிர்ணயித்துக் கொண்டுள்ளோம். இதுவே, முஸ்லிம் இந்தியாவின் கொடி; முஸ்லிம் உலகின் கொடியுமாகும். இது போன்றே நமக்கென ஒரு தனித்த மேடையையும் நாம் பெற்றிருக்கிறோம். இவைகளால் நமது சமுதாயம் ஒற்றுமையும், கட்டுப்பாடும் அடைந்து விட்டதென்பதை உலகினருக்கு நிரூபித்துக் காட்டினோம். நாம் நமது இலட்சியத்தை வரையறுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த இலட்சியத்தை முஸ்லிம் இந்தியா "பாகிஸ்தான்" என்று கூறுகிறது. (கரகோஷம்). இந்த திட்டம் ஒன்று இல்லாதிருந்த குறையால் முஸ்லிம் இந்தியா இதுவரை அந்தகாரத்தில் ஆழ்ந்திருந்தது. இப்போது அவர்கள் விழிப்புணர்ச்சிபெற்றுவிட்டனர்.

தென்னாட்டு முஸ்லிம்கள் தியாகம்:

"இந்த பாகிஸ்தான் திட்டத்தைப்பற்றி பிரபலப்படுத்துவதிலும், மக்களின் ஆதரவு தேடுவதிலும் தென்னிந்திய முஸ்லிம்கள் அளப்பரிய சேவைகளைச் செய்திருக்கிறார்கள். இச் சேவையை நான் என் மனதாரப் பாராட்டுகிறேன். உங்களுக்குப் பெருஞ் சிக்கல்களிருக்கின்றன. உங்கள் கஷ்டங்கள் விவரிக்க முடியாதனவாகும். அவ்வாறிருந்தும் உங்கள் சேவையின் காரணமாக மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு முன்னேற்றமடைந்து வருவது பாராட்டத் தக்கது. நான் உங்கள் மாகாணத்தின் ஒவ்வொரு ஜில்லாவுடனும் சம்பந்தம் கொண்டிருந்து வருகிறேன். நான் நேரில் சென்று சம்பாஷிக்கவில்லையாயினும், தபால்கள், தந்திகள் மூலம் அவர்களுடன் நெருங்கிய சம்பந்தம் கொண்டிருந்தே வருகிறேன். நீங்கள் முன்னேற்றமடைந்த முறை வெகு அற்புதமானது. உங்கள் சேவை முறைகளும் அற்புதமானவை. நீங்கள் மேலிருந்து கீழாக வளர்ச்சியடையவில்லை; ஆனால் கீழிருந்துமேலாக வானோங்கி வளர்ந்திருக்கிறீர்கள். இப்போது ஒரு ஆண்டுக்கு முன்னர் தான் உங்கள் வளர்ச்சி மேற்கூரையையும் பிய்த்துச் சென்று விட்டது. இவ்வளர்ச்சியினால் மாகாணம் முழுவதுமுள்ள முஸ்லிம் பொது மக்களிடையே மகத்தான ஒற்றுமையும், கட்டுப்பாடும் ஏற்பட்டு விட்டுள்ளது.

"பல பேர்கள் பெருங் கஷ்டப்பட்டு வேலை செய்திருக்கிறார்கள். நான் இப்போது உங்கள் மாகாணத்தில் உங்கள் மத்தியி லிருக்கிறேன். அதற்காக நான் உங்களைப் புகழ்ந்து கூற முன்வரவில்லை. நான் என் மனதில் பட்ட அபிப்பிராயத்தையே மனம் விட்டுச் சொல்லுகிறேன். இந்தியாவிலுள்ள மொத்த முஸ்லிம் ஜனத் தொகையினரில் 100-க்கு 7 பேர்களாயுள்ள தென்னிந்திய முஸ்லிம்கள் முஸ்லிம் லீக் கொடியின் கீழ் வளர்ச்சியடைந்ததைப் போல், இதுவரை வேறு எந்த மாகாணமும் வளர்ச்சியடை

யில்லை யென்பதைக்காண பெரும் சந்தோஷப்படுகிறேன். இது தான் சென்ற ஐந்து வருஷ காலத் திட்டமாகும்.

அடுத்த 5 வருஷத் திட்டம் :

"இப்போது இந்த 5 வருஷ காலத்தில் நாம் அ. இ. முஸ்லிம் லீக் வளர்ச்சித் துறையில், என்ன செய்திருக்கிறோமென்பதைப் பற்றிக் கவனிப்போம். இக்காலத்தில் நாம் இந்தியாவில் மட்டுமின்றி, அகில உலகத்திலுமே அ. இ. முஸ்லிம் லீக்கின் செல்வரக்கையும், கௌரவத்தையும் வளர்ச்சியடையச் செய்துவிட்டிருக்கிறோம். நமது செயல்களும், பேச்சுகளும், ஒவ்வொரு அசைவுகளும் உலக மக்களனைவர்களாலும் கூர்ந்து கவனிக்கப்படுகின்றன. இது வரையில் நமக்கு நன்மையே.

"நாம் இப்போது ஒரு மிகுந்த நெருக்கடியான நிலைமையிலிருக்கிறோமென்பதை நீங்கள் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

"நம்மை எதிர்த்து இந்தியாவிலும், அதற்கு வெளியிலும் பல்வேறு சக்திகள் வேலை செய்து வருகின்றன. ஒருவன் நன்றாகக் கஷ்டப்பட்டு வேலை செய்தாலன்றி எந்த விஷயத்திலும் வெற்றி பெற்றுவிட முடியாது. இன்று முஸ்லிம்கள் செய்யவேண்டுவதென்ன? அதிலும் இங்கு கூடியிருக்கும் டெலிகேட்டுகள் செய்ய வேண்டுவதென்ன? நீங்கள் உங்கள் எதிர்காலம்பற்றி ஆழ்ந்து சிந்தித்து, இன்னுமொரு ஐந்து வருஷத் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும். முஸ்லிம் இந்தியாவின் தேசீய வாழ்க்கையில் உள்ள பல இலாக்காக்களை அமைப்பதற்காகவே இத் திட்டம் வகுக்கப்படவேண்டுவது அவசியமாகிறது. இந்த இலாக்காக்கள் வானோங்கிய கட்டிடம் போன்ற சமுதாய வளர்ச்சியின் நான்கு தூண்கள் போன்றதாகும்.

கல்வியின் அவசியம்:

"இவைகளின் முதன்மையானது கல்வியே. ஒரு நல்ல கல்வித் திட்டத்தை வகுக்க வேண்டுவது உங்கள் கடமையாகும். அறிவும், ஆராய்ச்சியுமே ஒரு சமுதாயத்தினரை உயர்த்துவதாகும். நமது இம் மாபெரும் நாட்டில், மக்களின் பொருளாதாரத் துறையிலும், சமூக முன்னேற்றத் துறையிலும் முஸ்லிம்கள் மிக மிகப் பிற்போக்கான நிலைமையில் விடப்பட்டிருக்கிறார்கள். இதர சமூகத்தினருடன் நம் முஸ்லிம்களை ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் முஸ்லிம் சமுதாயமே பாதாளத்தில் ஆழ்ந்து போய் விட்டிருக்கிறது. உதாரணமாக சென்னையை எடுத்துக் கொள்ளுங்கள். எங்கு நோக்கினும் முஸ்லிம்கள் இரண்டே இரண்டு கைத்தொழில்களில் தான் பிரபலமடைந்திருக்கின்றனர். அவை தோல் கைத்தொழிலும், பீடி தொழிலும் தான். சுருங்கச் சொன்னால் 'சம்படா' (உர்தூவில் தோல்) வாலா, பீடி வாலாக்களே நிறைந்துள்ளனர். இவர்கள் சம்படா வாலாக்களாகவும், பீடி வாலாக்களாகவு மிருப்பதிலேயே திருப்தியடைந்து விட்டிருக்கிறார்களா? அல்லது இவர்கள் நாட்டின் இதர கைத்தொழில்கள், வர்த்தகம், போக்கு வரத்துகளிலும் முன்னேற்றமடையப் போகிறார்களாவென்று நான் கேட்கிறேன்.

அரசியல் பயிற்சி:

"அடுத்தபடியாக நாம் செய்ய வேண்டிய வேலை மிக மிக முக்கியமானது. அது என்னவெனில், முஸ்லிம்களின் அரசியல் பயிற்சியே யாகும். முஸ்லிம்கள் இதுவரை மதிக்கப்படக் கூடியவகையில் மகத்தான முன்னேற்ற மடைந்து விட்டிருக்கிறார்கள். இலட்சக் கணக்கானவர்களை முஸ்லிம் லீக் கொடியின் கீழ் சேர்த்து விட்டோம். முஸ்லிம் சமுதாயத்தினரை அரசியலில் விழிப்படையச் செய்து நமது இலட்சியங்களை வளர்ச்சி யடையச் செய்து விட்

டோம். சுயமரியாதை, சுய நிர்ணயம், கண்ணியம், சமுதாய மென்ற உணர்ச்சிகளை உண்டாக்கி விட்டோம். இனி நாம் செய்ய வேண்டுவதென்ன? நீங்களனை வரும் ஒரே கட்டுப்பாடுடன் உங்கள் இலட்சிய வெற்றிக் காக வேலை செய்ய வேண்டும் (கரகோஷம்). இதற்கு ஒரு முன் மாதிரியைக் கூறுகிறேன். முஸ்லிம் லீக்கில் சேர்க் கப்பட்ட அங்கத்தினர்க ளனைவரும் ஸோல்ஜர்களாகப் பயிற்சி செய்யப்பட வேண்டும். இவர்களுக்கு அரசியல் துறை யில் இராணுவ பயிற்சி யளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு முஸ்லிம்லீக்கினரும், ஒரு அரசியல் ஸோல்ஜராகப் பயிற்சி யளிக்கப்பட வேண்டும். இந்த அரசியல் ஸோல் ஜர்கள் தங்களுக்கென உத்தியோகஸ்தர்களை வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், இந்த உத்தியோகஸ்தர் கள் நியமிக்கப்படா விட்டால், ஸோல்ஜர்கள் நேர்வழியில் நடத்திச் செல்லப்பட மாட்டார்கள். இந்த ஸோல்ஜர் களுக்கு லெப்டினன்டுகள், காப்டன்கள், மேஜர்கள், கர்னல்கள், ஜெனரல்கள் முதலியவர்கள் அனைவரும் இருக்க வேண்டுவ தவசியம்.

நமது லட்சியம் :

"நாம் அடுத்தபடியாகச் செய்ய வேண்டிய வேலைகள் பற்றிய ஒரு கமூனுவை உங்களுக்கறிவிப்பதற்காகவே நான் இவ் விஷயங்களைக் கூறினேன். நாம் இப்போது செய்ய வேண்டிய மகத்தான வேலை என்னவெனில், இந் நாட்டில் மட்டுமில்லாமல், முழு உலகத்திலுமே வியாபித்துள்ள சகல அரசியல் தத்துவம், மொழி, இயக்கங்களில் முஸ்லிம் களை பூரணமான விதத்தில் பயிற்சி செய்ய வேண்டும். இதுவன்றி எந்த நிமிஷத்திலும் எழக் கூடிய எத்தகைய நெருக்கடியையும் எதிர்த்துச் சமாளிக்க நாம் தயாரா யிருக்க வேண்டும்.

"நான் உங்கள் முன் கூற வேண்டிய அடுத்த பிரச்னை என்னவென்றால், நாம் இப்போது நமது இலட்சியம் என்ன வென்பதை சந்தேகமற்ற வகையில் தெளிவு படுத்திவிட வேண்டும். நமது இலட்சியங்களைத் தெரிந்துக் கொள் ளாதவர்கள் பலர் இருக்கிறார்கள்; தவறாக வியாக் கியானம் செய்து கொள்ளுவோர் பலர்; எவ்வித வியாக்கியானமும் செய்து கொள்ள விரும்பாதவர்கள் பலர்; விஷயமறியாப் பாமர மக்கள் பலர் இருக்கின்றனர்; —முஸ்லிம் சமுதாயத்திலல்ல—அதுவரை ஆண்டவனுக்கு நன்றி. நமது முடிவுகளும், தீர்மானங்களும் தவறான வியாக் கியானம் செய்யப்படுவது ஆச்சரியப்படத் தக்க விஷயம். இரண்டொரு உதாரணங்களைப் பின்னால் கூறுகிறேன். இத் தவறான வியாக்கியானம் செய்யப்படாமலிருக்க வேண்டும். எந்த திறமை வாய்ந்த பகுத்தறிவுள்ள மனிதனுக்கும்— அவன் எச்சமூகத்தைச் சேர்ந்தவனா யிருப்பினும் சரி— எவ்வகைச் சந்தேகமும் இருக்கக் கூடாது. இதற்காக நமது இலட்சிய சம்பந்தமாக நமது நிலைமையைத் தெளி வாக்கி விட விரும்புகிறேன்.

பாகிஸ்தான் வேண்டும் :

"அகில இந்திய முஸ்லிம் லீக்கின் இறுதி இலட்சிய மென்ன? அதன் கொள்கைகள் என்ன? அதன் நோக்கங் கள் எவை? என்னால் சாத்தியமான அளவுக்கு இதைத் தெளிவுபடுத்துகிறேன். அகில இந்திய முஸ்லிம் லீக்கின் இலட்சியம் இது தான்.

"இந்தியாவின் வடமேற்கு, வட கிழக்குப் பிராந்தியங் களில் பூரண ஆதிக்கமும், பாதுகாப்பு, அயல்நாட்டு விவகாரங்கள், போக்குவரத்து, சுங்கம், நாணயச் செலா வணி, நாணய மாற்று முதலிய சகல விஷயங்களிலும் அதி காரமும் இருக்கக் கூடிய பூரண சுதந்திர நாடு நிர்மாணிக் கப்பட வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். அகில இந்

திய முறையில் மத்தியில் ஒரு சர்க்காரிருக்கக் கூடிய அர சியல் எவ்வகையிலும் நமக்குத் தேவையில்லை. நாம் எப்போதும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் அதை ஒரு முறை ஒப்புக் கொண்டால், முஸ்லிம்கள் இரு க்குமிடம் தெரியாமல் ஒழிக்கப்பட்டு விடுவர். நமது சுதந் திர நாடாகக் கோரப்படும் இந்தியாவின் வடகிழக்கு, வட மேற்குப் பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட வரை மத்தியில் இருக்கும் எந்த சர்க்காருக்கும், அதிகாரத்துக்கும் பணி ந்தவர்களாக நாம் ஒரு போதும் இருக்க முடியாது.

பிரிட்டிஷாரின் ஏமாற்று வித்தை:

"ஹிந்து இந்தியாவின் தலைவர்கள் நன்ருக ஏமாற்றப் பட்டுவிட்டிருக்கிருர்கள் என்பதைக் கூற வருந்துகிறேன். "கழுதை முன்பு இரண்டு சீமை முள்ளங்கிகளைக் காட்டி ஏமாற்றும்" கதை போல், பிரிட்டிஷ் சர்க்கார், ஹிந்துத் தலைவர்கள் முன்பாக, 'ஜனநாயகம்', 'இந்தியாவுக்கு ஒன்று பட்ட அரசியல்' என்ற இரண்டையும் காட்டி அவர்களை ஏமாற்றி வருகிருர்கள். ஹிந்து இந்தியாவும் அதனுல் ஏமாந்திருக்கிறது. நான் ஹிந்துத் தலைவர்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். (இதைப் பிரிட்டிஷ் சர்க் காரும் உணர்ந்தே இருக்கிருர்கள்.) அதாவது:

"முஸ்லிம்இந்தியா, ஒரு அகிலஇந்திய அரசியலுக்கோ ஒருமத்தியசர்க்கார்ஆட்சிக்கோஎக்காலும் பணிந்துவிடாது. இதைப் பிரிட்டிஷ் சர்க்கார் பூரணமாக உணர்ந்திருக்கிருர் களென்பதை நீங்கள் (ஹிந்துத் தலைவர்கள்) உணரவில்லை யாஞல், அரசியல் ஆற்றல் உங்களுக்கில்லை யென்றுதான் கூற வேண்டும். நீங்கள் அதை இழந்து விட்டீர்கள் என் பது தான் இதன் அர்த்தம்!'

"ஜனநாயகம் என்பதும், பார்லிமெண்டரி முறையான ஆட்சியென்பதும் இந்நாட்டில் ஒரு தமாஷ் கோமாளிக் கூத்தைத் தவிர வேறல்ல வென்பதைப் பிரிட்டிஷ் ராஜீய

நிபுணர்கள் அறிந்திருக்கிறார்கள். சிலர் நினைக்கிறபடி மனித சகோதரத்துவத்தி னடிப்படையிலுள்ள சர்க்காரை முஸ்லிம்கள் எதிர்க்கின்றனரென்பது இதன் அர்த்தமல்ல. இவ்வாறு கூறுபவர், ஜனநாயகம் பற்றியும், இஸ்லாத்தைப் பற்றியும் பேசுகையில், தாங்கள் என்ன பேசுகிறார்களென்பதையே உணராதவர்களா யிருக்கின்றனர்.

'ஜனநாயகம்' என்றால் என்ன? :

"ஜனநாயகம் என்றால் பெரும்பான்மை ஆட்சி. ஒரே சமுதாயம், அல்லது ஒரே தனிப்பட்ட கூட்டம் இருந்து அதற்கு பெரும்பான்மை ஆட்சி இருந்தால், அதில் அர்த்தமிருக்கிறது. ஆனால், அங்குகூட இந்த ஆட்சிமுறைதோல்வியடைந்து விட்டிருக்கிறது. ஒரு தனிச் சமுதாயம், கட்டுப்பாடான மக்கள், ஒரே மதம், ஜாதியுள்ள மக்கள் வாழும் நாட்டில் பிரதிநிதித்துவ ஆட்சிமுறை பொருத்தமானதாயிருக்கும். ஆனால், நீங்கள் உண்மையைக் கண்டறிவதற்காக சில நிமிஷங்கள் நன்றாகச் சிந்திக்க வேண்டும். இந்த விரிந்த உபகண்டத்தில் இரண்டு வெவ்வேறான சமுதாயங்கள்—இரண்டென்ன......அதற்கதிகமாகவே இருக்கின்றன—அதாவது ஹிந்து சமுதாயம், முஸ்லிம் சமுதாயம் என்றிருக்கும் நிலைமையில், இத்தகையதொரு ஆட்சி வேலைசெய்ய முடியுமா? அல்லது வெற்றி பெறுமா என்று கேட்கிறேன்.

"திராவிடஸ்தான்" :

"உங்களுடைய இப்பிரதேசத்தில் (அதாவதுசென்னை மாகாணத்தில்) இன்னுமொரு சமுதாயம்இருக்கிறது. அதாவது,திராவிடர்கள். இந்தப்பிரதேசம் உண்மையில்திராவிடஸ்தான் ஆகும். பிராமண உயர் வகுப்பாளர்களெனக் கூறிக்கொள்ளும்(மாகாணமக்களில்)3 சதவிகிதத்தினர்,தங்களின் திறமையான நடை முறைகளாலும், தாங்கள் கற்ற தந்திரங்களாலும் பெரும்பான்மை யடைந்திருப்பதை சற்று சிந்

இத்துப் பாருங்கள். இது ஜனநாயகமா? அல்லது கோமாளிக் கூத்தா? எனக் கேட்கிறேன். ஆதலால், பிராமணரல்லாதாருக்கு என் பூரண அனுதாபத்தையும், ஆதரவையும் அளிக்கிறேன். நான் அவர்களுக்கு ஒரு வார்த்தை கூறுகிறேன். அதென்னவெனில்:

"நீங்கள் உங்கள் இலட்சியத்தை யடைவதற்குரிய ஒரேவழி இதுதான். உங்கள் சொந்த கலை, சொந்த மொழி—ஹிந்தி இந்த மாகாணத்தில் தலையெடுக்க முடியாமல் ஓடிவிட்டதைப் பற்றி ஆண்டவனுக்கு நன்றி—உங்கள் சொந்த பழக்க வழக்கங்களின்படி உங்கள் இலட்சியத்தை நாடி வேலை செய்யுங்கள். நான் உங்களுக்கு சகல வகையிலும் அனுதாபம் அளிக்கிறேன். நீங்கள் திராவிட ஸ்தானை நிர்மாணிப்பதில் என்னால் சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்கிறேன். இம் மாகாணத்தில் வதியும் 7 சத விகித இந்திய முஸ்லிம் சமுதாயத்தினர், சமத்துவம், நீதி, நேர்மை முதலியவைகளின் அடிப்படையின் கீழ் உங்களுடன் நட்பாக இருந்து வருவார்கள்.'

சிறுபான்மைப் பாதுகாப்பு:

"அடுத்தபடியாகச் 'சிறுபான்மை யினருக்குப் பாதுகாப்பு' என்ற விஷயத்தை எடுத்துக் கொள்வோம். எங்கெங்கு சிறுபான்மையினர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் சிறுபான்மையினர்களுக்குப் பாதுகாப் பளிக்கப்பட வேண்டும். சிறுபான்மையினர்களிடையே ஒரு பாதுகாப் புணர்ச்சியையும், நம்பிக்கையையும் உண்டாக்காமல், எந்த சர்க்காரும் வெற்றிகரமாக நடைபெற முடியாதென்று நான் எப்போதும் நம்பி வந்திருக்கிறேன், எனது இந்த நம்பிக்கை சரியான தென்றே நினைக்கிறேன். எந்த சர்க்காரும், அவர்களுடைய இலட்சியங்களும், வேலைத் திட்டங்களும் நேர்மை யற்றும், அநீதியாகவும், சிறுபான்மையினரைக் கொடுமைப் படுத்துவதாகவு மிருந்தால் வெற்றி பெற முடி

யாது. பிரதிநிதித்துவ முறையான சர்க்கார் வெற்றிபெற வேண்டுமானால், சிறுபான்மையினர், தாங்கள் பாதுகாப்பாக வும், நியாயமாகவும் நடத்தப்படுகின்றன ரென்பதை யுணர வேண்டும். இந்த விஷயத்தில், நாம் உலகிலுள்ள எந்த நாக ரிக நாட்டுக்கும் பின்னணியிலோ, பிற்போக்கிலோ இருக்க விரும்பவில்லை. நமது பழக்க வழக்கங்களின்படியும், திட்டப் படியும், இஸ்லாத்தின் போதனைப்படியும் நாம் நடந்துக் கொள்வதில், நமது சொந்தப் பிரதேசத்திலுள்ள சிறு பான்மையினர், தாங்கள் நீதமாகவும், நியாயமாகவும் நடத் தப்படுவதை மட்டுமின்றி, தாராளமாகவும் நடத்தப்படு வதை யுணர்வார்கள் (கரகோஷம்). நாம் கதை பேசி ஏமாற்றவில்லை. பேரம் பேசுவதில் நமக்கு நம்பிக்கையில்லை. செயல்! செயல்!! செயலில் தான் நாம் நம்பிக்கை கொண்டி ருக்கிறோம்; அரசியல் தன்மையில் நாம் நம்பிக்கை வைத்தி ருக்கிறோம். பிரத்தியட்ச அரசியலில் தான் நமக்கு நம் பிக்கை யிருக்கிறது.

முஸ்லிம் லீக் வேலைத் திட்டம் :

"இப்போது முஸ்லிம் லீக் வேலைத் திட்டமென்ன வென்பது பற்றி விவரிக்க முற்படுகிறேன். முஸ்லிம் லீக் கின் வேலைத் திட்டம் ஏற்கெனவே வெகு தெளிவாக விளக்கப்பட்டு விட்டிருக்கிறது. ஆனால், அதை இந்நாட்டி லுள்ள சில மக்களுக்கு—குறிப்பாக ஹிந்துப் பத்திரிகை களுக்கு—அதையே மீண்டும் மீண்டும் கூற வேண்டுவது அவசியமா யிருக்கிறது.

"முஸ்லிம் லீக்கின் இலட்சியம், முஸ்லிம் இந்தியா ஒரு தனிச் சுதந்திர சமுதாயமென்ற அடிப்படையின் கீழ் வகுக்கப்பட்டதாகும். இந்த சமுதாய உணர்ச்சியையோ, தேசியத் தன்மையையோ, கட்டுப்பாட்டையோ, மறைப்ப தற்காகச் செய்யப்படும் எந்த முயற்சியும் முஸ்லிம்களால் எதிர்க்கப்படும். இது மாத்திரமல்ல; இவ்வாறு முயற்சிப் பது அறிவீனமாகும்.

"இந்த விரிந்த உபகண்டத்தில் நாங்கள் ஒரு சுதந்திர சமுதாயத்தினரென்ற அந்தஸ்தையும், ஒரு சுதந்திர நாட்டையும் ஸ்தாபிக்கத் தீர்மானித்து விட்டோம்.

முட்டுக்கட்டைப் பிரச்னை :

"சமத்துவம், சகோதரத்துவம், தன்னம்பிக்கை என்ற அடிப்படையின் கீழ் இந்நாட்டு மக்களிடையே நல்லுணர்ச்சியையும், பரஸ்பர ஒற்றுமையையும் வளர்ச்சி யடையச் செய்ய வேண்டுமென்பதே எங்கள் இலட்சியம். இதுதான் முஸ்லிம் லீக்கின் பிரதம கொள்கை. இதர மக்களுடனும், கட்சிகளுடனும் சமுதாய நாடுகளுடனும் ஒப்பந்தங்கள் செய்துக் கொள்வதாலும், ஒருவருடைய உரிமைகள் இன்னொருவர் மதிப்பதாக வாக்களித்துக்கொண்டு, ஒரே குடும்பத்தினரைப் போன்று வாழ்வதாலும் தான் இவ்விஷயம் சாத்தியமாக முடியும். ஒருவர் மீது மற்றொருவர் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற ஒரு சுயநல ஆவல் ஒழிய வேண்டும். இது எவ்வளவு சீக்கிரத்தில் ஒழிகிறதோ, அவ்வளவு சீக்கிரத்தில் இந்தியாவின் பிரச்னைகள் தீர்ந்து விடுவது சாத்தியமாகும்.

"இன்று நம்மைக் கஷ்டப்படுத்தும் அடுத்த பிரச்னை என்னவெனில், முட்டுக்கட்டை என்பதே. இதற்குப் பொறுப்பாளி யாரென்பதைக் கண்டு பிடிப்பதற்காக இவ்விஷயத்தை சற்று ஆராய்வோம். நம் நாட்டிலுள்ள சங்கடம் இதுதான். நம் நாட்டு மக்கள் பட்சபாத மற்றவர்கள் என்று கூறிக்கொள்ளுகிருர்களேயன்றி, தங்கள் மனம் விட்டுப் பேசவும், இதர கட்சிகளை வெளிப்படையாகக் கண்டனம் செய்யவும் தைரியமற்றவர்களா யிருக்கிருர்கள். ஒரு கட்சி இன்னொரு கட்சியைக் குறை கூறுவதை நான் அறிவேன். ஆனல், அதற்கும் ஒரு எல்லையுண்டு.

சமஷ்டி ஒத்திவைப்பு :

"புத்தகப் பிரகடனம் செய்யப்பட்டது முதல்—அதை

நாம் அங்கீகரித்தோமோ, இல்லையோ; அதை விரும்பினாலும் விரும்பா விட்டாலும்-நாம்யுத்தத்தில்ஈடுபெட்டவர்களாகவே செய்யப்பட்டு விட்டோம் தினந்தோறும் நடைபெறும் சம்பவங்கள் நமக்குத் தெரியும். இதிலிருந்து நம் நாட்டின் அவசரத் தேவைகள் எவை யென்பதுபற்றி பூரணமாக உணர்ந்துக் கொண்டிருக்கிறோம். நம் நாட்டின் பாதுகாப்பு, நம் வீடுகளின் பாதுகாப்பு முதலிய விஷயங்களை நாம் அறிந்தேயிருக்கிறோம். இவை எங்கள் பூரணமான கவனத்தைக் கவர்ந்துக் கொண்டிருக்கின்றன. யுத்தம் ஆரம்பமானது முதல், நமது நிலைமையை நாம் தெளிவு படுத்தி விட்டிருக்கிறோம். இது நான் மட்டும் கூறுவதல்ல. அ. இ. முஸ்லிம் லீக்கின் காரியக் கமிட்டி, நிர்வாக சபை, முழு மகாநாடு ஆகியவை யனைத்தும் இதையே கூறுகின்றன. யுத்தம் ஆரம்பமானவுடன்நமக்குக் கிடைத்தகெட்டசெய்திகளினூடே இருக்கும் ஒரு நல்ல செய்தி என்னவெனில், 1935ஆம் இந்திய சர்க்கார் சட்டத்தில் பொதிந்துள்ள இந்திய சமஷ்டித் திட்டத்தைப் பிரிட்டிஷ் சர்க்கார் ஒத்திவைக்க முடிவு செய்து விட்டனரென்பதே. (கரகோஷம்)

ஒழிந்தது சமஷ்டி :

"இது ஒரு "ஒத்தி வைப்பு" மட்டும் தானென்பதை நன்ருக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நமது பிரிட்டிஷ் நண்பர்கள், ராஜதந்திரத்தில் எவ்வளவு பேர் போனவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆதலால், வெறும ஒத்திவைப்பு மட்டும் போதாதென்பதை நாங்கள் அறிந்தோம். ஏனெனில், எது ஒத்தி வைக்கப்பட்டதோ, அதே விஷயம் மீண்டும் எப்போதாவது நிர்மாணிக்கப்படக் கூடும். ஆதலால், நமது முதன்மையானதும், முக்கியமானதுமான கோரிக்கை,

"இத் திட்டம் ஒத்தி வைக்கப்படுவது மட்டுமின்றி அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்"

"என்பதே யாகும். இதற்குப் பின் நீண்ட கடிதப் போக்கு வரத்துகளும், பேட்டிகளும் நடைபெற்றன. பிறகு கடைசியாக இந்தியாவின் அரசியல் பிரச்னை முழுமையும், 1935ஆம் இந்திய சர்க்கார் சட்டத்தின் கொள்கைகள், காரணங்கள் முதலியவைகளும் அடியோடு புனராலோசனை செய்யப்படுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்தனர். இது ஒரு பெரும் நிவாரணமென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், இந்த சட்டத்தின் சமஷ்டிப் பகுதியைத் தான், அதன் ஆரம்ப காலம் முதல் முஸ்லிம் இந்தியா எதிர்த்துப் போரிட்டு வந்திருக்கிறது.

காங்கிரஸ் யார்?

"நாம் பிரிட்டிஷ் சர்க்கார் முன் அறிவித்துக்கொண்ட அடுத்த விஷயம் என்ன? நாம் மற்றொரு விஷயத்தைப் பற்றி அச்சம் கொண்டிருந்தோம். அது சமயம் நாம் எல்லா முயற்சிகளைச் செய்து வந்த போதிலும், முஸ்லிம் லீக், கட்டுப்பாட்டிலும், ஒற்றுமையிலும் காங்கிரஸைப் போலிருந்திருக்கவில்லை யென்பதை நீங்களனைவரும் அறிவீர்கள். காங்கிரஸ் என்பது, ஹிந்துக்களின் கட்டுப்பாடான ஒரு ஸ்தாபனத்தைவிட வேறல்ல. ஹிந்து மகாசபை, அ. இ. ஹிந்து லீக், மிதவாத ஸ்தாபனம் முதலிய இதர கிளை ஸ்தாபனங்கள், 'பச்சாக்'கள் (குழந்தை, குஞ்சுகள்) எல்லாம் ஒன்றுதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவையெல்லாம் காங்கிரஸின் செயல்களனைத்தையும் ஆதரிக்கின்றன என்ற முறையில் அவைகளனைத்தும் ஒன்று என்று கூறவில்லை. ஆனால், இந்தியா முழுமையிலுமுள்ள உயர் வகுப்பு ஹிந்துக்களுக்குப் பிரதிநிதித்துவமுள்ள சபை ஒன்றிருக்குமானால், அது காங்கிரஸ் சபை தான். இந்த ஹிந்து ஸ்தாபனம், இன்றைய யுத்தம் ஆரம்பமாகட்டுமென்று நீண்ட நாட்களாகக் காத்துக் கொண்டிருந்ததென்பதை நாம் அறிவோம்,

"உண்மையில், இந்த யுத்தம் ஆரம்பமாவதற்கு ஓராண்டுக்கு முன், அதாவது யுத்தம் ஏற்படுமென்ற அறிகுறிகள் காணப்பட்ட சமயத்தில், காங்கிரஸ் காரியக் கமிட்டி டில்லியில் கூடி நாள் கணக்கில் ஆலோசனை செய்தது. ஏனெனில் பிரிட்டிஷ் சர்க்காரை வற்புறுத்தி தங்கள் வசப்படுத்துவதற்கேற்ற சமயம் அது தானென்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் விரும்புவதை பெற்றுக் கொள்ளக் கூடிய சமயமும் அதுதான். இந்த மகத்தான ஸ்தாபனம் காலம் வரட்டுமெனத் காத்திருந்த தென்பதை நாம் அறிந்தோம். ஆதலால், இந்தியாவின் அரசியல் சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்கார், தங்கள் நிலைமையைத் தெளிவாக்கிவிட வேண்டுமெனக் கோரினோம். இந்திய முஸ்லிம்களின் அங்கீகாரமும், சம்மதமுமின்றி எந்த அரசியல் — இடைக்கால அல்லது முடிவான—மாறுதலும் செய்யப்படக் கூடாதெனப் பிரிட்டிஷ் சர்க்காரிடம் கோரிக் கொண்டோம்.

அரசியலில் சமத்துவ பங்கு :

"இதன் சம்பந்தமாக நீண்ட கடிதப் போக்குவரத்துகளும், பேட்டிகளும் நடைபெற்ற பிறகு, ஆகஸ்டு மாதம் 8-உ யன்று மே. த. வைஸிராயின் அறிக்கையும், அதை ஆதரித்து ஆகஸ்டு மீ 14-உ யன்று இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரியின் அறிக்கையும் வெளியாயின. நமது இக் கோரிக்கை இந்திய 9 கோடி முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்பதைத் தவிர வேறில்லை. பிரிட்டிஷ் சர்க்கார், காங்கிரஸோடு கைகோர்த்துக் கொண்டு, அவர்கள் ஒப்புக் கொள்ளக் கூடியதாக வகுக்கப்படும் ஒரு திட்டம், முஸ்லிம்களுக்குள் திணிக்கப்படுவதை முஸ்லிம்கள் ஒப்புக் கொள்ளுவரென எந்த நியாய புத்தியோ, பகுத்தறிவோ உள்ள காங்கிரஸாவது அல்லது ஹிந்துக்களாவது கருத முடியுமா எனக் கேட்கிறேன். நாம் இவ்வாறு கூறுவது ஜனப் ஜின்னாவுக்கும், முஸ்லிம் லீக்குக்கும் அதிகாரமளித்து விட்டதைப் போலிருப்பதா

கக் கூறப்பட்டது. இது பைத்தியக்காரத்தனமான பேச்சு. இது நமக்கு அதிகாரமளித்து விட்டதாக ஆகி விடாது. முஸ்லிம்களின் அங்கீகாரமும், சம்மதமுமின்றி இந்தியாவுக்கு ஒரு அரசியல் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பது தான் எங்களுடைய உட்கருத்து. ஒரு அரசியலில் நாங்களும் பங்குடையவர்களென்பது ஒப்புக் கொள்ளப் பட வேண்டுமென்றே நாங்கள் கோருகிறோம். இது முற்றிலும் நியாயமான கோரிக்கை யென்பதை நான் இங்கு கூற வேண்டுவதில்லை. நாம் ஒரு ஒப்பந்தம் செய்துக் கொள்ள வேண்டுமெனப் பிரிட்டிஷ் சர்க்கார் கூறினர். இது முற்றும் நியாயமே. முஸ்லிம் லீக்குடன் மட்டும் கலந்தாலோசித்துக் கொண்டு, பிரிட்டிஷ் சர்க்கார் வகுக்கும் ஒரு அரசியலை காங்கிரஸ் மட்டும் எவ்வாறு அங்கீகரித்துக் கொள்ளும்?

யுத்தம்பற்றி முஸ்லிம் லீக்:

“சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் யுத்த சம்பந்தமாக எங்கள் நோக்கமென்ன வென்பதுபற்றி நாங்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்கு—எங்களுக்குப் பிரிட்டிஷ் சர்க்காரல்ல—அறிவித்தோம். காங்கிரஸும், சில காங்கிரஸ் வாலாக்களும், முஸ்லிம்கள் ஏகாதிபத்திய வெறி பிடித்தவர்களெனக் கூறினர். ஒரு சமயம் தேசீய வாதியாக இருந்த நான், தலைமைப் பதவியை விரும்பி வகுப்புவாதியாகி விட்டதாகக் கூறப்பட்டது. நான் புதுப் புது ஆலோசனைகளைப் பொதுமக்களிடம் கூற முற்படும் போதெல்லாம், ஹிந்துப் பத்திரிகைகள், “ஜின்னாவின் தூஷணை”, “முஸ்லிம் லீக்கின் நிந்தனை” என்றெல்லாம் தலைப்புகளிட்டு விஷயங்களை வெளியிடுகின்றன. இந்தத் தொத்துநோய் மனப்பான்மை கொண்டவர்கள் விஷயத்தில் நான் என்ன செய்வதென்பது தெரியவில்லை.

“பம்பாயில் 1940 ஜூ ஜூன்மீ” த்தில் அ. இ. முஸ்லிம் லீக் கோரிக்கொண்டது வருமாறு:—

"இப்பொழுது உலகில் பெருத்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நாட்டைப் பாதுகாக்க இந்தியர் ஒவ்வொருவரும் பலமாக முயற்சி செய்ய வேண்டுவது அத்தியாவசியம். எத்தகைய நெருக்கடியையும் சமாளிக்கக் கூடிய வகையில் ஒழுங்கான முறையில் நாட்டை தயார் படுத்துமாறு காரியக் கமிட்டி இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ளுகிறது. மே. த. வைஸ்ராயும், இந்தியச் சேனாதிபதியும், மாகாண கவர்னர்களில் சிலரும் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் இந்தியப் பாதுகாப்பு சம்பந்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் யோசனைகள் நிலைமையைச் சமாளிப்பதற்குப் போதுமானவையல்ல என்பதை கமிட்டி குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஆகவே யுத்த ஏற்பாடுகளைத் தீவிரமாக நடத்தவும், இந்தியப் பாதுகாப்பு விஷயத்தில் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காகவும் வேண்டி நாட்டின் பலமனைத்தையும் ஒன்று திரட்ட வழி காண்பதற்காக வைஸ்ராயுடன் கடிதப் போக்குவரத்து நடத்துமாறு அ. இ. முஸ்லிம் லீக் தலைவருக்கு இக்கமிட்டி அதிகாரமளிக்கிறது.

"மாகாணத் துறையில் மட்டுமின்றி அகில இந்திய முறையில் ஒத்துழைக்க கவர்ன்மெண்டுக்கும், லீக்குக்கும் நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் பங்கெடுத்துக் கொள்ள விரும்பும் மற்ற கட்சிகளுக்குமிடையே திருப்திகரமான சமரஸம் ஏதாவது ஏற்பட்டாலொழிய தற்போதைய அபாயகரமான நிலையில் உண்மையான நோக்கம் எதுவும் கைகூடாமல் போய்விடும். நாடு மிகுந்த ஆபத்தான நிலைமையிலிருப்பதால், இப்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ள முறையில் அமைக்கக் கூடிய மாகாண ஜில்லா யுத்தக் கமிட்டிகளில் முஸ்லிம்களும், மற்றவர்களும் சேருவதால் உண்மையான காரியம் ஈடேறுமென்று கமிட்டி அபிப்பிராயப்படுகிறது."

வைஸிராய்க்கு மகஜர் :

"நான் இத்தீர்மானத்தையும், ஒரு மகஜரையும் 1941ஷு ஜுலை மாதத்தில் மே. த. வைஸிராயவர்களிடம் சமர்ப்பித்தேன். அந்த மகஜர் விவரம் வருமாறு:—

"இந்தியாவைப் பிரித்து வடமேற்கிலும் கிழக்கிலும் தனி முஸ்லிம் சர்க்கார்கள் ஏற்படுத்துவது சமபந்தமான லாகூர் தீர்மானத்தின் திட்டங்களுக்கு விரோதமான எத்தகைய பிரகடனத்தையோ அறிக்கையையோ மன்னர் சர்க்கார் வெளியிடலாகாது.

"முஸ்லிம் இந்தியாவின் அநுமதியில்லாமல் எந்த வித அரசியலையும் ஏற்படுத்துவதில்லை யென்று பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய முஸ்லிம்களுக்கு திட்டமான வாக்குறுதியளிக்க வேண்டும்.

"ஐரோப்பாவில் நிகழும் துரிதமான மாறுதல்களை முன்னிட்டு உள்நாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் காப்பாற்றுவதற்கும் வெளி ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கும் யுத்த முயற்சிகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்பது உணரணப்படுகிறது.

"மத்திய சர்க்கார்களிலும், மாகாண சர்க்கார்களிலும் முஸ்லிம்களை சமத்துவப் பங்குள்ள உரிமையாளர்களாகக் கருத பிரிட்டிஷ் சர்க்கார் தயாராயிருந்தால் தான் இது சாத்தியமாகும். அதாவது மாகாண சர்க்கார்களிலும், மத்திய சர்க்காரிலும் இந்திய முஸ்லிம்களுக்கு அதிகாரத்தில் சம பாகம் வழங்கப்பட வேண்டும்."

நிர்வாக சபை விஸ்தரிப்பு :

"சர்க்காரில் முஸ்லிம்களுக்குச் சமபங்கிருக்க வேண்டுமென்ற நம் கோரிக்கையை முன்னிட்டு, மே. த. வைஸிராய் நிர்வாக சபை, இன்றைய அரசியல் சட்டங்கள்படி

விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றும், இந்த அதிகத் தொகை அங்கத்தினர்கள் இன்னும் ஆலோசனைக்குப் பின் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும் ஆலோசனை கூறினோம். ஆனால் காங்கிரஸ் அந்நிர்வாக சபையில் பதவி ஏற்க முன் வந்தால், ஹிந்துப் பிரதிநிதிகள் இருக்கும் அதே அளவிற்கு முஸ்லிம் லீக்கினரும் ஷெ விஸ்தரிப்பு நிர்வாக சபையில் நியமிக்கப்பட வேண்டுமென்று கோரிக் கொள்ளப்பட்டது. அவ்வாறு ஷெ நிர்வாக சபையில் காங்கிரஸ் பொறுப்பேற்க முன்வராவிட்டால், முஸ்லிம்லீக்கே பிரதம பொறுப்பையும் வகிக்கவேண்டி நேரிடுமாதலால், அதற்குப் பெரும்பான்மை இருந்துவர வேண்டும்.

"இந்திய மாகாணங்களைப் பொறுத்தவரை, இந்திய சர்க்கார் சட்டம் 93-வது பிரிவுப்படியான ஆட்சி நடைபெறும் மாகாணங்களில் உத்தியோகப்பற்றில்லாத ஆலோசகர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், இந்த ஆலோசகர்களின் தொகை மேற்கொண்டு ஆலோசனை செய்யப்பட்ட பின்பே நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும், இந்த உத்தியோகப்பற்றில்லாத ஆலோசகர்களில் பெரும்பாலார் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவமுள்ளவர்களாகவே இருக்க வேண்டுமென்றும் கோரினோம். ஒரு கூட்டு சர்க்கார் அமைக்கப்படுவது சாத்தியமாயிருக்கும் மாகாணங்களில், சம்பந்தப்பட்ட கட்சிகள், ஒரு ஒப்பந்தத்தின் மூலம் நிலைமையை சீர்படுத்திக் கொண்டு, கூட்டு சர்க்காரை அமைக்கலாம்."

"இதுவன்றி இந்திய சமஸ்தான மன்னர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்கக் கூடிய வகையில் ஒரு யுத்த சபை அமைக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கோரிக் கொண்டோம்.

"எங்களுடைய மேற்கண்ட மகஜரில் எங்கேயாவது, "இப்போதே பாகிஸ்தான் கொடுக்கப்பட வேண்டும்"

என்று கூறியிருக்கிறோமா? லாகூர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது 1940ஆம் மார்ச்சு மாதத்தில் ஆகும். மேற்கூறப் பட்ட மகஜர் சமர்ப்பிக்கப்பட்ட மாதம் (1940ஆம்) ஜூலை அவ்வாறிருக்க, நாங்கள் எங்களுடைய மகஜரில் எங்கும் பாகிஸ்தானைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. இதற்குக் காரணம் என்ன? நான் இக்காரணத்தை கூறுவதற்கு முன் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். இந்த சமயத்தில் "பாகிஸ்தான் ஒத்திவைக்கப்பட்டது" என்றும், "பாகிஸ்தான் அடியோடு புறக்கணிக்கப்பட்டது" என்றும் பல செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாகக் காற்றில் அலை மோதின. இது ஆழந் தெரியாமல் சேற்றுப் பள்ளத்தில் காலை விட்டுக் கொண்டவர்கள் கூறிய கூற்றாகும். ஒரு கட்சி என்ற முறையில், நம்முடைய கொள்கையில் எப்போதும் மாறாத நம் மீதும் பழி சுமத்துவதற்காகவே இவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள். இவர்கள் எல்லாம், "நீங்கள் பெரும் தவறிழைத்து விட்டீர்கள், நீங்கள் எங்களுடன் பேச முன் வாருங்கள்"—என்று நம்மிடம் ஏன் ஸ்பஷ்டமாகவும், கண்ணியமாகவும் நேரில் கேட்கக் கூடாது?

லண்டன் 'டைம்ஸ்' விஷமம் :

"இவ்வித விபரீதப் பிரசாரங்கள், இந்நாட்டு மக்களிடையிலும், பத்திரிகைகளிலும் மாத்திரம் செய்யப்படவில்லை. இப்பிரசாரத்தால், பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூட தவறான வழியில் நடத்திச் செல்லப்படுகின்றன வென்பதைக் காணப் பெரும் ஆச்சரியமடைகிறேன். லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை, தனது ஏப்ரல் முதல் தேதி இதழில் என்ன கூறுகிறதென்பதைக் கவனியுங்கள். அன்றைய தினம் ஒரு 'ஏமாந்த முட்டாள்கள் தினம்' ஆகும். ஆதலால் அப் பத்திரிகையும் "ஏமாந்த முட்டாள் தன"மாகவே வரைந்திருக்கிறது (சிரிப்பு). லண்டன் 'டைம்ஸ்' பின்வருமாறு எழுதுகிறது :—

"இந்த யோசனைகளை (பம்பாய் அநாமதேயக் கட்சி யின் யோசனைகள்) பல விடங்களில் எதிர்த்தாலும் ராஜீய நிலையை மீண்டும் பரிசீலனை செய்து நெருக்கடியைத் தீர்க்க வழி தேட அதனுல் வசதி ஏற்படுகிறது என்றே பத்திரி கைகள் பொதுவாக எழுதுகின்றன.

"இந்திய சட்டசபையில் ஜனுப் ஜின்னு பேசுகையில் யுத்த முடிவுக்குப் பிறகாவது தமது பிரிவினைத் திட்டத்தை ஆதரிப்பதாக சர்க்கார் உறுதி கூறும் பட்சத்தில் முஸ்லிம் லீக் நிருவாக சபையைத் திருத்தி யமைக்கும் விஷயத்தில் கலந்துழைப்பதாகக் குறிப்பிட்டார். இவ்விதம் செய்தால் இந்தியாவிலுள்ள பிரபல கட்சிகளிரண்டுக்கு மிடையே தற் காலிக மாகவாவது ஒரு ஒப்பந்தம் ஏற்பட வசதி ஏற் படும்."

"இது பெரும் ஏமாற்றமான ஒரு அபிப்பிராயம் (கர கோஷம்).

பாகிஸ்தானை வற்புறுத்தாததேன்?:

"இப்போது, நாம் ஏன் பாகிஸ்தான்பற்றி பிரிட்டிஷா ரிடம் அப்போதே வற்புறுத்தவில்லை என்றதன் காரணங் களை விளக்க முற்படுகிறேன். அதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதாவது:—

"பிரிட்டிஷ் சர்க்கார் இருப்பதா? இறப்பதா? என்ற போராட்டத்தில் தங்களின் உயிர்களுக்கே மன்றாடி ஈடுபட் டிருக்கும் நிலைமையில், நாம் பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தொந்தரவளிக்க விரும்பவில்லை. (கரகோஷம்) இதன் காரணமாகவே தான், சந்தர்ப்பங்கள் அனுமதித்த உட னுவது அல்லது யுத்தம் தீர்ந்த பின்னராவது இந்திய அரசியல் பிரச்னை முழுவதும் அடியோடு மீண்டும் பரிசிலனை செய்யப்பட வேண்டுமென நாங்கள் கூறினேம்.

"எங்களுடைய இச்செயலை பிரிட்டிஷ் சர்க்கார் கௌரவித்து, சந்தோஷமடைவதற்குப் பதிலாக, பிரிட்டிஷ் பத்திரிகைகள், காங்கிரஸ், ஹிந்து பிரசாரங்களில் மதிமயக்கம் கொண்டு அவைகளின் பாட்டுக்குத் தாளம் போட்டு வருகின்றன ("வெட்கம்! வெட்கம்!" என்ற கோஷம்). இதற்குப் பொறுப்பாளி யார்? லின்லித்கோ பிரபுவா? அல்லது இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரியா? அல்லது மாட்சி மிக்க மன்னர்பிரான் சர்க்காரா? என்பது தெரியவில்லை.

"இந்தியாவில் பிரிட்டிஷ்சர்க்கார் அனுஷ்டித்து வரும் பொருத்தமற்ற, பலஹீனமான, பிற்போக்கான கொள்கை, ஐரோப்பாவிலிருப்பதைவிட பெரும் நாசகரமான தென்பதை நிரூபித்துவிடுமென நான் மீண்டுமொரு முறை பிரிட்டிஷ் சர்க்காருக்கு இம் மேடைமீதிருந்து அழுத்தமாகக் கூற விரும்புகிறேன்.

"நிகழ்ச்சி சம்பவங்கள் தினசரி வேகமாகிக் கொண்டு வருகிறதென்பதையும், தேசப் படங்கள் மாற்றப்பட்டு வருகின்றனவென்பதையும் இவர்கள் உணர முடியவில்லையா? ஐரோப்பாவில் என்ன நடக்கிறதென்பதைப் பாருங்கள். அச்சு வல்லரசுகள் என்ன செய்கின்றனவென்பதைக் கவனியுங்கள். எல்லாம் செயல்கள்! செயல்கள் மயமாகவே காணப்படுகின்றன. பிரிட்டிஷ் சர்க்கார் என்ன செய்கிறது? சமாதானம், பலவீனம், சோம்பிக் கிடத்தல் இவைகள் தான்.

பிரிட்டிஷார் செய்யப் போவதென்ன? :

"இந்த சமயத்தில் யூகோஸ்லாவியா நிகழ்ச்சிகளைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஜெர்மானியர்கள் ஐக்ரீப்பை (இது யூகோவில் குரோஷியா மாகாணத்தின் ஒரு பகுதி)க் கைப்பற்றிய பிறகு, அம் மாகாணத்தையே சுதந்திர நாடாகச் செய்துவிட்டதாக ஜெர்மன் சர்க்கார் செய்தி

ஸ்தாபனம் அறிவிக்கிறது, எல்லா உத்தியோகஸ்தர்களும், இராணுவத்தினரும், இந்தப் புதிய சுதந்திர நாட்டில் ராஜ விஸ்வாசப் பிரமாணம் செய்துக் கொள்ளும்படி குரோட் ஜெனரல் கட்டளையிட்டார். யூகோஸ்லாவியாவில் கிரோட்டுகள், ஸ்லோவன்கள், ஸெர்பியா ஆகிய பல ஜாதியினர் வசிக்கிறார்கள். அவர்களின் நிலைமை ஏறக்குறைய இந்தியாவிலுள்ள நமது நிலைமையான —'திராவிடர்களின் திராவிடஸ்தான், முஸ்லிம்களின் பாகிஸ்தான், ஹிந்துக்களின் ஹிந்துஸ்தான்' - என்பதை ஒத்ததுதான். இது ஒரு மகத்தான உபகண்டம். இதிலுள்ள தற்போதையகேள்விஎன்னவெனில்,

"பிரிட்டிஷ் சர்க்காரே நேர்முகமாக நியாயம் வழங்கப் போகிறார்களா? அல்லது வேறு யாராவது வந்து அக்காரியத்தைச் செய்யும் வரை காத்திருக்கப் போகிறார்களா?" (கரகோஷம்) என்பது தான்.

காங்கிரஸின் சட்டமறுப்பு ஏன்?:

"அடுத்த படியாகக் காங்கிரஸ் என்ன கோருகிறதென்பதைக் கவனிப்போம். காங்கிரஸ் ஏதோ ஒரு முடிவுப்படி நடந்து வருகிறது. இதைப்பற்றி எவருடைய மனதிலும் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

"காங்கிரஸ் சட்டமறுப்பின் பிரதம கமாண்டரும், ஜெனரலுமான காந்திஜீ, பேச்சு சுதந்திரத்திற்காக சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்திருக்கிறாரென்று நீங்கள் கருதுகிறீர்களா?"

என பகுத்தறிவு கொஞ்சமாவது உள்ள மனிதர்களை நான் கேட்கிறேன் ('இல்லை, இல்லை' என்ற குரல்கள்) காங்கிரஸ் வற்புறுத்தும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையிலிருப்பதாகக் காணப்படும் பிரிட்டிஷ் சர்க்காரை ஏமாற்றித் தங்கள் கோரிக்கையை பெற்றுக் கொள்வதற்காகக் காங்கிரஸ் இதனை ஒராயுதமாக உபயோகிக்கிற

தென நான் கூறுகிறேன். இதனை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா? (ஆம்! ஆம்! என்ற குரல்கள்)

காங்கிரஸின் கோரிக்கைகள் :

"காங்கிரஸின் கோரிக்கைகள் என்ன? "வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட ஒரு அரசியலின் கீழ் இந்திய மக்களுக்கு அதிகாரமிருக்கக் கூடிய வகையில் நிபந்தனையற்ற சுதந்திரம் உடனே யளிக்கப்பட வேண்டு"மென்பது காங்கிரஸ் கோரிக்கை. இத்தகைய சுதந்திரத்தில் சிறுபான்மையினருக்கும் பாதுகாப்பளிக்கப்படுமாம் (இகழ்ச்சி சிரிப்பு). அது எவ்வாறு சாத்தியமாகும்? ஆண்டவனுக்குத் தான் தெரியும்; எனக்குத் தெரியாது. இதுதான் காங்கிரஸின் கோரிக்கை. இது நிறைவேறுமல் போகவே காங்கிரஸ் வேறு ஒரு முறையை கையாளும் விஷயத்தைப் பற்றி யோசனை செய்தது. காங்கிரஸ் இப்போது பிரிட்டிஷ் சர்க்காருக் களித்த தொந்தரவைப் போல், முஸ்லிம் லீக்கும் அளிக்காமல் காப்பாற்றப்பட்டதைப் பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் நமக்கு நன்றியறிதல் தெரிவித்துக் கொள்ள வேண்டியதே முறையாகும். பிரிட்டிஷ் சர்க்காரைக் காப்பாற்றியது முஸ்லிம் லீக்கே!

"நிற்க, காங்கிரஸ், தனது கோரிக்கையைப் பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக் கொள்ள மாட்டார்களென்பதை யுணர்ந்துகொண்டது. இந்தக் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டால், முஸ்லிம்களுக்குப் பூரண அழிவேற்படுமென்பதை முஸ்லிம்கள் உணர்ந்தனர். ஆதலால் முஸ்லிம் லீக் அதை அடியோடு பலமாக எதிர்த்தது. நாம் மட்டுமில்லாமல், தங்கள் நிலைமை, அந்தஸ்து முதலியவைகளைக் கவனிக்கும் தாழ்த்தப்பட்டோர், கிறிஸ்துவர்கள் முதலிய சிறுபான்மையினர்கள் வேறு இருக்கிறார்கள்; இவர்களும் காங்கிரஸ் கோரிக்கையைப் பலமாக எதிர்த்த

னர். முடிவாகக் காங்கிரஸின் கோரிக்கை மிக மிகப் பலமாகத் தாக்கப்படுவதைக் காந்திஜீயும், காங்கிரஸும் உணர்ந்து தாங்கள் என்ன செய்வதென்றே தோன்ருமல் விழித்தனர். ஆகவே, ஒரு நேர்முகத் தாக்குதலால் தாங்களடைய முடியாத ஒரு இலட்சியத்தை அடைவதற்காகப் பக்கத்திலிருந்து தாக்க முயற்சித்தனர்.

காங்கிரஸ் தீர்மான இலட்சணம் :

"இந்த பக்கத் தாக்கு இயக்கம் என்ன? மற்ருெரு தீர்மானம். காங்கிரஸ் ஒரு தீர்மானம் செய்துவிட்டால், அதைப்பற்றி உடனே அநேக வியாக்கியானங்களும், விமர்சனங்களும் வெளிவந்து விடும். ஒரு தீர்மானத்தை விளக்குவதற்கு வாரக் கணக்கில்கூட ஆகிவிடும். இதற்குள் விமரிசனக்காரர்கள் எல்லாம் பலவகையான அறிக்கைகளை கஜங்கள் கணக்கில் வெளியிட்டு விட்டிருப்பார்கள். இது தான் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றப்படும் இலட்சணம்.

"இந்தப் புதிய தீர்மானத்தை நிறைவேற்று வதற்காகக் காங்கிரஸ் வாலாக்கள் டில்லியிலிருந்து வார்தாவுக்கும், வார்தாவிலிருந்து பூனுவுக்கும் இப்படிப் பல வழிகளில் அலேந்தனர். காங்கிரஸ்காரர்கள், தங்களின் தவருன போக்குகளைத் தடுக்கும் சக்தி முஸ்லிம் லீக் தானென்று அறிந்ததும், அவர்கள் பூனுவில் ஒரு நேர் தாக்குதலுக்குப் பதில் பக்கத் தாக்குதலான இயக்கமொன்றை வகுக்க முயற்சித்தார்கள். பூனுவில் ஏற்பட்ட மாறுதல் வெறும் பெயரளவான ஒரு மாறுதலேயாகும். காந்திஜி இதில் கலந்துக் கொள்ளவில்லே யென்பதை நான் நம்பவில்லே. பூனுவில் எவ்வாருே ஒருவிதத்தில் ஒரு பக்கத் தாக்கான தீர்மானத்தை நிறைவேற்றினுர்கள்.

பூனா தீர்மானம் :

“பிரிட்டிஷ் சர்க்கார், எவ்வித நிபந்தனையுமின்றி இந்தியாவுக்கு உடனே சுதந்திரமளிக்கப் பட்டதாகவும், இந்தியாவின் எதிர்கால அரசியல், யுத்தத்திற்குப் பின் வகுக்கப்படுமென்றும் அறிவித்து, மத்தியில் சட்டசபைக்குப் பொறுப்பான ஒரு தேசிய சர்க்கார் பூர்வாங்கமாக அமைக்கப்பட்டால் அப்போது தனது இராணுவத் தளபதியான காந்திஜியை உதறித் தள்ளிவிட காங்கிரஸ் சம்மதித்தது. இது தான் பூனா தீர்மானம். காந்திஜிகூட உதறித் தள்ளப் பட்டார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஆசாரிய கிருபளானி, தமது தலைவரை விற்று விடக் கூடத் துணிந்து விட்டதாக அது சமயம் கூறினர் (சிரிப்பு). அவர்கள் உண்மையில் தங்கள் தலைவரைப் பூனாவில் விற்று விட்டார்கள். இது மட்டுமல்ல; அவர்களின் கொள்கையாக இருந்த அஹிம்ஸையும், பூனாநகரில் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது (மீண்டும் சிரிப்பு). பூனாவில் காங்கிரஸ் தனது கோரிக்கைகளுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கினல், பிரிட்டிஷாருக்கு யுத்தத்தில் உதவியளிக்கவும், காங்கிரஸ் தயாராக இருந்தது. வார்தாவில் ‘ஹாராமா’ யிருந்த விஷயம், பூனாவில் ‘ஹலால்’ ஆகிவிட்டது.

ராஜாஜியின் புதிய தந்திரம் :

“இவ்வித வித்தைகளால் எவரும் ஏமாற்றப்பட்டு விட மாட்டார்கள். எவருடைய கண்களையும் காங்கிரஸ் மறைத்து விட முடியாது. இதனல் அவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொள்ளுகிருர்கள். காங்கிரஸார் இதை உணர்ந்து விட்டதும், அவர்கள் என்ன செய்தார்கள்? உடனே திடீரென்று உங்கள் மாகாணத்தின் தலைசிறந்த தந்திரசாலி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் ஒரு பெரிய யோசனையோடுவெளி வந்தார். அவர் என்ன கூறினரென்பதைக் கவனியுங்கள்.

"நாங்கள் உத்தேசித்திருக்கும் இந்தத் தேசிய சர்க்காரில், ஜனுப் ஜின்ஞு பிரதம மந்திரியாக இருக்க நாங்கள் அனுமதிக்கிறோம். அவர் விரும்புகிறபடியே மந்திரிச் சபையை அமைத்துக் கொள்ளவும் நாங்கள் சம்மதிக்கிறோம்."

"என்று அவர் கூறினர். இது முஸ்லிம் லீக்கை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட ஒரு அறிக்கை யாகும். ஏனெனில், முஸ்லிம் லீக் தான் தங்களுடைய குட்டை வெளிப்படுத்தித் தங்களுக்குத் தடைக் கல்லாக இருப்பதாகக் காங்கிரஸ் கருதுகிறது. இத்தகைய விஷயங்களால் எவரும் ஏமாற்றப்பட்டுவிட மாட்டார்கள். இதை ஒரு முஸ்லிம் சிறு பையன் கூட இப்போது உணர்ந்துக் கொண்டிருக்கிறன்.

தந்திர முறையை விட்டு விடுங்கள்!:

சீமாட்டிகளே! சீமான்களே!!

"நீங்கள் இதிலுள்ள ஒரு முக்கிய விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அவர்களுடைய மூளைக்கு என்ன கோளாறு ஏற்பட்டு விட்டதோ எனக்குத் தெரியவில்லை (சிரிப்பு) இதற்கு முன் அவர்கள் இவ்வித தந்திரோபாய முறைகளில் வெற்றி பெற்று விட்டிருக்கிறர்கள். பலரைச் சில காலம் ஏமாற்றலாம்; சிலரைப் பல காலம் ஏமாற்றலாம். ஆனல் எல்லோரையுமே எப்போதும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. இதைக் காங்கிரஸ்காரர்கள் உணராமலிருப்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. சில சமயங்களில் சர்வாதிகார முறையையும், சில சமயங்களில் ஏமாற்றுதலையும், சில சமயம் பொய்ப்பிரசாரங்களையும் சில சமயம் தந்திரோபாயம் செய்வதையும் கையாண்டு வருவது காங்கிரஸ் ஒன்று தான். நான் காங்கிரஸ் தலைவர்களுக்கும், ஹிந்துத் தலைவர்களுக்கும் ஒரு வார்த்தை கூறுகிறேன. "நீங்கள் இந்த முறைகளைக் கைவிட்டு விடுங்கள்."

ராஜன் பாபுவின் ஏமாற்று வித்தை :

"காங்கிரஸ்காரர்கள் பேசும் பேச்சுகளைப்பற்றி இரண்டொரு உதாரணம் கூற விரும்புகிறேன். பாபு ராஜேந்திர பிரசாத், சமீபத்தில் அதாவது ஏப்ரல்மீ 10உ யன்று, பாகிஸ்தான் திட்டத்தைப்பற்றிக் கூறுகையில்,

"ஜனுப் ஜின்னு அவர்கள், பாகிஸ்தான் திட்டத்தைக் காங்கிரஸிடம் எப்போதும் சமர்ப்பிக்கவில்லை யாதலால், காங்கிரஸ் காரியக் கமிட்டி அதைப்பற்றி எப்போதும் விவாதித்ததில்லை"

"என்று குறிப்பிட்டிருக்கிருர். காங்கிரஸ் காரியக் கமிட்டி, பாகிஸ்தான் திட்டத்தைப்பற்றி எப்போதும் விவாதிக்கவில்லை யென்பதை நீங்கள் நம்புகிறீர்களா? ("இல்லை" என்ற பதில்) நமது பாகிஸ்தான் என்னும் பிசாசு அவர்களை 1940 வருஷம் மார்ச்சு மாதத்திலிருந்து ஆட்டி வருகிறது. (நீண்ட கரகோஷம்) காந்திஜீயுட்பட ஒவ்வொரு காங்கிரஸ் தலைவரும் அதைப்பற்றி விவாதித்திருக்கிருர்கள் ; அறிக்கைகள் வெளியிட்டிருக்கிருர்கள்; கட்டுக்கட்டாக எழுதியுமிருக்கிருர்கள். பாபு ராஜேந்திர பிரசாத்கூட பாகிஸ்தானைப்பற்றித் தமது அபிப்பிராயங்களைக் குறிப்பிட்டு ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிருர். இவ்வளவிருந்தும், "ஜின்னு, காங்கிரஸிடம் அதை சமர்ப்பியாததால், காங்கிரஸ் காரியக் கமிட்டி அதைப் பற்றி விவாதிக்கவில்லை" என்று அவர் கூறுகிருர். நான் பாபுராஜேந்திர பிரசாத்துக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன்.

அற்ப குணங்களின்றி படியுங்கள் :

"உங்கள் காரியக் கமிட்டியினர், பாகிஸ்தான் திட்டம் பற்றி இன்னும் விவாதிக்கவில்லை யென்ருல், அதை விவாதிக்கும்படி நீங்கள் சொல்லுங்கள் (கேளுங்கள்! கேளுங்

கள்!! என்ற கோஷம்) விவாதிப்பது மட்டுமல்ல; கண்ணிய மாகவும், பெருந்தன்மையோடும் அற்பகுணங்களெவையு மில்லாமலும், அவசரப்பட்டு விடாமலும் நிதானமாக அத் திட்டத்தைப் படியுங்கள். காங்கிரஸ் தலைவர்களிடம் கொஞ்சமாவது அரசியல் விழிப்புணர்ச்சியும், அரசியல் ஆற்றலும் இருக்குமானால், நன்ருகப் பரிசீலனை செய்யுங் கள்." (மீண்டும் பலத்த கரகோஷம்) காங்கிரஸ் பற்றிய விஷயங்கள் இவ்வளவு தான்.

ஸவர்க்கார் விஷயம் :

"அடுத்தபடியாக ஹிந்து மகாசபையைப் பற்றி விவ ரிப்போம். இச்சபை அடியோடு பொருத்த மற்றதும், பிற் போக்கானதும், நம்பிக்கை யில்லாததுமான ஒரு ஸ்தா பனமாகும். ('வெட்கம்' 'வெட்கம்' என்ற கோஷம்) "இதற்கு ஒரே ஒரு உதாரணம் கூறுகிறேன்; கேளுங்கள். ஹிந்து மகாசபைத் தலைவர் ஸ்ரீ வி. டி சவர்க்கார் கராச்சி யில் நடைபெற்ற சீக்கிய மகாநாட்டுக்கு ஒரு செய்தி அனுப்பி யிருந்தார்.

"பஞ்சாப் மாகாணத்தில் சீக்கியர்கள், இராணுவப் படை,கடற்படை, விமானப்படை முதலியவைகளில் பூரண மான அளவு பங்கு பெறுவதாகக் கோரி,ஒருபெரும்இராணு வப் படையை அபிவிருத்தி செய்துக் கொள்வதில் கொஞ் சமும் காலதாமதம் செய்யக் கூடாது"

"என்று அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. சீக்கியர்களை இவ்விதம் இராணுவத்தில் பெருவாரியாகச் சேர்த்துக் கொள்ளும்படி ஒருபுறம் தூண்டிய ஸ்ரீ ஸவர்க் கார், சீக்கியர்களுககு ஒரு வாக்குறுதியைக் கூறியிருக் கிருர். அது என்னவெனில்,

"முஸ்லிம்கள், தங்களின் பாகிஸ்தான் பகற்கனவு களிலிருந்து விழித்தவுடன், பஞ்சாப்பில் ஒரு பாகிஸ்தா

னுக்குப் பதில், சீக்கிஸ்தானென்று ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் காண்பார்கள்''

"என்பதாகும். இதுவன்றி ஸ்ரீஸவர்க்கார், 'சீக்கியர்கள் ஒரு கைப்பிடியளவான அளவுள்ள மக்களாயிருந்த சமயத்தில், அவர்கள் பஞ்சாபில் இருந்த பெரும்பான்மையினரை காபுல் வரை ஆட்சி செய்தனர். இப்போது அவர்கள் பல இலட்சக் கணக்காகப் பெருகி விட்டனர். ஆதலால், இப்போது முன்னை விட குறைந்துள்ள முஸ்லிம் பெரும்பான்மையினரால் அச்சீக்கிய மக்கள் ஆதிக்கம் செலுத்தப் படக் கூடாது; அவ்வாறு இருக்க வேண்டிய அவசியமில்லை" எனக் கூறுகிறார்.

"ஸ்ரீ வைர்க்கார், ஹிந்து மதம், ஹிந்து சமுதாயம், ஹிந்து ராஜ்யம் ஆகியவைகளைப்பற்றி பேசுவதுடன் மட்டும் நின்று விடவில்லை. அவர் பஞ்சாபில் ஒரு சீக்கிஸ்தானை நிர்மாணிக்கும்படி சீக்கியரையும் தூண்டி விடுகிறார். ஸ்ரீ ஸவர்க்கார் ஒரு சாதாரண ஆசாமியல்ல; அவர், ஹிந்து மகா சபையின் தலைவர். சில தலைவர்களின் மனோபாவம் இவ்வாறிருக்கையில், இப்பிரச்னையைப்பற்றி நாம் (முஸ்லிம்கள்) ஏதேனுமொரு பரிகாரம் செய்வது எவ்வாறு சாத்தியமாகும்?

ஜவஹார் பத்திரிகையின் விஷமம் :

"இவ்வாறு தூண்டி விடுவதில் வகுப்பு வாதிகளான ஹிந்து மகா சபையும், அதன் தலைவர்கள் மட்டும் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்து விடவில்லை. காங்கிரஸ் தலைவர்களுட்பட ஒரு பெரும் கூட்டத்தினரின் இலட்சியமும், கொள்கையும் இதுவே யாகும். அபேத வாதியான பண்டித ஜவஹர்லால் நேஹ்ருவின் பத்திரிகை, தனது மார்ச்சுமீ 30உ யன்று இதழில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது :—

" இரண்டு விஷயங்களில் சமரஸமென்பது சாத்திய மில்லை. அற்பர்களின் அபிலாஷைகளைத் திருப்தியாக நிறைவேற்றக் கூடிய முறையில் நாட்டின் பிரிவினை என்பது சாத்தியமானதல்ல."

"நாம் இந்தப் பிரிவினை பற்றியாவது, முஸ்லிம்களுக்குச் சுதந்திரம் பற்றியாவது பேசினால், 'அற்பர்கள்' என்று இகழ்ந்து கூறப்படுகிறோம். ஆனால், ஹிந்துக்கள் ஹிந்து ஆட்சிபற்றிப் பேசினால், அவர்கள் தாராள மனோபாவம் கொண்ட மிதவாதிகள் என்று கூறிக் கொள்ளுகின்றனர். மேலும் அந்தப் பத்திரிகை,

" இந்தியாவில் எப்போதும் ஒரு அகண்ட பாரத ராஜ யம்—விசால பாரத ராஜயம்—தான் இருக்கவேண்டும். அதுவும் ஜனநாயகமான ஆட்சிதான் இருக்கவேண்டும். அதாவது பெரும்பான்மை ஆட்சிதான் இந்தியாவுக்குத் தகுதியுடையதாகும்."

"என்று குறிப்பிடுகிறது. காங்கிரஸ் தலைவர்களின் தன்மையையும், ஹிந்து மகா சபையின் தன்மையையும் முஸ்லிம் இந்தியாவுக்குத் தெளிவாக விளக்கி வைப்பதற்காகவே நான் இவ்விஷயங்களை உதாரணங்களாகக் கூறுகிறேன். புதிதாகப் பிறந்த அகில இந்திய ஹிந்து லீக்கைப்பற்றி நான் ஒன்றும் கூற வேண்டுவதில்லை. ஏனெனில், இந்த ஸ்தாபனமும் ஹிந்து மகாசபை, காங்கிரஸ் இவைகளுடன் இணைந்த ஒரு ஸ்தாபனமாகும். இதிலுள்ள ஓரே ஒரு பரிதாபமான விஷயம் என்னவெனில், ஹிந்துப் பொது மக்கள் இந்த ஹிந்து லீக் என்ற ஸ்தாபனத்தாலும் ஏமாற்றப்படுகின்றனர். ஹிந்துப் பொதுமக்கள், 'நாங்கள் என்ன செய்வது? நாங்கள் அசக்தர்களாயிருக்கிறோம்" என்று கூறலாம். நான் அவர்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன்.

"நீங்கள் இந்தத் தலைவர்களைப் பின்பற்றும் வரையில் இந்தத் தலைவர்களால் ஏற்படும் பலாபலன்களின் பொறுப்புகளிலிருந்து நீங்கள் விலகிவிட முடியாது" (கேளுங்கள்! கேளுங்கள்! என்ற கோஷம்)

அநாமதேய மகாநாட்டுத் தீர்மானம் :

"இப்போது பம்பாய் மகாநாட்டையும், அதன் தீர்மானங்களையும் பற்றி கவனிப்போம். இந்த பம்பாய் மகாநாட்டை ஏற்கெனவே ஹிந்து மகாசபைக் காரியக் கமிட்டியும், ஸவர்க்காரும் பலமாக மறுத்துக் கண்டித்திருக்கின்றனரென்று பத்திரிகைகள் மூலம் தெரிந்தேன். ஸர். தேஜ்பகதூர் ஸாப்ரூவின் மகஜரில், ஷை அநாமதேய மகாநாட்டில் ஹிந்து மகாசபைத் தலைவர்கள் பிரசன்னமாயிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனல் ஸ்ரீ ஸவர்க்கார் இதை மறுத்திருக்கிருர்.

"பம்பாய் மகாநாட்டின் தலைவர் ஸர். தேஜ்பகதூர் ஸாப்ரூ அவர்கள், நீண்டகாலமாக ஒரு அரசியல் அனுதையாகவே இருந்து வருகிருர். இதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிருர் (சிரிப்பு). இந்த அரசியல் அனுதை ஒரு பொறியில் அகப்பட்டுக் கொண்டார். ஏனெனில், இந்தியாவுக்கு மிக்க ஆபத்தேற்பட்டிருக்கும் காலத்தில், அவரே இந்தியாவைக் காப்பாற்றும் வல்லமை யுடையவரென்று அவர் கருதிக் கொண்டிருந்தார். அவரது இலட்சியங்கள் மேன்மையானவையா யிருக்கலாம். அவரது விருப்பங்கள் உயரியனவாயிருக்கலாம். ஆனல் ஸாப்ரூ மகாநாடு, ஒரு தலைவனில்லா ஒரு டச்சுப் படையைப் போன்றிருந்ததெனக் கூற விரும்புகிறேன். இதற்கு முஸ்லிம் லீக்கின் தெளிவான பதில், அந்த பழுத்த அனுபவம் வாய்ந்த தெளிந்த ஞானமுள்ள அரசியல்தலைவர் ஸர். சிமான்லால் செதல்வாட் அவர்களால் கூறப்பட்டு விட்டது. ஸர். தேஜ்பகதூர்

ஸாப்ரூ அவர்கள், அவருடைய (ஸர்சிமன்லாலுடைய) உபதேசத்தைப் பின்பற்றி, நல்ல வழிப்பட்டிருந்தால், அவர் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொண்டிருப்பார். ஸர். ஸாப்ரூவின் மீது, அவருக்குப் பின்னுலிருந்து சூத்திர தாரிகளாக ஆட்டி வைப்பவர்களைப்பற்றி நான் என்னவென்று கூறுவது?

ஸாப்ரூ நல்வழி திரும்புவாரா?:

"பம்பாய் தீர்மானம், பூனு தேசிய சர்க்காரின் இரண்டாம் பதிப்பைத் தவிர வேறில்லை. பம்பாய் தீர்மானம் பற்றிச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மகஜரை நீங்கள் கவனிப்பீர்களாயின், இதைப்பற்றி எவ்வித சந்தேகமும்கொள்ளமாட்டீர்களென்பதில் சந்தேகமில்லை. பம்பாய் தீர்மான வாசகங்கள்பற்றியும் மகஜரின் வார்த்தைகள் பற்றியும் நான் ஒவ்வொன்ருகப் பரிசிலனை செய்ய விரும்பவில்லை. ஆனுல், ஒரே ஒருவிஷயத்தை மட்டும் சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். ஸர் தேஜ்பகதூர் ஸாப்ரூ அவர்கள், அடியோடு தவருன பாதையில் நேர்மையற்ற போக்கில் சென்று விட்டிருக்கிருர். அவர் சூத்திரதாரிகளுடையவும், இதர சில ஸ்தாபனங்களுடையவும் பொறிகளில் நன்ருகச் சிக்கிக் கொண்டிருக்கிருர்.

"நான் எதிர்பார்த்ததைவிட அதிகமான நேரம் பேசிவிட்டேனென்று கருதுகிறேன். நான் ஒரு குறிப்பைக் கூறி இப் பிரசங்கத்தை முடித்துக் கொள்ளக் கருதுகிறேன். இந்தக் குறிப்பு உண்மையில் பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஓர் எச்சரிக்கையாகும். ஏனெனில், அவர்களே இந் நாட்டின் அதிகாரிகளாக இருக்கிருர்கள். இந்த உபகண்டத்தின் சர்க்காராகவு மிருக்கிருர்கள். நான் அவர்களுக்குக் கூறும் எச்சரிக்கை இது தான்:—

பிரிட்டிஷ் சர்க்காருக்கு எச்சரிக்கை:

"தயவு செய்து நிறுத்தி விடுங்கள். இந்த நெருக்கடியான சமயத்தில் இந்தியாவின் பாதுகாப்பையும், யுத்த முயற்சிகளையும் குலைத்து, யுத்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை விளைவிப்பவர்களிடம் சமரஸம் செய்ய முற்படும் மனோபாவத்தைத் தயவு செய்து நிறுத்தி விடுங்கள். இந்த நெருக்கடி சமயத்தில் இப்போதாவது அல்லது யுத்தத்திற்குப் பிறகாவது அவர்களை ஒரு உயரிய அதிகார அந்தஸ்தில் வைக்க நீங்கள் விரும்புகிறீர்களா? இங்நாட்டில் பிரிட்டிஷ் அனுசரிக்கும் கொள்கைகளை மாற்றிக்கொள்ளுங்கள். உங்களுடன்சேர்ந்துநின்று,உங்களுக்காதரவளிக்கமனப்பூர்வமாக விரும்புபவர்களிடம் நீங்கள் சற்றும் விஸ்வாசமாயிருக்கக் காணோம். அரசியல், பொருளாதாரத் துறைகளில் பெரும் தொந்தரவளித்துக் கொண்டிருப்பவர்களின் பின்னால் நீங்கள் கெஞ்சிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த இலட்சியத்தை விட்டு விடுங்கள். உங்களுடன் சேர்ந்து வாழ விரும்பாதவர்களிடம் நீங்கள் சேர்ந்து வாழ விரும்புகிறீர்கள். நீங்கள் முஸ்லிம் இந்தியாவின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெற கண்ணியமாக விரும்பினால், எங்களிடம் மனம் விட்டு விவாதிக்க வாருங்கள்."

"கடைசியாக இம் மகாநாட்டுக்கு விஜயம் செய்துள்ள டெலிகேட்டுகளுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். நாம் இந்த மேடையில் பிரசங்கங்கள் செய்வதாலும், நமது கண்டனக்காரர்களையும், எதிரிகளையும் எதிர்த்துப் பேசுவதாலும் இன்று நம் முன் இருப்பதா—இறப்பதா? என்பதனூடேயுள்ள அபாயகரமான பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் நாம் எப்போதும் வெற்றி பெற முடியாது. இதற்குள்ளது ஒரே ஒரு ஆயுதந் தான். இதை எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாகப் பிரயோகிக்கிறோமோ அவ்வளவுக்கும் நன்மையே. அந்த ஆயுதம் என்னவெனில்,

நீங்கள் உங்கள் பலத்தையும், சக்தியையும் ஸ்தாபனக் கட்டுப்பாட்டையும் வளர்ச்சி யடையச் செய்ய வேண்டும். இவ்வளர்ச்சி, எத்தகைய அபாயம், சக்தி, எதிரி, விரோதி ஆகியவைகளைத் தனியாகவோ, ஒன்று சேர்த்தோ எதிர்த்து நிற்கக்கூடிய வகையில் இருக்கவேண்டும்." (நீண்ட கரகோஷம்)

* * *

"காயிதே ஆஜம்" ஜனுப் ஜின்னு அவர்கள், தம் பிரசங்கத்தை முடித்த பின், தமது ஆசனத்தில் அமர்ந்தார். மேற்படி மகாநாட்டின் பொதுக் காரியதரிசி ஜனுப் மலங்கு அஹ்மத் பாஷா சாஹிப் 'காயிதே ஆஜம்' அவர்களின் பிரசங்கத்தின் சாராம்ஸத்தை விஷயங்கள் எதுவும் விட்டுப் போகாமலும், பொதுமக்கள் பிரசங்கத்தின் கருத்தைச்சரிவர விளங்கிக் கொள்ளும்படியாகவும், கேட்போருக்கு உணர்ச்சி ததும்பும்படியாகவும் இனிய தமிழில் எளிய நடையில் வெகு அழகாக மொழி பெயர்த்துக் கூறினர்.

7. காரியதரிசி ரிப்போர்ட்டு

பின்னர், அகில இந்திய முஸ்லிம் லீக் காரியதரிசி, நவ்வாப்ஜாதா லியாகத்அலிகான் அவர்கள், வருஷாந்திர ரிப்போர்ட்டை மகாநாட்டினர் முன் சமர்ப்பித்தார். இந்த ரிப்போர்ட்டினிடையே அவர் குறிப்பிட்டதாவது:—

"1940ஹு மார்ச்சுமீ 23உ யன்று தினம் முஸ்லிம் இந்தியாவின் சரித்திரத்தில் பெரும் முக்கியாம்ஸ ஞாபக தினமாகும். ஏனெனில், அன்றைய தினம் தான் லாகூரில் நடைபெற்ற அ.இ. முஸ்லிம் லீக் மகாநாட்டில் இப்போது பாகிஸ்தான் என்று பிரபலமாகக் கூறப்படும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம், இந்தியாவின் அரசியல் இலட்சியத்தின் மூலாதாரத்தையே அடியோடு மாற்றி விட்டது. இந்த ஒரு தீர்மானத்தால், கடந்த எட்டு ஆண்டுகளாக ஜனநாயகம் என்னும் பெயரால் இந்திய மக்களைப் பெரும்பான்மை ஆட்சியின் கீழ் அடக்க ஹிந்துக்கள் முயன்று வந்த முயற்சிகளனைத்தும் அடக்கப் பட்டுப் போய் விட்டன. லாகூர் தீர்மானம், இந்திய முஸ்லிம்களிடையே புதிய நம்பிக்கைகளையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தி விட்டது.

'பாகிஸ்தான்' லாகூர் தீர்மானமல்ல :

"லாகூர் தீர்மானத்தைப் பாகிஸ்தான் தீர்மானம் என்று முஸ்லிம் லீக் கூறவில்லை. இத்தீர்மானத்தில் பொதிந்துள்ள திட்டமும் பாகிஸ்தான் என்றும் கூறப்படுவதற்கில்லை. பாகிஸ்தான் அசல் திட்டம் லாகூர் தீர்மானத்திற்கு மாறுதலானது. இவ்விரண்டுக்குமிடையே மிக்க வித்தியாசமிருக்கிறது. லாகூர் தீர்மானத்தைக் கண்டித்துப் பிரசாரம் செய்த எதிர்ப்பாளர்கள், இத்தீர்மானத்தைப் 'பாகிஸ்தான் திட்டம்' என்று பிரபலப்படுத்தி விட்டார்கள். இதனுல், இன்று லாகூர் தீர்மானமே பாகிஸ்தான்

திட்டம் என்று பிரபலமடைந்து விட்டது. பாகிஸ்தான திட்டமும் லாகூர் தீர்மானமும் ஒன்றெனக் கருதப்படு கின்றன. இத்திட்டத்தைப்பற்றிப் பிரசாரம் செய்வதற்காக முஸ்லிம் லீக் காரியக் கமிட்டி, ஒரு பிரசாரத் தூதுவக் கோஷ்டியை அமைத்தது. பாகிஸ்தான் தூதுக் கோஷ்டி யினர், பீஹார், ஐக்கிய மாகாணம் முதலிய பல மாகாணங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து, பாகிஸ் தான் திட்டம்பற்றிப் பிரசாரம் செய்தனர். இதுவன்றி மாகாண லீக்குகள், அந்தந்தமாகாணங்களில் பாகிஸ்தான் பற்றிப் பிரசாரம் செய்தன. இவைகளைத் தவிர காஜி முஹம்மத் ஈஸா அவர்களின் தலைமையின் கீழ் எல்லைப்புற மாகாணத்தில் ஒரு தூதுவக் கூட்டம் சுற்றுப் பிரயாணம் செய்து, பாகிஸ்தான்பற்றிப் பிரசாரம் செய்தது.

முஸ்லிம் லீக் கோரிக்கைகள் :

"நாட்டின் அரசியலில்பல முட்டுக்கட்டைகள்ஏற்பட் டிருக்கின்றன. பிரிட்டிஷ் சர்க்கார் சார்பாக மிஸ்டர் அமெரி வெளியிட்டுள்ள அறிக்கை, அநேகமாகத் திருப்தி யைத் தரக்கூடியதா யிருக்கிறது. அவ்வறிக்கையில் முஸ் லிம் லீக்கின் கோரிக்கைகள் பெரும்பாலும் ஒப்புக் கொள் ளப்பட்டுள்ளன. காங்கிரஸ், இந்தியாவின் ஏக அரசியல் ஸ்தாபனமல்லவென்பதையும், ஆதலால் இந்தியா முழு மைக்கும் காங்கிரஸ் ஒன்று மட்டும் பேச உரிமையுடைய தல்லவென்பதையும் மிஸ்டர்அமெரி அங்கீகரித்தார். காங்கி ரஸ் ஸ்தாபனம், இந்தியாவில் ஹிந்துக்களைத் தவிர வேறெ வருக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனமல்ல. இங்கி லாந்திலுள்ளது போன்றே ஒரு ஐக்கிய சர்க்கார் இந்தியா வுக்குச் சற்றும் பொருத்தமானதல்ல.

"ஆகஸ்டு மாத அறிக்கை சம்பந்தமாக பூரண ஆலோ சனைக்குப் பின், இந்த அறிக்கையில் கூறப்பட்ட உத்தே

சங்கள், யுத்த முயற்சிகளுக்குப் போதுமானவை களல்ல வென்று முஸ்லிம் லீக் தீர்மானித்தது."

முடிவில் நவ்வாப் ஜாதா லியாகத்அலிகான் அவர்கள், பெர்ஹாம்பூரிலும், ஜபல்பூரிலும் நடைபெற்ற பாகிஸ்தான் தினக் கொண்டாட்டங்களையும், அது கால நடைபெற்ற சம்பவங்களையும் விவரித்தார்.

பின்னர் மகாநாடு நாளை காலை 9 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

8. மூன்றும் கூட்டம் தீர்மானம்

1941ஆல் எப்ரல்மீ 15உ காலை 10 மணிக்கு அகில இந்திய முஸ்லிம் லீக்கின் மூன்றும் நாள் நடவடிக்கைகள் ஆரம்பமாயின.

"காயிதே ஆஜம்" ஜனுப் முஹம்மத் அலி ஜின்னு அவர்கள், தேக சுகவீனத்தின் காரணமாக மகாநாட்டிற்கு வராததால், வரவேற்புக் கமிட்டித் தலைவர், ஜனுப் அப்துல் ஹமீத்கான் தலைமை வகித்தார்.

மகாநாட்டு வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசி ஜனுப் மலங்கு அஹ்மத் பாஷா சாஹிப், பாகிஸ்தான் திட்டத்தை யாதரித்து, இம் மகாநாட்டுக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், சிங்கப்பூர், பினங்கு, எப். எம். எஸ். (மலேயா), பர்மா முதலிய வெளிநாடுகளிலிருந்தும், சிலோனிலிருந்தும், பொது ஸ்தாபனங்கள் மூலமாகவும், நபர்கள் மூலமாகவும் ஏராளமான தந்திகள் கிடைத்துள்ளன வென்றும், அவைகளை யெல்லாம் படித்துக் காட்டுவதென்றால், நேரம் போதாதாகையால், சில நாடுகளை மட்டும் குறிப்பிடுவதாகவும், தந்திகளில் பாகிஸ்தான் திட்டத்தை ஆதரித்திருப்பதோடு இம் மகாநாடு வெற்றிகரமாக நடைபெற ஆசியும் கூறப்பட்டுள்ளதென்றும் கூறினர்.

"முதன் முதலாக, ஸர். ஷாஹ் ஸுலைமான் அவர்களின் மரணத்திற்கு வருந்தியும், அவர்களின் குடும்பத்திற்கனுதாபம் அறிவித்தும், தலைவரால் பிரேரணை செய்யப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது."

தீர்மானம் – 1.

முஸ்லிம் லீக்கின் லட்சியம் :

"நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான் அவர்கள், அகில இந்திய முஸ்லிம் லீக் திட்டத்தின் 2-வது பிரிவு (ஏ) உட்பிரிவான,

"சுயேச்சையும், குடியாட்சியும் கொண்ட மாகாணங்களும், சுதேச சமஸ்தானங்களும் கொண்ட பெடரேஷன் முறையில் இந்தியாவுக்குப் பூரண சுயேச்சை ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்த ஆட்சி முறையில் முஸ்லிம்களுடையவும், சிறுபான்மையினர்களுடையவும் உரிமைகள் பெடரேஷன் திட்டத்திலேயே போதுமான அளவு, தக்க விதமாக பாதுகாக்கப்பட வேண்டும்."

"என்ற விதியைப் பின்கண்டவாறு மாற்ற வேண்டுமெனப் பிரேரணை செய்தார்.

"அகில இந்திய முஸ்லிம் லீக் கொள்கைகளும், இலட்சியங்களும் வருமாறு:—

(ஏ) "1. பூகோள அமைப்பின்படி வகுக்கப்பட்டுள்ள பிரதேசங்கள், மதத்தை யடிப்படையாகக் கொண்டு பூரண சுதந்திரம்கொண்ட தனியாட்சிப் பிரதேசங்களாகப் பிரிக்கப்படவேண்டும். இதில் அவசியமான எல்லை மாறுதல்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும். முஸ்லிம்கள் எண்ணிக்

கையில் பெரும்பாலோராக இருக்கும் இந்தியா வின் வடமேற்கு, வடகிழக்குப் பிரதேசங்கள் தனித் தனி சுதந்திர ஆட்சியைக் கொண்ட தனி முஸ்லிம் சுதந்திரப் பிரதேசமாகப் பிரிக்கப்பட வேண்டும்.

"2. மேற்கண்ட சுதந்திரப் பிரதேசங்களில், சிறுபான்மைச் சமூகத்தினரின் மதம், கலை, பொருளாதாரம், நிர்வாகம் முதலிய உரிமைகள் சம்பந்தமாக அந்தச் சிறுபான்மையினருடன் கலந்தாலோசித்துக் கொண்டு, போதிய, அழுத்தமான பாதுகாப்புகள் சட்டப் பூர்வமாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

"3. இதுபோன்றே முஸ்லிம்கள் சிறுபான்மையாக உள்ள இந்தியாவின் இதர பகுதிகளிலுள்ள முஸ்லிம்களுடையவும், இதர சிறுபான்மையினருடையவும் மதம், கலை, பொருளாதாரம், நிர்வாகம் முதலிய உரிமைகள் சம்பந்தமாக அந்தந்தச் சிறுபான்மையினருடன் கலந்தாலோசித்துக் கொண்டு, போதிய அழுத்தமான பாதுகாப்புகள் சட்டபூர்வமாக ஏற்படுத்தப்பட வேண்டும்." (இதுவே பாகிஸ்தான் திட்டம்)

"ஷை திருத்தத்தைப் பிரேரணை செய்த நவ்வாப்ஜாதா லியாகத் அலிகானவர்கள் செய்த பிரசங்கம் வருமாறு:—

"முஸ்லிம் இந்தியாவின் இலட்சியத்தையும், நோக்கத்தையும் மாற்றவேண்டு மென்பதே இத் திருத்தத்தின் நோக்கம்.

ஒரே ஆட்சி சாத்தியமில்லை :

"இந்தியா முழுமைக்கும் ஒரே சமஷ்டி முறையான ஆட்சி அனுஷ்டான சாத்தியமற்ற தென்பதையும், நாட்டில் குழப்பம் விளைவிக்கக் கூடியதென்பதையும், முஸ்லிம்கள் அனுபவப் பூர்வமாக உணர்ந்துக் கொண்டிருக்கிறார்கள். கலை, மதம் முதலிய ஒவ்வொன்றிலும் வேறுபாடுகளைக் கொண்ட பல சமுதாயத்தினர் வதியும் இந்தியாவைப் போன்றதொரு நாட்டில் முழு நாட்டிற்கும் ஒரே மத்திய சமஷ்டி முறையான ஆட்சி நடைபெறுவதானது, இதர சமூகத்தினரை விட எண்ணிக்கையில் அதிகமாயுள்ள ஒரு சமூகம், முஸ்லிம்கள் மீதும் நாட்டின் இதர ஒவ்வொரு சமூகத்தின் மீதும ஆதிக்கம் கொள்வதாகும். ஜனுப் ஜின்னு அவர்கள் குறிப்பிட்டபடி முஸ்லிம்கள் ஒரு மத்திய சர்க்கார் ஆட்சி முறையை எப்போதும் ஒப்புக்கொள்ள முடியாது.

பாகிஸ்தான் பிரதிக்கினை :

"லாகூரில் அகில இந்திய முஸ்லிம் லீக் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இத் தீர்மானம், முஸ்லிம் இந்தியாவின் பழைய மனுேபாவத்தையே அடியோடு மாற்றி விட்டது. இத்தீர்மானம் "பாகிஸ்தான்" என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது. லாகூர் தீர்மானம் பேரம் பேசும் முறையிலிருப்பதாகக் கூறியவர்கள், முஸ்லிம்கள் தங்களுக்கு புரியாத எவ்விஷயத்தையும் எப்போதும் கூறியதில்லை யென்பதை நன்ருக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும். அவர்கள் புரிந்துகொண்டதையே கூறுகிருர்கள் ; கூறுவதையே புரிந்தும் கொள்ளுகிருர்கள்.

"அ. இ. முஸ்லிம் லீக் சட்ட திட்டங்களில், மாறுதல் செய்யப்பட்ட பின், முஸ்லிம் லீக்கின் ஒவ்வொரு அங்கத்தினரும், அதில் சேரும் இதர முஸ்லிம்களும் பாகி

ஸ்தானை ஏற்றுக் கொள்வதாகவும், இந்தியாவில் அதை நிர்மாணிக்க முயற்சிப்பதாகவும் பிரதிக்ஞை மேற்கொள்ள வேண்டும். முஸ்லிம்கள், தாங்கள் பெரும்பான்மையா யுள்ள பிரதேசங்களில், எண்ணிக்கையில் சிறுபான்மை யினரா யிருப்பவர்களின் நலன்களைப் புறக்கணிக்கவில்லை.

முஸ்லிம்களின் பரந்த நோக்கம் :

"முஸ்லிம்கள் பெரும்பான்மையாயுள்ள பிரதேசங் களில் சிறுபான்மையினருக்கு வெறும் பாதுகாப்பு வாக்கு றுதிகளை மட்டும் அளித்து விடாமல், அதற்குப் பதிலாகச் சிறுபான்மையினரின் மதம், கலை, பொருளாதாரம், அரசி யல், நிர்வாகம் முதலிய எல்லா உரிமைகளும், நலன்களும் உறுதியாக சட்டபூர்வமான பாதுகாப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்பதே தங்கள் கொள்கையென்பதை முஸ்லிம் கள் திட்டமாக வெளியிட்டு விட்டுள்ளனர். இச் சட்ட பூர்வமான பாதுகாப்புகள் கூட சிறுபான்மையினர் மீது திணிக்கப்பட மாட்டாதென்றும், அச் சிறுபான்மையின ரிடம் கலந்தாலோசித்த பின்னரே செய்யப்படுமென்றும் முஸ்லிம்கள் தெளிவாக்கி விட்டிருக்கிறார்கள். இந்தியாவி லுள்ள முஸ்லிம் பொது மக்களின் பரந்த நோக்கத்திற்கு இது மற்றோர் உதாரணமாகும். தனது ஆதிக்கத்தின் கீழ் வாழும் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புணர்ச்சி யை உண்டாக்காமல், இந்நாட்டிலும், உலகின் வேறெந்த பாகத்திலுமுள்ள எந்த சர்க்காரும் திருப்திகரமாக நடை பெறுதென்பதை முஸ்லிம்கள் உறுதியோடு நம்புகிறார்கள். இந்த அடிப்படையின் கீழ் தான் முஸ்லிம்கள், ஒரு நேர் முகக் குணமுடைய மக்கள் என்ற முறையில் சிறுபான்மை யினரின் உரிமைகளை அங்கீகரித்து, அவர்களின் நியாய மான சட்டபூர்வப் பாதுகாப்புகளை யளிக்கத் தயாராயிருக் கிறார்கள்.

முஸ்லிம் லீக்கின் இலட்சியம்:

“ஆனால், பெரும்பான்மை மாகாண முஸ்லிம்கள், சிறு பான்மை மாகாண முஸ்லிம்களின் நிலைமையை மறந்து விட வில்லை. முஸ்லிம்கள் சிறுபான்மை யினராயுள்ள பிரதேசங் களில், அவர்களுக்கும், இதர சிறுபான்மை யினருக்கும் அவரவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, மதம், கலை, பொருளாதாரம், அரசியல், நிர்வாகம் முதலிய உரிமைகள் போதுமான அளவில் ஸ்திரமாகவும், சட்ட பூர்வமாக வும் அளிக்கப்பட வேண்டுமென்பதே முஸ்லிம்களின் நோக்கமாகும். ஹிந்து இந்தியாவிலும் சரி, முஸ்லிம் இந் தியாவிலும் சரி, சிறுபான்மையினருக்குச் சாத்தியமான ஒவ்வொரு பாதுகாப்பு மளிக்க வேண்டுமென்பதே முஸ் லிம் லீக்கின் இலட்சியம். அவர்களின் கொள்கை பிற ருக்கு அநீதி செய்யவேண்டுமென்பதல்ல; ஆனால் ஒவ் வொருவருக்கும் நியாயம் கிடைக்க வேண்டுமென்பதே!

பாகிஸ்தான் வேண்டும்:

“இந்திய அரசியல் பிரச்னைகள் திருப்திகரமாகத் தீர்க் கப்படுவதற்குப் பாகிஸ்தான் ஒன்றே பரிகாரமென முஸ் லிம் லீக் அடிக்கடி கூறி வந்துள்ளது. ‘இந்தியா விடுதலைபெற வேண்டும்;’ ‘இந்தியர்கள் சுதந்திர புருஷர்களாக வாழ வேண்டும்’ என்று உண்மையில் ஆர்வமுடையவர்கள், இந் தியாவுக்கு விடுதலை யளிக்கக் கூடிய ஒரே வழி பாகிஸ் தானே என்பதை ஒப்புக்கொள்ள வேண்டுமெனக் கூறு கிறேன்.”

ஹாஜி அப்துல் ஸத்தார் ஹாஜி ஈஸாக் ஸேட் (மலை யாளம்), மலையாள மொழியில் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில், பாகிஸ்தான் திட்டம்பற்றி விளக்கினார்.

ஜனாப் பி. தாவூத்ஷா (‘தா. இ.’ ஆசிரியர்), இத் தீர் மானத்தை ஆதரித்துத் தமிழில் பேசினார்.

5

காஜி முஹம்மத் ஈஸாகான் (பலுச்சிஸ்தான்) உர்தூ மொழியில் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:—

"இப்போது இம் மகாநாட்டின் முன் கொண்டு வரப் பட்டுள்ள தீர்மானம், பாகிஸ்தான் திட்டத்தின் மீது அதன் கண்டனக்காரர்களும், இதரர்களும் கொண்டிருந்த எல்லா சந்தேகங்களையும், சமுசயங்களையும் போக்கி விடு மென்பதில் சந்தேகமில்லை.

அனுவசியமான ஆட்சேபனைகள் :

"பாகிஸ்தானே தங்கள் இலட்சியமென பிரதிக்ஞை செய்துக் கொண்டு, அதை யடையும் வரை ஓயாதிருக்க வேண்டுவதே முஸ்லிம்களின் கடமையாகும். பாகிஸ்தான் திட்டம் பொருளாதாரத் துறையில் பெரும் பாதகம் விளை விக்கும் என சிலர் ஆட்சேபிக்கின்றனர். இது மொத்தப் பிரச்னையையும் குழப்பத் துள்ளாக்குவதாகும். பாகிஸ் தான் இலட்சியம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், பொருளா தாரக் கஷ்டங்கள், பின்னல் நிவர்த்தித்துக் கொள்ளப் படும். இப்போதுள்ள பிரதான பிரச்னை என்னவெனில், முஸ்லிம்கள் தங்கள் சொந்த போக்கின்படி தங்களைத் தாங்களே அபிவிருத்தி செய்துக் கொள்ளுவதற்காக பாகி ஸ்தான் என்ற சுயேச்சைப் பிரதேசத்தைக் கோருவதே யாகும். பஞ்சாப் மாகாணத்தில் சில வருஷங்கள் சீக்கியர் களின் ஆட்சி நடைபெற்றதால் அம் மாகாணம் சீக்கியர் களுக்கே சொந்தமானதென்றும், எனவே அம்மாகாணத் தைப் பாகிஸ்தான் பிரதேசத்தில் சேர்க்கக்கூடாதென்றும் வேறுசிலர் ஆட்சேபிக்கிறார்கள். இதை நாம் ஏற்பதாயிருந் தால், பஞ்சாப்பை சீக்கியர் ஆண்டகாலத்தைவிட அதிகமான காலம் இந்தியாவை முஸ்லிம்கள் அரசாண்டிருப்பதால், இந்தியா முழுமையும் முஸ்லிம்களுக்கே சொந்தமாகி விடு கிறதல்லவா? ஒரு ஐக்கிய மத்திய சர்க்காரின் கீழ் வாழ

முஸ்லிம்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள். முஸ்லிம்கள் உண்மையான இஸ்லாமிய இலட்சியங்களுக்கிணங்க தங்களை அபிவிருத்தி செய்துக் கொள்ளக் கூடிய சுதந்திரப் பிரதேசமாகிய பாகிஸ்தானைப் பெறும் வரையில் முஸ்லிம்கள் ஓயமாட்டார்கள்"

நன்மைகளென்ன? :

நவ்வாப் ஸர் முஹம்மத் யூஸுஃப் (ஐக்கிய மாகாணம்) பேசுகையில் கூறியதாவது:—

"இப்போது நம் முன் விவாதத்திலிருக்கும் தீர்மானம், முஸ்லிம் லீக்கின் கொள்கையும், நோக்கமும் என்னவென்பதை வெகு தெளிவாக விளக்கிக் காட்டி விட்டது. பாகிஸ்தான் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்கள், இதரர்கள் மீது சர்வாதிகாரம் செலுத்த வேண்டுமென்பது அதன் இலட்சியமல்ல. பாகிஸ்தானில் இஸ்லாத்தின் கட்டளைகள் படி நீதியும், நேர்மையும் ஒருங்கே கூடியுள்ள ஒரு ஆட்சியே ஏற்படுத்தப்படும். பாகிஸ்தானில் முஸ்லிம்கள் சுயேச்சை பெற்று விடுவார்களாயின், அவர்கள் சிறுபான்மையினரிடம் நீதியாகவும், தாராளமாகவும் ஆட்சி நடத்துவரென்பது திண்ணம். இதுபோன்றே ஹிந்து இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும், சிறுபான்மையினர்கள் விஷயத்தில்—குறிப்பாக ஒரு சிறுபான்மையினரென்ற அந்தஸ்திலில்லாமல் சமுதாயத்தினரென்ற அந்தஸ்திலுள்ள முஸ்லிம்கள் விஷயத்தில்—நேர்மையாக நடந்துகொள்ள வேண்டுமென்றே முஸ்லிம்கள் எதிர்பார்க்கின்றனர். காங்கிரஸ்காரர்கள் பிரிட்டிஷ் சர்க்காரிடம் சமத்துவம், நீதி, நேர்மையைக் கோருகிறார்கள், முஸ்லிம்களும் பிரிட்டிஷ் சர்க்காரிடமும், ஹிந்து இந்தியாவிடமும், சம்பந்தப்பட்ட அனைவரிடமும் சமத்துவத்தையும், நீதியையும், நேர்மையையும் கோருகிறார்கள்.

ஒரே பரிகாரம் :

"பாகிஸ்தானைப் பற்றிப் பேசுவதென்னமோ சுலபம் தான்; ஆனால், அதனால் இந்திய அரசியல் பிரச்னை உண்மையில் தீர்ந்து விடாது"

"என்று சில கண்டனக்காரர்கள் கூறுகின்றனர். ஜனாப் ஜின்னா அவர்கள், நாட்டின் முன் எதிர்ப்பட்டுள்ள உண்மைப் பிரச்னையைத் தெளிவாகக் கூறிவிட்டார். அப்பிரச்னை என்னவெனில், எல்லாப் பொருளாதார, சமூக, அரசியல் சிக்கல்களையும் போக்குவதற்காக அரசியல் அதிகாரம் பெறுவதேயாகும். பாகிஸ்தான் திட்டம் இந்த சிக்கல்களை யெல்லாம் அகற்றிவிடுமென ஜனாப் ஜின்னா கூறியிருக்கிறார். இஃதொன்றே இந்தியப் பொது மக்கள் விடுதலைக் குரிய வழியாகும். பரஸ்பர நம்பிக்கையும், நல்லுணர்ச்சியும் கூட இத் திட்டத்தால் தான் ஏற்படும். சிலர் கூறுகிறபடி இத் திட்டம் குழப்பம் எதையும் விளைவித்து விடுவதல்ல; ஆனால், இது ஜனாப் ஜின்னா அவர்களால், நாட்டின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஓர் உறுதியான மறுக்க முடியாத நேர்முகத் திட்டமாகும். "இந்தப் பாகிஸ்தானின் அர்த்தமென்ன?" என்ற கேள்விக்கு இப்போது நம் முன்கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் ஒரு சிறந்த பதிலாகும். இத் திருத்தம், ஹிந்துக்கள் இதுகாறும் கூச்சலிட்டு வந்த 'ஒரே சமுதாயம்—ஒரே ஜனநாயக ஆட்சி' என்ற பல்லவியை நாசப்படுத்தி விட்டது.

ஒற்றுமைக்கு சாதனம் :

"ஒரே ஐக்கிய மத்திய சர்க்கார் தானிருக்க வேண்டும்" என்று அவர்கள் கூறுவது வெகு எளிது. ஏனெனில், அதனால் அவர்களுக்கு ஆதிக்க நிலைமை ஏற்பட இடமுண்டாகிறது. ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கு மிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால், அவரவர்கள் பெரும்

பான்மையாயுள்ள பிரதேசங்களில் இருவருக்கும் சுதந்திரம், நீதி, உரிமைகள் முதலியவைகளுடன் வாழ்வதால் தான் அத்தகைய நிலைமை ஏற்படும். இந்தியப் பிரச்னைகளுக்குத் திருப்திகரமான ஒரே பரிகாரம் இந்தியப் பிரிவினையேயாகும். முஸ்லிம்கள் இந்த நிலையிலிருந்து மாறுதலடைய முடியாது. முஸ்லிம்கள் ஒரு மத்திய ஐக்கிய சர்க்கார் ஏற்பட இணங்குவது, அவர்கள் நசுக்கப்பட அனுமதிப்பதாகும். இந்த நிலை பெரிதும் வருந்தத் தக்கது."

மௌலானா ஜபரலிகான் அவர்கள் உர்தூவில் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"தற்போது நம் முன் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம் மிக மிக முக்கியமானதென்பதை நான் கூற வேண்டுவதில்லை. முஸ்லிம்கள் என்ன கோருகிறார்களென்பதை இது தெளிவாக விளக்கி யிருக்கிறது.

சகோதரர்களின் நவீன பங்கு :

"இப்போது ஒரு சிறு கதை ஞாபகத்துக்கு வருகிறது. ஒருகிழவனுக்கு இரண்டு குமாரர்கள். அந்தக்கிழவன் இறக்கும்பொழுது ஒரே ஒரு வீடுதான் அவர்களுடைய ஆஸ்தி. இந்த வீட்டில் தரையிலிருந்து கூரை வரை மூத்த மகன் எடுத்துக் கொண்டு, கூரைக்கு மேல் ஆகாயம் வரையுள்ள பகுதியைத் தம்பிக்குக் கொடுத்து விட்டான். இதுபோலவே காங்கிரஸும் அதிகாரங்களை கைப்பற்றிக் கொண்டு, பயனற்ற விஷயங்களை யெல்லாம் முஸ்லிம் லீக் தலையில் கட்டிவிட முயற்சி செய்கிறது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் நாட்டின் விடுதலையில் தான் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். ஆனால், முஸ்லிம்கள் கோரும் விடுதலையின் போக்கு என்ன?

"எங்களுக்கு மத்திய சர்க்கார் வேண்டாம்; அரசியல் நிர்ணய சபை தேவை யில்லை; குடியேற்ற நாட்டந்தஸ்தும்

வேண்டாம். முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் சமத்துவ அந்தஸ்தில் சுதந்திரம் இருக்க வேண்டுமென்றே நாங்கள் கோருகிறோம்.

பொறுப்பாளிகள் காங்கிரஸே!:

"ஜனத் தொகை விகிதாசாரத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒரு அரசியல் நிர்ணயச்சபையால், முஸ்லிம்களுக்கு எவ்வித உதவியும் கிடைக்காது. இந்த அரசியல் நிர்ணய சபையிலும் கூட முஸ்லிம்கள் சிறுபான்மையினராகவே இருப்பர். ஆதலால், அவர்களுக்கு அரசியல் சட்டங்கள் வகுக்கப்படுவதில் எந்த விதமான உரிமையும் அனுகூலமும் இராது. இந்நாட்டில் ஒரு சுதந்திர முஸ்லிம் நாடு ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பதே முஸ்லிம் லீக்கின் இலட்சியமாகும். நான் காங்கிரஸின் மீது அனுதாபமுள்ளவனு யிருந்தேன்; இந்திய முஸ்லிம்களை ஒடுக்கக் காங்கிரஸ் ஆரம்பித்தவுடன், நான் காங்கிரஸை எதிர்க்க முற்பட்டேன். நேற்று வரையில், நாங்கள் ஒரே சர்க்காரையும், பிரிக்கப்படாத நாட்டையும் ஆதரிப்பவர்களாயிருந்தோம். ஆனுல், காங்கிரஸுடையவும், ஹிந்துக்களுடையவும் செயல் முறைகள் எங்கள் அபிப்பிராயத்தை மாற்றி விட்டன. இன்று நாங்கள் பாகிஸ்தானை நிர்மாணிக்கத் தீர்மானித்து விட்டோம். இன்ஷா அல்லாஹ் நாங்கள் அவ்வாறே நிர்மாணிப்போம். நாங்கள் முஸ்லிம்கள் என்ற முறையில் எங்களை மட்டுமின்றி, முழுநாட்டையுமே விடுதலை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்று நமக்கு இரண்டு அடிமைத் தளைகள் இருக்கின்றன. ஒன்று பிரிட்டிஷ் தளை; மற்றொன்று காந்திஜியின் தளை. இந்த இரு தளைகளையுமே தகர்த்தெறிந்துவிட நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். விடுதலையென்பது குர்ஆன் போதனைப்படி வாழ்வதேயாகுமென நாங்கள் கருதுகிறோம்."

தியாகத்துக்குத் தயார்!:

பேகம் முஹம்மத் அலி, தீர்மானத்தை ஆதரிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"ஆரம்பத்திலேயே பாகிஸ்தான் திட்டத்தை எதிர்த்தவர்களும் கூட இப்போது, அதன் நேர்மையையும், மேன்மையையும் உணர ஆரம்பித்து விட்டனர். சென்ற சில வருஷங்களில் நடைபெற்ற சம்பவங்கள், முஸ்லிம்களின் கண்களை விழிப்படையச் செய்து விட்டன. அவர்கள், இப்போது தங்கள் சொந்த தாய் நாட்டைப் பெறுவதற்காக ஒரே மனிதனுக ஐக்கியமாகி விட்டுள்ளனர். காந்திஜீ இன்றுள்ள உயர் நிலையை அடையச் செய்தவர்கள் மௌலானு முஹம்மத் அலி, ஷௌகத் அலி மர்ஹூம்களே யாவர். இதற்காக அவர் இன்று நன்றியறிதலுடையவரா யிருப்பதற்குப் பதிலாக, நம்மை அடியோ டொழித்து விட வேலை செய்து வருகிறுர். முஸ்லிம் சமுதாயத்தினராகிய நீங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி விடுவதால் மட்டும் உங்கள் லட்சியத்தை யடைந்து விட முடியாது. அந்த இலட்சியத்தை யடைவதற்கான சகல தியாகங்களும் செய்ய நீங்கள் தயாரா யிருக்க வேண்டும்."

மௌலானு மௌலவி அஹ்மத் ஸயீத் சாஹிப் ('ஸைபுல் இஸ்லாம்' ஆசிரியர்) இத் தீர்மானத்தை ஆதரித்துத் தமிழில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பாகிஸ்தான் திட்டம் முஸ்லிம் சமூகத்துக்கு நலன் தரக்கூடிய தென்பதை உணர்ந்து, அத்திட்டத்தை யாதரிப்பதில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களைப் பார்க்கிலும் 100-க்கு 7 விகிதமாக சிறுபான்மை முஸ்லிம் மாகாணமாகிய சென்னை மாகாண முஸ்லிம்கள் எவ்வகையிலும் பின்னடைந்தவர்களாக இல்லை. இதற்கு நம் தமிழ் நாடெங்கும் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் பாகிஸ்தான் ஆதரிப்பு மகாநாடுகள் நடைபெற்றதை,

யும், இம் மகாநாட்டுக்கு இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் விஜயம் செய்து, இம் மகாநாடு வெற்றிகரமாக நடக்க அவர்கள் காட்டிய ஊக்கம், உற்சாகம், தியாகம் ஆகியவைகளையும் அத்தாட்சியாகக் கொள்ளலாம்."

முஸ்லிம்களின் உறுதியான முடிவு:

ஹாஜி ஸர். அப்துல்லா ஹாரூன் (ஸிந்து), தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முஸ்லிம்கள், ஹிந்துக்கள் மீதுள்ள நம்பிக்கையை அடியோடிழந்து விட்டனர். ஆதலால், அவர்கள், தங்களின் கதிமோட்சத்தையும், எதிர்கால வாழ்க்கையையும் ஹிந்துக்கள் வசம் ஒப்புவித்துவிட முடியாது. முஸ்லிம் சுதந்திரப்பிரதேசமொன்றுஇருக்க வேண்டுவதுநமதுபிறப்புரிமை. அதை எவ்வாறுயினும் பெறுவதென நாம் முடிவு செய்து விட்டோம்."

ஜனுப் முஹம்மத்உஸ்மான் (கல்கத்தா) தீர்மானத்தை ஆதரிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"முஸ்லிம்கள் ஜனநாயகத்தை எதிர்ப்பதாகக் கூறப்படுவது சுத்தத் தவறு. இந்தியாவில் பல்வேறு ஜாதியினர் வசிக்கின்றனர்.ஒவ்வொருஜாதியினருக்கும்; அவரவர்களுக்குச் சொந்தமானசர்க்கார்ஒன்று இருக்கவேண்டுவது அவசியம். இதற்குப்பாகிஸ்தான் ஒன்று தான் தக்க பரிகாரம். இங்கு கூடியிருக்கும் டெலிகேட்டுகள், இந்தியாவின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளுக்கும் இச் செய்தியைக் கொண்டு செல்ல வேண்டுமென்பதே நமது விருப்பம்."

மௌலானு அப்துல் வஹ்ஹாப் சாஹிப் புகாரீ (சென்னை) தீர்மானத்தை ஆதரிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"ஹிந்துக்களும், இதர சிறுபான்மையினரும் முஸ்லிம்களைப்பற்றிக் கொஞ்சமும் அஞ்ச வேண்டுவதில்லை. முஸ்லிம்கள், உண்மையில் இதர சமூகத்தினரை ஒடுக்கி விடவும், அவர்களின் நியாயமான உரிமைகளை மறுக்கவும் கருதுவார்களானால், அதை எவ்வித கஷ்டமுமின்றி நிறைவேற்றி விட்டிருப்பர். ஆனால், முஸ்லிம்கள் நீதியையும், நேர்மையையுமே கோருகிறார்கள்.

இதற்குப் பின் "அல்லாஹு அக்பர்" என்ற பலத்த தக்பீர் கோஷ ஆரவாரத்திடையே தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

* * *

இதர திருத்தங்கள் :

பின்னர், அ. இ. முஸ்லிம் லீக் காரியதரிசி, நவ்வாப் ஜாதா லியாகத் அலிகான் அவர்கள், விஷயாலோசனைக் கமிட்டியால் நிறைவேற்றப்பட்ட சட்டத் திருத்தப் பிரேரணைகளை ஒன்றன்பின்னொன்றாகப் பிரரேபித்தார். அவையனைத்தும், எவ்வித எதிர்ப்புமின்றி, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

"ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தேர்தல் மூலமும், எக்ஸ் அபீஷியோவாகவும் அ. இ. முஸ்லிம் லீக் நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள அங்கத்தினர்களைத் தவிர, தம் உசிதப்படி 20 அங்கத்தினர்கள் வரை மாகாண விகிதாசாரத்திற்கேற்ப அதிகப்படியாக நியமிக்கத் தலைவருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது."

என்பது மேற்கண்ட திருத்தங்களில் ஒன்றாகும். மற்றொரு திருத்தம் பின்வருமாறு கூறுகிறது:—

"மாகாண லீக்கின் தலைவரும், காரியதரிசியும், அ. இ. முஸ்லிம் லீக் நிர்வாக சபையில் எக்ஸ்அபீஷியோ அங்கத்தினரா யிருப்பார்."

மற்றொரு திருத்தம் வருமாறு:—

"காரியக் கமிட்டியின் முடிவுப்படியோ, உத்திரவின்படியோ தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறுபவர்களும், அவைகளைப் புறக்கணிப்பவர்களுமான மாகாண முஸ்லிம் லீக் உத்தியோகஸ்தர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள காரியக் கமிட்டிக்கு அதிகாரமளிக்கப்படுகிறது."

அகில இந்திய முஸ்லிம் லீக் நிர்வாகக் கூட்டங்களின் எண்ணிக்கை சம்பந்தமாக உள்ள 20-வது விதியில்,

"ஒரு வருஷத்தில் குறைந்தது கௌன்ஸிலின் கூட்டங்கள் நான்காவது கூட்டப்பட வேண்டும்" என்றிருப்பதற்குப் பதிலாக,

"ஒரு வருஷத்தில் குறைந்தது கௌன்ஸிலின் கூட்டங்கள் இரண்டாவது கூட்டப்பட வேண்டும்"

என்று மற்றொரு தீர்மானத்தால் திருத்தப்பட்டது.

* * *

தீர்மானம் – 2.

காங்கிரஸ் சத்தியாக்கிரகம்

ஜனாப் இஸ்மெயில் சந்திரிகார் (பம்பாய்), காங்கிரஸ் சத்தியாக்கிரக சம்பந்தமாகப் பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

"காங்கிரஸின் சார்பாகக் காந்திஜியால் பேச்சுரிமைக்காக வென்று ஆரம்பிக்கப்பட்டுள்ள தற்போதைய சட்டமறுப்பியக்கம், உண்மையில் இந்தியாவின்எதிர்கால அரசியல் சம்பந்தமாகக்காங்கிரஸின் கோரிக்கைகளுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கும்படி வற்புறுத்துவதற்காகவே ஆரம்பிக்கப்பட்டதென்றும், இதன்முக்கியகருத்து,எல்லா நிர்வாக அதிகாரங்களும் ஹிந்துக்களின்வசமே மாற்றப்பட்டு, நாடெங்குமுள்ள 10 கோடி முஸ்லிம்களையும், இதர சிறுபான்மையினரையும் ஹிந்து ராஜ்யத்துக் கடிமைப்படுத்துவதேயாகுமென்றும் அ. இ. முஸ்லிம் லீக்கின் இம்மகாநாடு திட்டமாக அபிப்பிராயப்படுகிறது.

"ஆதலால், முஸ்லிம் லீக்கின் அங்கீகாரமின்றி இடைக்காலமானதோ அல்லது முடிவானதோ உள்ள அரசியல் மாறுதல் ஏதாவது செய்யப்பட்டால், அது பிரிட்டிஷ் சர்க்கார் மீது இந்திய முஸ்லிம்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இழந்து விடும்படி செய்வதுடன், இந்திய முஸ்லிம்களுக்கு 1940 வருஷம் ஆகஸ்டு மாதம் 8-ந் தேதி வெளியான மே. த. வைஸ்ராய் அறிக்கையோடு முடிவாகும் பிரிட்டிஷ் சர்க்காரின் முன் வாக்குறுதிகளுக்கும், அவற்றை ஆதரித்து 1940ஹு ஆகஸ்டுமீ 14உ இந்தியா மந்திரி வெளியிட்ட அறிக்கைக்கும் மாறுனதாகுமென்று பிரிட்டிஷ் சர்க்காருக்கு அறிவித்துக் கொள்ளுகிறது.

"இதுவன்றி, மேற்கண்ட வாக்குறுதிகளும், அறிக்கைகளும் எவ்வகையிலேனும் மீறப் படவோ, திருத்தப்படவோ முயற்சிக்கப்படுமா யின், முஸ்லிம்கள் தங்களால் சாத்தியமான ஒவ் வொரு வழியிலும் அதனை எதிர்க்கும்படி நேரிடு மென பிரிட்டிஷ் சர்க்காருக்கு இம்மகாநாடு எச்ச ரிக்கை செய்ய விரும்புகிறது."

ஜனுப் இஸ்மெயில் சந்திரிகார், மேற்படி தீர்மானத் தைப் பிரேரணை செய்து பேசுகையில், பின்வருமாறு குறிப் பிட்டார்:—

"காங்கிரஸின் சத்தியாக்கிரக இயக்கமானது, இந் நாட்டில் ஒரு ஹிந்து ராஜயம் ஏற்பட வேண்டுமென்ற இலட்சிய முடைய காங்கிரஸின் கோரிக்கையை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவ தற்காகவே ஆரம்பிக்கப்பட்டதாகும். பிரிட்டிஷ் சர்க்கார், முஸ்லிம் லீக்கின் பலத்தை யுணர்ந்துக்கொண்டு விட்ட னர். இதனுல் தான், ஷை தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள அறிக்கைகள் வெளியிடப்பட்டன. காங்கிரஸால் செய்யப் படும் வற்புறுத்தலின் காரணமாகப் பிரிட்டிஷ் சர்க்கார், ஷை அறிக்கையை மீற முயற்சித்தால், அத்தகைய முயற் சியை முஸ்லிம்கள் எதிர்ப்ப ரென்பதைப் பிரிட்டிஷ் சர்க் காருக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். பிரிட்டிஷ் சர்க்கார் அரசியலில் அடிக்கடி பல தவறுகள் இழைத்தி ருக்கிறுர் களென்பதை நாம் அறிவோம். ஆதலால், காங் கிரஸுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் சரணடைய முற்பட் டால், காங்கிரஸினுல் அவர்களனுபவித்த கஷ்டங்களைக் காட்டிலும், முஸ்லிம் லீக்கிடம் அதிக கஷ்டங்களை அனுப விப்பரென்று இத்தீர்மானம் தெளிவாக விளக்குகிறது."

சிறை செல்வதால் விடுதலை யுண்டா?:

ஸர்தார் ஒளரங்கஜேப்கான் (வடமேற்கெல்லைப்புறம்), தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஸீக்கியர்கள் ஒரு காலத்தில் இந்நாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தன ரென்பதற்காக "சீக்கிஸ்தான்" கோரிக்கை யொன்று பிரஸ்தாபிக்கப்படுகிறது. முஸ்லிம்கள் இந்நாடு முழுமையையும் ஆண்டுவந்தன ரென்பதற்காக இந்நாடு முழுவதும் முஸ்லிம்கள் வசமே ஒப்புவிக்கப்பட வேண்டுமெனக் கோரப்படலாம். ஆனால், நாம் அவ்வாறு கோரவில்லை. முஸ்லிம்களாகிய நாம் மறைமுகக் கொள்கையுடையவர்களல்ல. எந்த விஷயத்திலும் நாம் நேர்முகமாகவே நடந்துக் கொள்ளுகிறோம். நாம் கலைப்பூர்வமான மக்கள். ஆதலால் நம்மிடம் தாராள மனோபாவம் வெகுவாகக் காணப்படுகிறது. இதனால் தான், முஸ்லிம்கள் பெரும்பான்மையாயுள்ள பிரதேசங்களில் மட்டும் சுயஆட்சி வேண்டுமென்று நாம் கோருகிறோம். காங்கிரஸும், ஹிந்து மகா சபையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகும். "ஏ" வகுப்புக் கைதிகளாக சிறை சென்றுவிடுவதால் மட்டும் சுசந்திரம் கிடைத்து விடாது. துருக்கி, தனது சுதந்திரத்திற்காகக் காஜி முஸ்தபா கமால் பாஷா 'ஆதாதுர்க்' மர்ஹூமவர்களின் தலைமையின் கீழ் போராடியது. இன்று, யூகோஸ்லாவியா, தன் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நம் கண் முன் போரிட்டு வருவதைக் காண்கிறோம். அது போன்றே இந்தியச் சுதந்திரமும், செயல் மூலமாகவே பெறப்பட வேண்டும். எனவே, காங்கிரஸ் தலைவர்களும், ஹிந்து மகா சபைத் தலைவர்களும் இம்மேடைக்கு வந்து முஸ்லிம்களோடு சேர்ந்து சுதந்திரப் போர் தொடுக்க முன்வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தீவிரமாக எதிர்ப்போம் :

"காந்திஜீ சுதந்திரம் கோருகிறார்; அச் சுதந்திரம், தம்மிடமே அளிக்கப்பட்டு, தம் விருப்பப்படியே தம்மால் விநியோகிக்கப்பட வேண்டுமெனக் கோருகிறார். காந்திஜீ, பீரங்கி முனையில் சுதந்திரம் பெறவிரும்பவில்லை. ஆனால், சர்க்கா (ராட்டினம்) வினால் பெற விரும்புகிறார். நீங்கள் தீவிரமாக அரசியலில் ஈடுபட வேண்டிய காலம் இதுதான். பிரிட்டிஷ் சர்க்கார், முஸ்லிம்களை அனாவசியப் படுத்திப் புறக்கணித்து விடுவார்களாயின், காங்கிரஸின் எதிர்ப்பைப் போன்று அவர்கள் எதிர்க்கப்பட மாட்டார்களென்பதையும், வேறு முறையில் எதிர்க்கப்படுவரென்பதையும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு இத் தீர்மானத்தின் மூலம் எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். நீங்கள் இதை அறிகிறீர்கள் என்று நம்புகிறேன். நாங்கள், காந்திஜீயின் சுதேசி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வருவதைப் போன்றே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் எதிர்ப்போம்."

பாகிஸ்தானுக்காகத் தியாகம் :

நவ்வாப் முஹம்மத் இஸ்மெயில் (பீஹார்), தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில், பின்வருமாறு கூறினார்:-

"இந்தியாவின் அரசியல் கதிமோட்சங்கள், பிரிட்டிஷ் சர்க்கார், காங்கிரஸ் ஆகியவைகளுடன் நின்றுவிடாமல், மூன்றாவது சக்தியாகிய 'முஸ்லிம் சமுதாயத்' தினிடமும் இருப்பதாக சென்ற சில வருஷங்களில் முஸ்லிம் லீக் தெளிவாக நிரூபித்துக் காட்டி விட்டது. காங்கிரஸ் இன்று பேச்சுரிமைக்காகச் சத்தியாக்கிரகம் செய்து வருகிறது. ஆனால், இந்திய முஸ்லிம்கள், பாகிஸ்தான் இலட்சியத்தை படைய ஒவ்வொரு முயற்சியையும் செய்வரென்பது திண்ணம்."

எச்சரிக்கைகள் :

ஜனுப் ஸையத் அப்துல் மஜீத் (ஸிந்து) தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"காங்கிரஸின் 'பூச்சாண்டி'களுக்கும், பயமுறுத்தல்களுக்கும், அவர்களின் சத்தியாக்கிரகத்துக்கும், பிரிட்டிஷ் சர்க்கார் பணிந்து விடக் கூடாது. பிரிட்டிஷ் சர்க்காரும், காங்கிரஸும் முஸ்லிம்களின் கோரிக்கைகளைப் புறக்கணியாதிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறேன். இன்று முஸ்லிம்கள், தனியாக முஸ்லிம் லீக் கொடியின் கீழ், ஜனுப் ஜின்னுவின் தலைமையில் ஒன்று கூடி நிற்பதற்குக் காரணம், முஸ்லிம்களின் கோரிக்கைக்கு காங்கிரஸ் இணங்கும்படி செய்வதற்காக ஹகீம் அஜ்மல்கான், டாக்டர் அன்சாரி, அலி சகோதரர்கள் போன்ற காலஞ்சென்ற தலைவர்கள் காங்கிரஸுக்குச் செய்த தியாகங்களையும், ஒத்துழைப்புகளையும் காங்கிரஸ் உணராமற் போய்விட்டதேயாகும். ஆதலால், பிரிட்டிஷ் சர்க்காரும், காங்கிரஸும் முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, அவர்களிடம் நியாய முறையில் சமரஸம் செய்து கொள்வதற்குச் சீக்கிரமாக முன்வர வேண்டுமாக அறிவித்துக் கொள்ளுகிறேன்."

ஜனுப் ஸையத் முஹம்மத் சாஹிப் (தொண்டி சேர்மன்) தீர்மானத்தை ஆதரித்துத் தமிழில் பேசிய பின், தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

* * *

9. இறுதிக் கூட்டம்

அகில இந்திய முஸ்லிம் லீக் 28-வது (சென்னை) மகாநாட்டின் இறுதிக் கூட்டம் 15—4—41 செவ்வாய் மாலை (புதன்கிழமை இரவு) 9-45 மணிக்கு எஸ். ஐ. ஏ. ஏ. கிரவு

ண்ட்ஸ் "ஜின்னுஹ் ஆபாத்"தில் ஆரம்பமாகியது. தேக சுகவீனத்தின் காரணமாக 'காயிதே ஆஜம்' ஜனுப் முஹம்மத் அலி ஜின்னு அவர்கள் மகாநாட்டுக்கு வர இயலாது போய் விட்டபடியால், அ. இ. முஸ்லிம் லீக் காரியதரிசி நவ்வாப்ஜாதா லியாகத்அலிகான் அவர்கள் தலைமை வகித்தார்.

ஆரம்பத்தில் நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான் அவர்கள், "காயிதே ஆஜம்" அவர்களுக்கு காய்ச்சலிருப்பதாகவும், சபையினரனைவரும் அவரது தேக சுகத்திற்குப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்.

* * *

தீர்மானம் - 3.

மாகாண தேர்தல்கள் :

பின்னர், ஸர்தார் அவ்ரங்கஜேப்கான் (வடமேற்கெல்லைப்புறம்) பின்கண்ட தீர்மானத்தைப்பிரேரணை செய்தார்:-

"அடுத்து வரும் மாகாண சட்டசபைகளின் தேர்தல்களை குறைந்தபட்சம் 1935 ஆண்டு இந்திய சர்க்கார் மாகாண சுயாட்சி நடைபெறும் மாகாணங்களிலும், ஓர் உறுதியான சர்க்கார் ஏற்பட முடியுமென உறுதியாகக் கூறக் கூடிய வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் ஒத்தி வைக்கக் கூடாதென்று அ .இ. முஸ்லிம்லீக்கின் இம்மகாநாடு பிரிட்டிஷ் சர்க்காரை வெகு அழுத்தமாக வேண்டிக் கொள்ளுகிறது."

ஸர்தார் அவ்ரங்க ஜேப்கான் அவர்கள், மேற்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்து பேசுகையில் கீழ்காணுமாறு கூறினர்:—

"நமது மாபெருந் தலைவர், "காயிதே ஆஜம்" அவர்கள் நேற்று கூறியபடி, முஸ்லிம் பொது மக்களிடம் முஸ்லிம் லீக்குக்குச்செல்வாக்கோ,உரிமையோகிடையாதெனக்காண் பிக்ககாங்கிரஸ்முயன்று வருகிறது.பிரிட்டிஷ்சர்க்கார்,முஸ் லிம்களின் உரிமைகளையும், கோரிக்கைகளையும் புறக் கணித்துவிட்டு, தன் கோரிக்கைகளைமட்டும் ஏற்க வேண்டு மென பிரிட்டிஷ் சர்க்காரை வற்புறுத்துவதற்காக காங்கி ரஸ் எல்லா முயற்சிகளையும் கையாண்டு வருகிறது.

செல்வாக்கு யாருக்கு? :

"நாட்டில் உள்ள சட்டசபைகளின் 500 முஸ்லிம் ஸ்தானங்களில், 450 ஸ்தானங்கள், முஸ்லிம் லீக் டிக்கட் டின் மீது தேர்ந்தெடுக்கப்பட்டவையாகுமென்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதிலிருந்து முஸ்லிம் பொது மக்களிடம் யாருக்குச் செல்வாக்கு இருக்கிறது? முஸ்லிம் லீக்குக்கா? காங்கிரஸுக்கா? என்பது தெளிவாக விளங்கி விடும். வடமேற்கு எல்லைப்புற மாகாணம் சம்பந்தப்பட்ட வரை, அம் மாகாணத்தில் முஸ்லிம்கள் இனி காந்திஜீயின் மந்திரத்தாலோ.அவரதுசிஷ்யரான கான் அப்துல்கப்பார்கா னின் மந்திரத்தாலோ கட்டுண்டவர்களாக இருக்கமாட்டார் களென்பது திண்ணம். அங்கு புதிய தேர்தல்கள் நடத்தப் படுமாயின், அங்குள்ளமுஸ்லிம்கள்காந்திஜீயை ஆதரிக்கிறார் களா? அல்லது முஸ்லிம் லீக்கை ஆதரிக்கிறார்களா? என் பது வெட்ட வெளிச்சமாகி விடும். காங்கிரஸ், கிலாபத் என்னும் போர்வையின் கீழ் தான் வடமேற்கெல்லைப்புற மாகாணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போது முஸ்லிம் லீக்கின் அபார முயற்சியின் பயனாக அங்கு இனி மேல் பொது மக்களைக் காங்கிரஸால் ஏமாற்றிவிட முடியா தென்பது நிச்சயம். பாகிஸ்தான் பிரிவினைப்படியான முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களில் முஸ்லிம் லீக்கே பூரண செல்வாக்கடைந்திருக்கிறதென்பதைத் தேர் தல்கள் நிரூபித்துக் காட்டிவிடும். இதுவன்றி, ஒரு புதிய

தேர்தல் நடத்தப்பட்டால், சட்டசபைகளில் முஸ்லிம் லீக்கின் பெரும்பான்மை ஏற்பட்டு விடுமென்பதில் சந்தேக மில்லை. ஆதலால், இத் தீர்மானத்தைப் பிரிட்டிஷ் சர்க் கார் கவனித்து அதற்கிணங்கும்படி கேட்டுக் கொள்ளு கிறேன்."

"'பாகிஸ்தான்' அல்லது மரணம்":

ஜனுப் யூசுப் ஹாரூன் (ஸிந்து), ஷை தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:—

"சென்ற பொதுத் தேர்தல்களின் போது, எல்லைப்புற மாகாணத்தில் முஸ்லிம் லீக் இன்றிருப்பதைப்போல் மிகப் பலம் பொருந்தியதாக இருக்கவில்லை. ஆகவே, அங்கு காங்கிரஸ் பெரும்பான்மையை அடைந்து விட்டது. ஒரு புதிய தேர்தல் நடத்தப்பட்டால், அங்குள்ள முஸ்லிம் களனைவரும் முஸ்லிம் லீக்கையும், அதன் பிரதம இலட்சி யமாகிய பாகிஸ்தான் திட்டத்தையும் ஆதரிப்பவர்களா யிருக்கின்றனரென்பதை நீங்கள் உணர்ந்துகொள்வீர்கள்.

"இதுபோன்றே ஸிந்து மாகாணத்திலும் ஒரு புதுத் தேர்தல் நடத்தப்படுமாயின், முஸ்லிம்கள், முஸ்லிம் லீக் மீது எவ்வளவு பற்றுகொண்டுள்ளனரென்பதைஅது நன்கு நிரூபித்துக் காட்டிவிடும்; வருஷத்திற்கொருமுறைமந்திரிச் சபை மாற்றப்படவேண்டியதொந்திரவும் இல்லாதொழிந்து போய்விடும்.முஸ்லிம்லீக்கினர்என்றுதங்களைக் கூறிக்கொள் ளும்ஒருசிலமாகாணங்களின்முஸ்லிம்மந்திரிகள் சிற்சில சம யங்களில் முக்கியமான விஷயங்களில் முஸ்லிம் லீக்குடன் இணைந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள். ஒரு தேர்தல் நடைபெறுமாயின், இவர்களனைவரும் வெளியேற்றப்பட்டு விடுவரென்பது திண்ணம். 'பாகிஸ்தான் அல்லது மரணம்; இரண்டிலொன்று' இதுவே உங்கள் தேர்தல் கோஷமாக இருக்க வேண்டும்."

வேலூர், மௌலானா மௌலவி எஸ். கே. முஹம் மத் ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் தீர்மானத்தைத் தமிழில் ஆதரித்து சொற்பொழி வாற்றிய பின் தீர்மானம் ஏகமன தாய் நிறைவேறியது.

* * *

தீர்மானம் - 4.

5 வருஷ பொருளாதாரத் திட்டம்:

ஜனாப் ஸையத் அப்துல் ரவூப் ஷா (காரியக் கமிட்டி அங்கத்தினர்) பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய் தார்:—

“முஸ்லிம் பொது மக்களின் கல்வி, பொரு ளாதாரம், சமூக, அரசியல் முன்னேற்றத்திற்கு ஒரு ஐந்து வருஷத் திட்டம் தயாரிப்பதற்காக கீழ்க் கண்டவர்களடங்கிய ஒரு கமிட்டி நியமிக் கப்பட வேண்டுமாக அ. இ. முஸ்லிம் லீக் இம் மகாநாடு தீர்மானிக்கிறது:—

“கனம் மஹ்மூதாபாத் ராஜா (கன்வீனர்), சௌத்ரீ கலீகுஜ்ஜமான், எச். இஸ்பஹானி, ஐ. ஐ. சந்திரிகார், டாக்டர் எஸ். என். ஏ. ஜாபரீ, ஸர் ஜியாவுத்தின் அஹ்மத், கனம் ஹுஸேன இமாம், ஹாஜி ஸர் அப்துல்லா ஹாரூன்”

“இக் கமிட்டிக்கு தன் இஷ்டத்திற்கேற்ப இன்னும் அதிக அங்கத்தினர்களைச் சேர்க்க அதிகாரமுண்டு. இக் கமிட்டி 6 மாதங்களுக் குள் அகில இந்திய முஸ்லிம் லீக் காரியக்கமிட் டிக்குத் தனது ரிப்போர்ட்டை சமர்ப்பித்து விட வேண்டும்.”

நிர்மாண வேலைகள் அவசியம்:

ஜனுப் ஸையத் அப்துர் ரவூப்ஷா மேற்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்கையில், பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"முஸ்லிம் சமுதாயத்தினர் எல்லாத் துறைகளிலும் பிற்போக்காகவே இருந்து வருகிருர்கள். அவர்கள் ஒவ்வொரு துறையிலும் முன்னேற வேண்டுவதசியம். முஸ்லிம் பொது மக்களின் பொருளாதார நிலையை விருத்தி செய்வதற்காக தங்களால் சாத்தியமான எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப கமிட்டி, மக்களின் முன்னேற்றத்திற்குத் தகுதியான ஒரு திட்டத்தை வகுக்கும். இத்திட்டம் வெற்றிகரமாக வகுக்கப்படுவதிலும், நிறைவேற்றப் படுவதிலும் முஸ்லிம் லீக்கின் அங்கத்தினர்களனைவரும் ஒத்துழைப்பரென நம்புகிறேன்."

ஜனுப் முப்தீ பஜ்லுல் இஸ்லாம் (ஐக்கிய மாகாணம்) தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஒவ்வொரு முஸ்லிமும், இந்தியாவின் கைத் தொழில்களையும், கிராமத் தொழில்களையும் ஆதரிக்கக்கடமைப் பட்டிருக்கிருர்கள். முஸ்லிம் பொதுமக்க ளனைவரும் இந்தியக் கைத் தொழிலையும், கிராமத் தொழில்களையும் ஆதரிப்பதன் மூலம், தங்களின் பொருளாதார நிலையைவளர்ச்சி யடையச் செய்து கொள்ள வேண்டும். நீங்கள் திரு விழா போன்ற வீண் டாம்பீகக் கொண்டாட்டங்களில்பணத்தை விரயம் செய்துவிடக் கூடாது. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி வேலைகளில், கூட்டுறவுச் சங்கங்கள்,வாசக சாலைகள், இராப் பள்ளிக் கூடங்கள், வயது வந்தவர்களுக்குக் கல்விச் சாலைகள் முதலியவைகளும் அடங்கி யிருக்கின்றன. இந்த நிர்மாண வேலை

களைச் செய்வதில் முஸ்லிம்களனைவரும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

செயலில் இறங்குக!:

ஜனாப் முஹம்மத் நவ்மான் (அலிகர்) தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"போதுமான கல்வியும், போதுமான செல்வமும், போதுமான அரசியல் உணர்ச்சியுமில்லாத எந்த ஒரு சமுதாயமும் முன்னேற்றமடைந்துவிட முடியாது. முஸ்லிம்கள் பொதுவாக இம்மூன்று துறைகளிலும், குறிப்பாகக் கல்வித் துறையிலும்மிக மிகப் பிற்போக்கான நிலையிலிருந்து வருகின்றனர். முஸ்லிம்களுக்குநிர்மாணத்திட்டவேலைகள்கிடையாதெனக் கூறப்படுவது சரியல்ல. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளகமிட்டியார்ஒன்றுகூடிநன்றாக ஆலோசனைசெய்த பின், முஸ்லிம்கள் இன்னும் சந்தோஷமாகவும், பொருளாதாரத் துறையில் மேன்மையாகவும் வாழக்கூடிய, அனுஷ்டான சாத்தியமான திட்டமொன்றை வகுப்பர். முஸ்லிம்கள் தங்கள் நிர்மாணத்திட்டங்களில் ஊக்கமாகவும், உணர்ச்சியோடும் வேலை செய்யவேண்டும். இது செயலில் இறங்க வேண்டிய காலம். நாம் வேலைகளைத் திறமையாகச் செய்வோம் என்பதை நிரூபித்துக் காட்டுவோமாக!"

எளிய வாழ்வைப் பின்பற்றுக!

பேகம் ஹபீஸுத்தீன் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் கூறிப்பிட்டதாவது:—

"முஸ்லிம்கள், ஆடம்பரமான உடைகளில் செலவத்தை விரயஞ் செய்கிறார்கள். நீங்களனைவரும் எளிய உடைகளணியும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும், குறிப்பாக முஸ்லிம்களின் கைத்தொழில்களை நீங்கள் ஆதரிக்க வேண்டும். காங்கிரஸின் கதர் திட்டத்தைப் பாருங்

கள். ஹிந்துப் பெண்களின் பொருளாதார நிலையை அது ஒருவாறு உயர்த்தியிருக்கிறது. அவர்கள் எளிய வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். கல்வியிலும், அவர்கள் முன்னேற்ற மடைந்து விட்டிருக்கிறார்கள். முஸ்லிம்களும் அது போன்றே கல்வி, பொருளாதாரத் துறைகளில் அபிவிருத்தியடைய வேண்டும். இஸ்லாத்தின் திருத் தூதரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எளிய வாழ்க்கையைப் பின்பற்றி முஸ்லிம்கள் நடந்துக் கொள்ள வேண்டும். நீங்கள் அனாவசிய வீண் ஆடம்பரச் செலவுகளையெல்லாம் அகற்றி விட வேண்டும். முஸ்லிம் பெண்களுக்கு அவர்களின் பிற்கால வாழ்க்கையில் முன்னேற்றமளிக்கக் கூடிய எல்லா வகைக் கல்வியும் நல்ல முறையில் அளிக்கப்பட வேண்டும்."

ஒரு தினசரியின் வீண் பழி :

ஜனாப் கே. எம். ஸீதி சாஹிப் (மலையாளம்) தீர்மானத்தை ஆதரிக்கையில், பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"சென்னையிலிருந்து வெளியாகும் தினசரியொன்று, ஜனாப் ஜின்னா அவர்களின் தலைமைப் பிரசங்கம் பற்றி வரைந்துள்ள தலையங்கத்தில், 'மக்கள் உணவுக்காக எதிர்பார்த்திருக்கையில், ஜனாப் ஜின்னா கற்களைக் கொடுத்தார்' என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த உபமானம் முஸ்லிம் லீக்கின் வேலைத் திட்டத்திலோ அல்லது ஜனாப் ஜின்னாவின் இலட்சியங்களிலோ எவ்வாறு பொருந்துமெனவிளங்கவில்லை. இது உப்பு சப்பில்லாத ஒரு வாக்கியம். மேலும், அதே பத்திரிகையில், 'முஸ்லிம்களுக்கு ஒரு குறிப்பான நிர்மாணத் திட்டங்கள் கிடையா' என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இது ஒரு பிற்போக்கான மனோபாவம். ஜனாப் ஜின்னா அவர்கள், தமது தலைமைப் பேருரையில் முஸ்லிம் சமுதாயத்தின் பொருளாதார, அரசியல், சமூகம் முதலிய துறைகளின் வளர்ச்சிக்காக ஒரு 5 வருஷத் திட்டம் தயாரிக்கப்படுமெனத் தெளிவாகக் கூறியிருக்கிறார். 1937-ம்

ஆண்டில் லக்னோவில், பொருளாதாரம், அரசியல் ஆகிய திட்டங்கள் பூர்வாங்கமாக வகுக்கப்பட்டு, எல்லா பிரைமரி லீக்குகள் அத் திட்டங்களின்படி நடக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தத் துறையில் முஸ்லிம் லீக் கவனம் செலுத்த இதுவரை அவகாசமேற்படவில்லை. இந்த வேலையில் அடுத்த ஐந்து வருஷம் செலவிடப்படுமென ஜனுப் ஜின்னு தெளிவுபடுத்தி விட்டிருக்கிறார்."

பின்னர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

* * *

தீர்மானம் - 5.

ஜனுப் ஜின்னுவுக்கு விசேஷ அதிகாரங்கள் :

கனம் மஹ்மூதாபாத் ராஜா (ஐ. மா.) பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

"முஸ்லிம் லீக்கின் இலட்சியங்கள் சம்பந்தமாகவும், அவைகளைப் பெரும் விஷயத்திலும், அடுத்த வருஷாந்திர மகாநாடு வரை தலைவர், தமக்கு உசிதமான எந்த அவசிய நடவடிக்கையையும், செயலையும் மேற்கொள்ள இம்மகாநாடு தலைவருக் கதிகார மளிக்கிறது. ஆனால், அவை லீக்கின் இலட்சியங்களுக்கோ, அ.இ. முஸ்லிம் லீக்கின் தீர்மானங்களில் ஏதேனுமொன்றுக்கோ மாருனதா யிருக்கக் கூடாது."

கனம் மஹ்மூதாபாத் ராஜா அவர்கள், இத்தீர்மானத்தைப் பிரேரணை செய்து பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"இந்த விசேஷ அதிகாரங்கள் முஸ்லிம் லீக்கின் நலனை நாடி அளிக்கப்பட்டவையே யாகும். இவ்வாறு விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்படுவது அவசியம். அவசர காலங்களில் காரியக் கமிட்டியைக் கூட்டிக் கொண்டிருப்பது சாத்தியமில்லை. நாட்டின் அரசியல் நிலை வெகு வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. ஆதலால், காரியக் கமிட்டி அடிக்கடி கூடுவது முடியாத காரியம். நாம் இந்த அதிகாரங்களை ஜனாப் ஜின்னாவுக்கு அளிப்பது சர்வாதிகாரத்தை யளிப்பதாக ஆகிவிடாது. இவ்வதிகாரங்கள் நமது தலைவர் மீதும், அவரது தலைமைப் பதவியின் மீதும் நாம் பெரும் நம்பிக்கைக் கொண்டுள்ளோமென்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இதனால் முஸ்லிம் சமுதாயத்திற்கு வளர்ச்சி ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை."

வேறு அட்மிரல் துர்லபம்:

ஜனாப் ஹஸன் இஸ்பஹானி (வங்காளம்) தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"முஸ்லிம் சமுதாயம், பல கஷ்டப் பிரச்னைகளை எதிர்த்து நிற்க வேண்டிய சம்பவங்கள் பல முறைகளில் ஏற்பட்டன. அது காலை நமது கப்பலை நடத்திச் செல்லவும், ஒன்பது கோடி முஸ்லிம் பொதுமக்களின் கதிமோட்சத்தைப் பாதுகாக்கவும் ஜனாப் ஜின்னாவைத் தவிர நமக்கு வேறு எந்த திறமையுள்ள காப்டனும் கிடைக்கவில்லை. மகாநாட்டின் டெலிகேட்டுகள், இத் தீர்மானத்தை எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றி வைக்க வேண்டும்.

"ஐரோப்பாவில் பயங்கர ராட்சஸ நெருக்கடி யிருந்து வருகிறது. தூரக் கிழ்ப் பிரதேசத்திலிருந்து முரசொலி நம் காதுகளில் கேட்டுக் கொண்டிருக்கிறது. யுத்தம் நம் தலைவாயிலைத் தட்டிக் கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியான நிலையில், ஜனநாயகத்தால் ஒரு பயனுமில்லை. நமக்கு

ஒரு அட்மிரல் தேவை. ஜனப் முஹம்மத் அலி ஜின்னு வைத் தவிர இந்தப் பதவிக்கு லாயக்கானவர் வேறெவரு மில்லை."

முதன் முறை யல்ல :

ஜனப் மௌலானு ஜலால் மியான் (லக்னோ) தீர்மான த்தை யாதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முஸ்லிம் இந்தியாவின் குரலோசைக்கு மதிப்பற்ற காலமொன்று இருந்தது. அதுகாலை முஸ்லிம்களுக்கு ஒரு ஸ்தாபனமு மில்லாதிருந்தது. ஆனுல், இன்று நிலைமை மா றுதலடைந்து விட்டது. பல இலட்சக்கணக்கான முஸ்லிம் பொதுமக்கள்நல்லகட்டுப்பாடுடையவர்களாகவும், முஸ்லிம் லீக் கொடியின் கீழும், ஜனுப் ஜின்னு அவர்களின் தலைமை யின் கீழும்ஒழுங்கான முறையில் ஒற்றுமையடைந்துமிருக் கின்றனர். இதனுல், முஸ்லிம்லீக் ஒரு பெரும் சக்திவாய்ந்த ஸ்தாபனமென்பதை காங்கிரஸும் பிரிட்டிஷ் சர்க்காரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

"முஸ்லிம் லீக், ஜனுப் ஜின்னுவுக்கு அதிகாரமளிப்பது இது முதன் முறையல்ல. மே. த. வைஸிராயவர்களிடம் பேசும்படி பாட்னுவில், இதற்கு முன் ஜனுப் ஜின்னு அவர் கட்கு அதிகாரமளிக்கப் பட்டிருக்கிறது. காங்கிரஸின் வா லாட்டம் செல்லு படியாகாத முறையில் அவர் தமது பொ றுப்பை நிறைவேற்றியிருக்கிறுர்."

அஞ்சாத வீர நெஞ்சம் :

ஜனுப் மஹ்பூப் அலி பேக் சாஹிப் (சென்னை) தீர் மானத்தை ஆதரித்துப் பேசுகையில் பின்வருமாறு குறிப் பிட்டார்:—

"ஜனுப் ஜின்னு அவர்களின் தலைமைப் பிரசங்கத்தை சென்னை நகர தினசரி யொன்று கண்டனம் செய்து

வரைந்ததற்கு இத் தீர்மானம் ஒரு தகுந்த 'வாயாப்பு' ஆகும். நாம் ஜனுப் ஜின்னு அவர்களுக்கு இவ்விசேஷ அதிகாரங்களை யளித்திருப்பதானது, நமக்கு அவர் மீது எத்துணை நம்பிக்கை யிருக்கிறதென்பதை தெளிவாக எடுத்து காட்டுகிறது. உண்மையில் ஜனுப் ஜின்னு அவர்கள் ஒருவர் மட்டுமில்லாதிருப்பாராயின், இத்துணை வருஷ காலமாக காங்கிரஸ் செய்துவரும் கொடுமைகளின் எதிரில் முஸ்லிம்கள் நிற்க முடியாது போய் விடுமென்பது திண்ணம். ஜனுப் ஜின்னு அவர்கள், எந்தக் கட்சிக்கும் பயப்பட்டவரல்ல; பிரிட்டிஷ் சர்க்காருக்கும் கூட அவர் அஞ்சுவதில்லை. அவர் இந்திய முஸ்லிம்களின் கோரிக்கைகளையும், உரிமைகளையும் பெறுவதற்குத் தம்மால் சாத்தியமான எல்லா வகைகளிலும் முயற்சித்து வருகிருர். ஜனுப் ஜின்னு அவர்கள் ஒரு வகுப்புவாதியெனக் கூறப்படுவது தவறு. அவர் ஒரு தேசிய வாதி. ஒரு உண்மை முஸ்லிம்; அவர் வசம் இந்திய முஸ்லிம்களின் நலன்கள் பாதுகாப்பாகவே இருக்கின்றன."

பின்னர், தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

* * *

தீர்மானம் - 6.

பெண்கள் உபகமிட்டி :

பேகம் எக்ஜாஸ் ரஸூல் (ஐக்கிய மாகாணம்) பின் கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

"1938-ம் ஆண்டு, டிஸம்பர் மாதத்தில் நடைபெற்ற பாட்னு அ. இ. முஸ்லிம் லீக் மகாநாட்டின் 6-வது தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அ. இ. முஸ்லிம் லீக் பெண்கள் உபகமிட்டியில் இன்னும் சில பெண்கள் சேர்க்கப்

பட வேண்டுமென இம் மகாநாடு தீர்மானிக்கிறது."

பேகம் எக்ஜாஸ் ரஸுல், தீர்மானத்தைப் பிரேரணை செய்து பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"பாட்னுவில் தோங்தெடுக்கப்பட்ட பெண்கள், தங்கள் முழு கவனத்தையும், லீக் தொண்டுகளில் ஈடுபடுத்த இயலவில்லை. ஆதலால், இதர ஒரு சிலரையும் இக் கமிட்டியில் சேர்த்துக் கொள்வது அவசியமாகிறது. இந்தப் பெயர்கள் மகாநாட்டினுல் ஒப்புக் கொள்ளப்பட வேண்டுமென லீக் விதிகள் கூறுகின்றன. எனவே, இந்தப் பெயர்களை மகாநாட்டினர் அங்கீகரிப்பரென நம்புகிறேன்.

பெண்கள் உப கமிட்டியின் தேவை :

"அ. இ. முஸ்லிம் லீக் மகாநாடு கூடும் சமயத்திலேயே நாங்களும் பெண்கள் உப கமிட்டியை கூட்டுகிறோம். மாகாண பெண்களின் உப கமிட்டிகள் திருப்திகரமாக வேலை செய்து வருகின்றன. இந்தியா வெங்கும் பெண்களை முன்னணிக்குக் கொண்டு வருவதில் இவை பேருதவி செய்திருக்கின்றன. முஸ்லிம் பெண்கள் அ. இ. முஸ்லிம் லீக் இன் வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பேருதவி செய்து வருகிறார்கள். இந்த பெண்கள் உப கமிட்டி, முஸ்லிம் பெண்களுக்குக் குர்ஆன் ஷரீபைப் போதிப்பதற்காக பல பள்ளிக்கூடங்களை நிர்மாணித்திருக்கிறது. வயது வந்தவர்கட்குக் கல்வி யளிக்க பல பள்ளிக்கூடங்களையும், பெண்களால் தயாரிக்கப்படும் பொருள்களை விற்பனை செய்ய பல கடைகளையும் ஏற்படுத்தி யிருக்கிறோம்."

நவ்வாப் ஜாதா லியாகத் அலிகான் அவர்கள் ஆதரித்த பின்னர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

* * *

தீர்மானம் - 7.

முஸ்லிம் தேச பாதுகாப்புப் படை:

ஜனுப் அஜீஸ் லால்ஜீ பின்வரும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்:—

"முஸ்லிம் தேசப் பாதுகாப்புப் படை, அமைப்பு, நிர்வாகம், ஆதிக்கம், சேர்க்கை முதலியவைகளைப்பற்றிய சட்ட திட்டங்களை வகுப்பதற்காகப் பின்கண்டவர்கள் அடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்றும், இக் கமிட்டி மூன்று மாதங்களுக்குள் அ. இ. முஸ்லிம் லீக் தலைவரிடம் தனது ரிப்போர்ட்டை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

"ஸர் கரீம்பாய் இப்ராஹீம் (கன்வீனர்), மஹ்மூதாபாத் ராஜா, யூசுப் அப்துல்லா ஹாருன், காஜி முஹம்மத் ஈஸா, அஜீஸ் லால்ஜீ, எம். இமாம்."

ஜனுப் அஜீஸ் லால்ஜீ தீர்மானத்தைப் பிரேரணை செய்கையில் குறிப்பிட்டதாவது:—

"ஒவ்வொரு முஸ்லிமும், தன்னுயிரினுமினிய இலட்சியமான பாகிஸ்தானைப் பெறுவதற்காக ஒவ்வொரு தியாகத்தையும் செய்யத் தயாராயிருக்க வேண்டும். தனிப்பட்டவர்களின் முயற்சிகளால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. ஆனல் ஒழுங்கான ஒரு சக்தி, கூட்டமாக ஒரே கட்டுப்பாட்டின் கீழ் வேலை செய்யுமாயின், இஸ்லாத்தின் சக்தி உலகெங்கும் ஆட்சி புரியுமென்பது திண்ணம்.

இஸ்லாத்திற்கு சேவை :

இஸ்லாம் மதம், ஒரு தனிப்பட்ட மனிதனுடைய ஆட்சியையும் ஒரு சிலர்களின் ஆட்சியையும் வற்புறுத்த வில்லை. ஆனால், ஆண்டவனின் ஆட்சி உலகில் ஏற்பட வேண்டுமென்றே அது வற்புறுத்துகிறது. ஆகவே, உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் இஸ்லாத்தின் செய்தியைக் கொண்டு செல்வது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் இன்றியமையாக் கடமையாகும். முஸ்லிம்கள் ஒன்றுபட்டு விட்டால், அவர்கள் தங்களை மட்டுமின்றி இதரர்களையும் பாதுகாத்துக் கொள்வரென்பது திண்ணம். எல்லாருக்கும் சேவை செய்ய வேண்டுமென்பதே இஸ்லாத்தின கட்டளையாகும். பொதுக் கூட்டங்களில் அமைதியை நிலவச் செய்வது மட்டுமே இந்த பாதுகாப்புப் படையினரின் வேலையல்ல. அவர்கள் இன்னும் செய்ய வேண்டிய சேவைகள் மகத்தானவை. அவர்கள் மானிட வர்க்கத்திற்குச் சேவை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முஸ்லிம் இளைஞரும், இத்தேசப் பாதுகாப்புப் படையில் சேர வேண்டுமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

பேகம் ஹபீபுல்லா தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முஸ்லிம் இளைஞர்களின் உற்சாகத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்காகஇத்தகையஸ்தாபனமொன்று அத்தியாவசியமாகும். முஸ்லிம் பெண்களும் இப்படையில் ஏராளமாகச் சேருகின்றனர். ஆனால், இஸ்லாமிய மார்க்கக் கட்டளைப்படி அவர்கள் ஒரு வரம்பிற்குட்பட்டவர்களாவர்."

ஜனாப் இஸ்மெயில், தீர்மானத்தை ஆதரிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முஸ்லிம் இளைஞர்கள் எல்லா தியாகத்துக்கும் தயாராயிருக்க வேண்டும்."

பின்னர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

*　　*　　*

தீர்மானம் - 8.

சர்க்கார் இலாக்காக்களில் முஸ்லிம்கள் :

கனம் ஹுஸேன் இமாம் (பீஹார்) பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

"பல்வேறு சர்க்கார் இலாக்காக்களில்-குறிப்பாக ரயில்வே இலாக்காக்களில்-முஸ்லிம் தொழிலாளர்கள் சரிவர நடத்தப்படாதது பற்றி முஸ்லிம் லீக் பல முறைகளில் சர்க்காரிடம் புகார் செய்துக் கொண்டிருப்பதுடன், இவற்றிற்கு உடனே பரிகாரம் தேடாவிடில், முஸ்லிம் லீக் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமென எச்சரிக்கை செய்திருந்தும் சர்க்கார் புறக்கணித்து விட்டதை இம் மகாநாடு பலமாகக் கண்டிக்கிறது"

கனம் ஹுஸேன் இமாம், தீர்மானத்தைப் பிரேரணை செய்கையில், "நாங்கள் யாரிடமிருந்தும் தாராளச் சலுகைகள் கேட்கவில்லை. எங்கள் உரிமைகளையே கேட்கிறோம். நாம் அவற்றைப் பெற்றே தீருவோம்" எனக் குறிப்பிட்டார்.

நவ்வாப் ஜாதா லியாகத் அலிகான், தீர்மானத்தை ஆமோதித்துப் பேசிய பின், ஏகமனதாக நிறைவேறியது.

*　　*　　*

தீர்மானம் - 9.

பதாயூன் போலீஸ்
துப்பாக்கிப் பிரயோகம் :

மௌலானா அப்துல் ஹமீத், பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

"ஐக்கிய மாகாணம், பதாயூன் ஜில்லா, உஜ்ஜயினி கிராம முஸ்லிம்கள் மீது போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, அதன் பயனாக 10 முஸ்லிம்கள் இறந்தும், 70 பேர் காயமுண்டும் போய் விட்டதற்கு இம் மகாநாடு வருந்துவதோடு, போலீஸாரின் செயலை இம் மகாநாடு பலமாகக் கண்டனம் செய்கிறது. இதுபற்றி ஐக்கிய மாகாண சர்க்கார் ஒரு தனிப்பட்ட நீதிவிசாரணை நடத்த வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறது. இத்துப்பாக்கிப் பிரயோகத்தால் பாதகமுண்டவர்கட்கு இம்மகாநாடு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது."

மௌலானா அப்துல் ஹமீத், தீர்மானத்தைப் பிரேரணை செய்கையில், பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"இந்தத் துரதிர்ஷ்டத் துப்பாக்கிப் பிரயோக சம்பவம், மாலை வேளை தொழுகையின் போது மஸ்ஜித் முன் மேள வாத்தியங்களுடன் ஊர்வலம் நடத்திச் செல்லப்பட்டதன் காரணமாக ஏற்பட்டது. சர்க்கார் ஒரு புறம், யுத்தத்திற்காக ஆட்களினுதவியும், பொருளுதவியும் கோருகிறது. ஆனால், மற்றொரு பக்கம் முஸ்லிம்கள் அனுபவித்த காங்கிரஸின் கொடுமைகளுக் கதிகமாகவே அவர்களைக் கொடுமைகளுக் குள்ளாக்குகிறது."

மௌலானா அக்ரம் அலி, தீர்மானத்தை ஆமோதித்த பின், தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

* * *

தீர்மானம் - 10.

இந்தோ சீனாவில் இந்தியர்கள் சொத்துக்கள் :

ஜனாப் ஸையத் முர்த்துஜா சாஹிப் எம். எல். ஏ.

(சென்டிரல்) (சென்னை) பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

"அநேக இந்திய வர்த்தகர்கள், தங்கள் பிரதான சொத்துகளை பிரஞ்சு இந்தோ சீனுவில் வைத்திருப்பதன் காரணமாக அவர்கள் தங்கள் வாழ்க்கைச் செலவுக்கான பணத்தை பிரெஞ்சு இந்தோ சீனுவின் பாங்குகளின் சொத்துக்களை, இந்திய சர்க்கார் குறைத்து, இந்தியபாங்குகளில் நிறுத்திவருவதாலும், இந்திய வர்த்தகர்கள் பிரெஞ்சு இந்தோ சீனு பாங்குகளிலிருந்து வாங்கிய பில்களை மாற்ற முடியாதிருந்து வருகிறது. எனவே, இந்திய வர்த்தகர்கள், தங்களுக்கு இந்தோ சீனுவின் ஏராள சொத்திருந்தும் பெருங் கஷ்டத்துக்குள்ளாகி வருவதால், பிரெஞ்சு இந்தோ சீனுவில் வதியும் இந்தியர்களைப் பொறுத்தவரையிலாவது இவ்வுத்திரவை ரத்துசெய்ய வேண்டுவதவசியமென இம்மாநாடு அறிவித்துக் கொள்ளுகிறது."

மௌல்வி ஸையத் முர்த்துஜா சாஹிப் அவர்கள், தீர்மானத்தைப் பிரேரணை செய்கையில், பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"இந்தத் தீர்மானம் இந்திய முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி, இந்தோ-சீனுவில் வர்த்தகம் செய்துவரும் ஹிந்துக்களுக்குக் கூட நன்மையே விளைவிக்கிறது. இந்திய சர்க்காரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அங்குள்ள இந்தியர்கட்குப் பெரும் கஷ்டங்களை உண்டாக்கி விட்டது. சென்ற மத்திய அசெம்பிளி வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது நானும், ஸ்ரீ. எம். எஸ். ஆனேயும் இந்தப் பிரச்னையைக் கிளப்பினேம். ஆனல், எங்களுக்கு சர்க்கார்

ரிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. முஸ்லிம் லீக், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, இக்தோசீனுவிலுள்ள இந்திய மக்களுக்கு ஆதரவளிக்குமென நம்புகிறேன்.''

ஜனுப் அஹ்மத் இப்ராஹிம் (சென்னை) தீர்மானத்தை ஆமோதித்த பின், ஏகமனதாய் நிறைவேறியது.

* * *

தீர்மானம் - 11.

இலங்கை இந்தியர்கள் துயர் :

ஜனுப் அப்துல் ஹமீத்கான், பின்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

"மே. த. இலங்கை கவர்னரவர்கள் மேற்கொண்ட நியாயமான மனுேபாவத்தை இம்மகாநாடு பாராட்டுகிறது. எனினும், இலங்கை வாழ் இந்தியர் விஷயத்தில் இலங்கை மந்திரிச் சபை பிற்போக்கான மனுேபாவத்துடன் நடந்துக் கொள்வதையும், இலங்கை இந்தியர்கட்கு எதிராக அளவு மீறிய சட்டங்களை ஏற்படுத்துவதையும் கண்டு இம் மகாநாடு மிகவும் வருந்துவதுடன், இந்திய சர்க்கார் இவ் விஷயத்தில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுவ தவசியமென்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறது."

இத் தீர்மானம் ஜனுப் அஹ்மத் இப்ராஹீம் அவர்களால் தமிழில் விளக்கிக் கூறப்பட்ட பின் ஏகமனதாக நிறைவேறியது.

* * *

தீர்மானம் - 12.

1941 — 42-ஆம் உத்தியோகஸ்தர்கள் :

காரியதரிசி:—பின்னர், அ. இ. முஸ்லிம் லீக் கௌரவக் காரியதரிசிப் பதவிக்கு மீண்டும் நவ்வாப் ஜாதா லியாகத் அலிகான் அவர்களே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென ஸர்தார் அவ்ரங்க ஜேப்கான் (வடமேற் கெல்லைப் புறம்) அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம், கரம் அலிகான் அவர்களால் ஆமோதிக்கப் பட்டபின் அங்கீகாரமாயிற்று.

பொக்கிஷதார்:— அ. இ. முஸ்லிம் லீக் கௌரவப் பொக்கிஷதார் பதவிக்கு மீண்டும் மஹ்மூதாபாத் ராஜாவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென ஸர்தார் அவ்ரங்கஜேப்கான் கொண்டு வந்த தீர்மானம், காஜி முஹம்மத் ஈஸா (பலுசிஸ்தான்) வால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

கூட்டுக் காரியதரிசிகள் : இரண்டு கூட்டுக் காரியதரிசிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, அ. இ. முஸ்லிம் லீக் நிர்வாக சபையிடம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

காரியதரிசி வந்தனம்

கடைசியாக அ. இ. முஸ்லிம் லீக் பொதுக் காரியதரிசி நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான் அவர்கள், மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியினருக்கு வந்தனம் கூறுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"ஜனாப் ஜின்னா அவர்கள், தவிர்க்க முடியாத காரணத்தால் இம் மகாநாட்டுக்கு வர இயலாததால், டெலிகேட்டு

கள் சார்பாகவும், என் சார்பாகவும் வரவேற்புக் கமிட்டித் தலைவருக்கும், இதர காரியாலய சிப்பந்திகளுக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்க வேண்டுவது என் கடமையாகி விட்டது. மகாநாட்டின் வெற்றிக்காக அவர்கள் பலத்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இம்மாகாணத்திற்கு வெளியிலிருந்து வந்த டெலிகேட்டுகள் வரவேற்புக் கமிட்டியினரால் வெகு அன்பாகப் பராமரிக்கப்பட்டார்கள். சென்னை மாகாணம் உண்மையில் ஒரு அற்புத மாகாணமாகும். நான் இவ்வாறு கூறுகையில், சென்னை மாகாணத்திற்கு வெளியே யிருந்து இங்கு வந்துள்ள அனைவர்களுடைய அபிப்பிராயத்தையே கூறுகிறேன்.

மகாநாடு மகத்தான வெற்றியே! :

“நான் இங்கு வந்தவுடன், சில பத்திரிகை நிருபர்கள் என்னை யணுகி, ‘இம்மகாநாடு மகத்தானதாக இருக்குமா?’ எனக் கேட்டனர். அவர்களுக்கு நான்,

“அகில இந்திய முஸ்லிம் லீக் ஒவ்வொரு மகாநாடும் மகத்தான வெற்றியை அடைந்தே வந்திருக்கிறது. இது 9 கோடி முஸ்லிம்களின் சரித்திரத்திலேயே ஒரு முக்கிய மான நிரந்தர அடையாளமாக விளங்குகிறது”

“என்று பதிலளித்தேன். லாகூரில் நிறைவேற்றப்பட்ட 9 கோடி முஸ்லிம் பொது மக்களின் உறுதியான தீர்மானம், இம் மகாநாட்டில் ஒரு பிரதிக்ஞையாக மாறி விட்டது. ஜனுப் ஜின்னு அவர்கள், உங்களுடைய விருப்பம் தீரும் வரை உங்களருகிலேயே இருக்க வேண்டுமென நீங்கள் கருதியிருந்தீர்கள். ஆனால், தேக சுகவீனத்தின் காரணமாக அவர் நம்மோடில்லாமைக்கு அனைவரும் வருந்துவீர்களென்பதை நான் அறிவேன். ஆனால் அவர், தமது தலைமைப் பிரசங்கத்தை உங்கள் முன் செய்வதற்குச் சக்தியளித்த ஆண்டவனுக்கு நீங்கள் நன்றி பாராட்டுங்கள். அவரது தலைமைப் பிரசங்கத்தில் ஒவ்வொரு துறையிலும்,

முஸ்லிம்களின் நிலைபற்றி விளக்கிக் கூறி விட்டிருக்கிறார். அதில் இன்னும் சேர்க்கப்படக் கூடியது ஒன்றும் கிடையாது.

ஒவ்வொரு துறையிலும் வெற்றியே!:

"ஒவ்வொரு துறையிலும் இம் மகாநாடு வெற்றிகரமானவைகளில் ஒன்றுஎன்பதை எவரும் மறுக்க முடியாது. முஸ்லிம் லீக் தொண்டர்களும், தேசப் பாதுகாப்புப் படையினரும் தங்களின் பொறுப்பான கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றியதற்காக நன்றி பாராட்டுகிறேன். இவர்களின் சேவைகள், முஸ்லிம்கள் தங்கள் எதிர்கால அபிவிருத்தியிலும், இளைஞர்களின் ஒழுக்கங்களிலும் கொஞ்சமும் அஞ்சவேண்டுவதில்லை யென்பதை நிரூபித்துக் காட்டுகின்றன. நீங்களனைவரும், நம் தலைவரவர்களின் தேகநிலை சுகமடையும்படி ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டுமாக அறிவித்துக் கொள்ளுகிறேன்."

மகாநாட்டில் குழுமி யிருந்த மக்கள் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்து 'ஆமீன்' என்று முழக்கினர்.

பத்திரிகைகளுக்கு நன்றி!:

மேலும், நவ்வாப் ஜாதா லியாகத் அலிகான் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:—

"இந்த மகாநாட்டின் போது, எனக்கும், முஸ்லிம் லீக்கின் இதர அங்கத்தினர்களுக்கும் பேருதவி யளித்த பத்திரிகைகளுக்கு நான் என் நன்றியைத் தெரிவிக்காவிடில், என் கடமையில் தவறியவனுவேன். சென்னைப் பத்திரிகைகள் இவ்விஷயத்தில் பேருழியம் செய்துள்ளன. அவை, தொழில் முறை பிசகாமலும், கண்ணியமாகவும் நடந்துக் கொண்டதைப் பாராட்டுகிறேன். இம் மகாநாட்டின் நடவடிக்கைகளை ரிப்போர்ட்டு செய்வதற்காக அஸோஸியே

டட் பிரஸ், டில்லியிலிருந்து ஒரு பிரதிநிதியை விசேஷமாக அனுப்பிய தென்பதை இங்கு குறிப்பிடுதல் அவசியம்."

தலைவர்களுக்கு நன்றி! :

மௌலானா ஸையத் அப்துல் வஹாப் சாஹிப் புகாரி அவர்கள், மகாநாட்டின் தலைவர்களுக்கும், அவருக்கு முக்கிய சமயங்களில் தக்க ஆலோசனைகள் கூறிவரும் நவ்வாப் ஜாதா லியாகத் அலிகானவர்களுக்கும், மகாநாட்டிற்கு விஜயம் செய்து, அதனை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்த தலைவர்களுக்கும் வந்தனம் அறிவித்துக் கொண்டார்.

பின்னர், அ. இ. முஸ்லிம் லீக் 28-வது (சென்னை) மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியின் பொதுக் காரியதரிசி ஜனுப் மலங்கு அஹ்மத் பாட்சா அவர்கள், இம் மகாநாடு வெற்றிகரமாக நடத்த மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியாருக் குதவி செய்த டெலிகேட்டுகள், விஸிட்டார்கள், சென்னை பொதுமக்கள் முதலியவர்களுக்கு வந்தனோபசாரம் கூறுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"இந்த மகாநாடு சென்னையில் நடைபெற வேண்டுமாக அழைக்கப்பட்ட சமயத்தில், யுத்தம், வர்த்தகக் குறைவு முதலியவைகளால் நிலைமை சரியாக இல்லை. எனினும், மகாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்குப் பேருதவியாக முஸ்லிம்களிடையே உணர்ச்சியும், உற்சாகமும் அபரிமிதமாக ஏற்பட்டுவிட்டது. சென்னை மகாநாடு, முஸ்லிம் லீக் சரித்திரத்திலேயே ஒரு முக்கிய அத்தியாயமாக விளங்குமென்பது திண்ணம். பாகிஸ்தானின் முக்கியாம்ஸம் பூரணமாக உணரப்பட்டு விட்டது. பாகிஸ்தான் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டால், ஜனப்பிரதேச மாற்றம் ஏற்படுமென்றும், அதனால் இம் மாகாணத்தில் பெரும் பாதகமடையக் கூடியவர்கள் 7 சத விகிதத்தினரான முஸ்லிம்களே யாகுமென்றும் ஒரு பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், சென்னை மகாநாடு இதற்குத் தக்க

பதில் கூறிவிட்டது. சென்னை முஸ்லிம்கள் சுயநலமிகளல்ல வென்பதையும், இஸ்லாத்திற்காகத் தங்கள் நலன்களைத் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறார்க ளென்பதையும் இம் மகாநாடு நிரூபித்துக் காட்டிவிட்டது. தென்னாட்டு முஸ்லிம்கள், நாடெங்கும் முஸ்லிம்களை ஒரே கட்டுப்பாடாக ஒற்றுமையடையச் செய்வதில் தங்களால் சாத்தியமான சகல சேவைகளையும் செய்யத் தயாராயிருக்கின்றனர்.

"இந்த மகாநாடு நடைபெறுவதற்காக மூர்பெவிலியனையும், எஸ். ஐ. ஏ. ஏ. கிரவுண்ட்ஸையும் உபயோகித்துக் கொள்ள அனுமதித்த அதிகாரிகளுக்கும், 'ஜின்னாஹ் ஆபாத்' நிர்மாணிக்கும் பொறுப்பை ஏற்ற என்ஜினீயர்கள், கண்டிராக்டர்களுக்கும் சென்னைப் பத்திரிகைகளுக்கும், முஸ்லிம் லீக் தொண்டர்களுக்கும் வந்தன மறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"வரவேற்புக் கமிட்டியுடன் அற்புதமான விதத்தில் ஒத்துழைத்த கார்ப்பொரேஷன் நிர்வாகிகளுக்கும், போலீஸாருக்கும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

பூர்த்தி விவரம்

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஜனாப் அப்துல் ஹமீத் கான் அவர்கள், வரவேற்புக் கமிட்டி காரியதரிசியைப் பாராட்டிப் பேசிய பின்னர், மகாநாட்டிற்கென்றே தயாரிக்கப்பட்ட உர்து கீதமொன்றை ஒருடெலிகேட்டு பாடியபின் இரவு 1-15 மணிக்கு மகாநாடு இனிதே பூர்த்தியடைந்தது.

"முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்!"

10. இந்திய முஸ்லிம்களுக்கு ஜின்னா செய்தி!

அ. இ. முஸ்லிம் லீக் தலைவர், "காயிதே ஆஜம்" ஜனாப் முஹம்மத் அலி ஜின்னா அவர்கள், 19—4—41-ல பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி யளிக்கையில் இந்திய முஸ்லிம்களுக்கும், குறிப்பாக சென்னை முஸ்லிம்களுக்கும் விடுத்த செய்தி வருமாறு:—

"நான் கூறுவதெல்லாம் இது தான். என் தேக நிலை பற்றி அன்பு கூர்ந்து விசாரித்த பெரும்பாலான மக்களுக்கு என் மனப்பூர்வமான வந்தனமளிக்க விரும்புகிறேன். நான் இப்போது சுகமாகஇருக்கிறேன். இப்போது எனக்குவேண்டுவதெல்லாம் ஓய்வுதான்; நான் ஓய்வெடுத்துக் கொள்ளப் போகிறேன்.

"என்னுடைய சென்னை விஜயத்தின்போது என்பால் பேரன்புகாட்டியமைக்காகசென்னைபல்வேறுசமூகத்தினருக்கும்நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன். என் தேகசுகவீனத்தின் காரணமாக நான் முஸ்லிம்லீக்தலைவர்களுடனும், ஊழியர்களுடனும், பிராமணரல்லாதார், தாழ்த்தப்பட்டோர், கிறிஸ்துவர் முதலிய இதர கட்சிகளின் தலைவர்களுடனும் அதிகமாக நெருங்கிப் பழக இயலாது போய்விட்டது. நான் ஏற்கெனவே இச்சமூகங்களின் தலைவர்களைச் சந்தித்திருக்கிறேன். நான் மீண்டும் சீக்கிரத்தில் இம் மாகாணத்திற்கு விஜயம் செய்ய மற்றொரு சந்தர்ப்பம் வாய்க்குமென நம்புகிறேன்.

"என் தென்னிந்தியச் சுற்றுப் பிரயாணம் ரத்து செய்யப்பட நேரிட்டது பற்றி பெரும் ஏமாற்ற மடைந்தேன். தென்னிந்தியாவின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரை என் விஜயத்தை முன்னிட்டு தக்க ஏற்பாடுகள் செய்திருந்தவர்களுக்கு என் நன்றி உரியதாகட்டும். என் தேக

யில அனுமதித்திருந்தால், நான் குறைந்த பட்சம் மூன்று வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்ய நிச்சயித்திருந்தேன்.”

* * *

சென்னை அ. இ. முஸ்லிம் லீக் மகாநாட்டின் நடவடிக்கைகளையும், தாம் சென்னையில் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் சாத்தியமான அளவு பூரணமாக பிரசுரித்த தற்காகச் சென்னை பத்திரிகைகளுக்கு ஜனுப் ஜின்னு நன்றி கூறினர்.

தென்னிந்திய முஸ்லிம்களுக்கு ஒரு செய்தி விடுக்கும் படி முஸ்லிம் பத்திரிகைப் பிரதிநிதி யொருவர் கேட்டதற்கு ஜனுப் ஜின்னு கூறியதாவது:—

“இந்திய முஸ்லிம்களே! நீங்கள் ஒழுங்காகவும், சமாதானமாகவும் ஒன்றுபடுங்கள்; ஒரே கட்டுப் பாடாக வேலை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். இதர எந்த சமூகத்தினருக்கும் கெடுதல் விளைவிக்க நாம் விரும்பவில்லை. ஆனல் நாம் நம் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு நமது உரிமைகளை நாம் பாதுகாக்கையில், அவைகளை ஒழித்து விடச் செய்யப்படும் முயற்சியை நாம் எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம்நேரிட்டால், நாம் அவையனைத்தையும் எதிர்த்தே தீருவோம்.”

* * *

அ. இ. முஸ்லிம் லீக் மகாநாடு நடைபெற்று முடிந்த பின், ஜனுப் ஜின்னு அவர்கள், அவரது தற்காலிக வாசஸ்தலமாயிருந்த சேத்துப்பட்டு, பீவர்லீ மாளிகையில் அவரைச் சந்தித்துச் சம்பாஷித்த தனிப்பட்டவர்களிடம் பின் வருமாறு கூறினர்:—

"இம் மகாநாடு வெற்றிகரமாகவும், திருப்தி கரமாகவும் நடைபெற்றதைக் கண்டு பெரும் திருப்தி யடைகிறேன். இனி எதிர்காலத்தில் முஸ்லிம் பொது மக்கள், மகாநாட்டின் தீர் மானங்களைப் பின்பற்றி, முஸ்லிம் லீக் கொடியின் கீழ் ஒன்று கூடி, அதன் நிர்மாணத் திட்ட வேலைகளை நிறைவேற்றிவைக்க வேண்டும்."

11. (1941—42-ம் வருஷம்) உத்தியோகஸ்தர்கள்

அகில இந்திய முஸ்லிம் லீக்கின் 1941—42ம் வருஷ உத்தியோகஸ்தர்கள் விவரம் வருமாறு:—

தலைவர்: "காயிதே ஆஜம்" ஜனுப் முஹம்மத அலி ஜின்னு.

பொதுக் காரியதரிசி: நவ்வாப்ஜாதா லியாகத் அலிகான் எம். எல். ஏ.,

பொக்கிஷதார்: கனம் மஹ்மூதாபாத் ராஜா சாஹிப்.

இதர உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்படும் பொறுப்பு அ. இ. முஸ்லிம் லீக் நிர்வாக சபையிடம் ஒப்பு விக்கப்பட்டிருக்கிறது.

12. அ. இ. சமஸ்தான முஸ்லிம் லீக் மகாநாடு

அகில இந்திய சமஸ்தான முஸ்லிம் லீகின் இரண்டாவது வருஷாந்திர மகாநாடு, 1941ஆ ஏப்ரல் 13உ ஞாயி

றன்று காலே 9 மணிக்கு ஜின்னுஹ் ஆபாதில், அ. இ. முஸ்லிம் லீக் 28-வது மகாநாட்டின் பந்தலில் நடைபெற்றது.

அ. இ. சமஸ்தான முஸ்லிம் லீக் தலேவர் நவ்வாப் பஹதூர் யார்ஜங் பஹதூர் தலைமை வகித்தார். இந்தியச் சமஸ்தானங்களிலிருந்து 500க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், ஏராளமான விஸிட்டர்களும் வந்திருந்தனர். மகாநாட்டுக்கு விஜயம் செய்தவர்களில் முக்கியஸ்தர்கள் வருமாறு:—

திவான் ஷௌகத் அலி, முஹம்மத் ஹஸன் ஸித்தீக் (போபால்), ரஸூல்கான் (பரோடா), குன்வார் அப்துல் மஜீத் ரஹ்மானி, ஸேட் உஸ்மான் பாய் (ராஜகோட்), சாகிப் ஜாதா நாயிப் அலிகான் (இந்தூர்), ஹாஜி அப்துல் கரீம், ஹாஜி அப்துஸ் ஸத்தார் ஹாஜி ஈஸாக் ஸேட் (கொச்சி), மௌலானு முஹம்மத் அப்பாஸ் (காஷ்மீர்).

இம் மகாநாட்டிற்கு டிக்கட்டு ஒன்றும் கிடையாதாதலால், அ. இ. முஸ்லிம்லீக் 28-வது மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த விஸிட்டர்களும், பிரதிநிதிகளும் கூட இம் மகாநாட்டில் பெருவாரியாகக் கலந்துக் கொண்டனர்.

வரவேற்புக் கமிட்டி தலேவர் பிரசங்கம் :

வரவேற்புக் கமிட்டித் தலேவர் கான்பகதூர் முஹம்மது அபாஸ்கான் பல பெரிய சமஸ்தானங்களில் நடந்துள்ள சீர்திருத்தங்களேப் பற்றி குறிப்பிடுகையில் மைசூர் சமஸ்தான முஸ்லிம்களுக்கு தனித் தொகுதி யளித்ததற்காக, மைசூர் சமஸ்தானுதிபதியைப் பாராட்டினுர். அவர் மேலும் கூறியதாவது:—

"மைசூர் சமஸ்தான மந்திரிச் சபையில் முஸ்லிம்களுக்கு திட்டமான பங்கு, சட்டப்படி அளிக்கப்படவில்லே. பொதுஜன சேவையில் முஸ்லிம்களின் பங்கு என்ன என்பதும் நிர்ணயிக்கப்படவில்லே."

சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி ஏற்படுத்துவது பற்றி கூறுகையில் பின்வருமாறு கூறினார்:—

"சமஸ்தானங்களுக்குப் பொறுப்பாட்சி முறை வேண்டுமெனக் கோரி, சமஸ்தானக் காங்கிரஸ் சபைகள் கிளர்ச்சி செய்து வருகின்றன. இக்கிளர்ச்சி சற்றும் பொறுத்தமற்றது.

அரசாட்சி செய்யும் அதிகாரம் ஒருவரிடமிருக்கும் பொழுது எப்படி பொறுப்பாட்சி அளிக்கப்படுமென்பது எனக்கு விளங்கவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவில் அரசியல் நிர்ணய சபை கோருவதையே சமஸ்தானங்களின் பொறுப்பாட்சி வேண்டுமெனக் கோருவதும் ஒத்திருக்கிறது. சட்டசபைகளில் மெஜாரிட்டி வகுப்பினரான ஹிந்துக்கள் ஆதிக்கம் செலுத்தினால் மைனாரிட்டிகளான முஸ்லிம்களின் கதி என்னவாகுமென்பது தெரியவில்லை.

"முஸ்லிம்களாகிய நாங்கள் எங்களுடைய உரிமையைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வித தியாகமும் செய்யப் பின்வாங்க மாட்டோம். சமஸ்தானங்களுக்கு பொறுப்பாட்சி அளிக்கப்படுவதை தடுப்போம். நமது சமஸ்தானாதிபதிகள் நியாயமாகவும், சகிப்புத் தன்மையுடனும் அரசாட்சி செய்துவருகிறார்கள். அவர்களை அதிகாரத்தை விட்டு போகச் செய்வது கூடாது."

முடிவில் முஸ்லிம்களுக் கெதிராக ஹிந்து மகாசபை செய்துவரும் பிரசாரத்தை எதிர்த்து பிரசாரம் செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்.

தலைவர் பிரசங்கம் :

இம் மகாநாட்டிற்கு தலைமை வகித்த நவ்வாப் பஹதூர் யார்ஜங் பகதூர் பேசியதன் முக்கிய பகுதி வருமாறு:—

"சமஸ்தானங்களில் உள்ள முஸ்லிம்களனைவரும் பாகிஸ்தான் இலட்சியத்தை யடைவதற்காக ஒன்றுபட்

டுழைக்க வேண்டும். நாமும் இதர பிரிட்டிஷ் இந்திய முஸ்லிம்களோடு ஒற்றுமை யடைந்து, இதைப்பற்றி முயற்சித்தால், போதிய பலன் ஏற்படும்.

"1935-ம் வருஷத்தின் சட்டத்திற்கு பின்னர் தான் சமஸ்தான விஷயங்களில் காங்கிரஸ் தலையிடுவது வெளிப்படையாயிற்று. மத்திய சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சமஸ்தானபிரஜைகளிடமிருந்து வாக்கு சேகரிக்க காங்கிரஸ் பிரசாரத்தை ஆரம்பித்தது. ஆரிய சமாஜம், ஹிந்து மகாசபை ஆகிய ஸ்தாபனங்கள் காங்கிரஸ் நோக்கத்தைக் கொண்டவைகள் தாம்.

"சமஸ்தானங்களிலுள்ள காங்கிரஸ், ஹிந்து மகா சபை, ஆரிய சமாஜம் முதலிய ஸ்தாபனங்களின் பிரதான அங்கத்தினர்களெல்லோரும் காங்கிரஸ் அதிகாரிகளுடன் தொடர்புள்ளவர்கள்தான். இவர்களனைவரும் சமஸ்தான விஷயங்களில் தலையிடுவதன் காரணம் அவர்களின் பதவி மோகமே யாகும்.

"டாக்டர் பட்டாபி சீதாராமையாவினுல் நடத்தப்பட்டும், ஜவாஹர்லாலினுல் ஆதரிக்கப்பட்டும் வருவதானசமஸ்தான பிரஜைகள் லீக் பல மாறுபட்ட தோற்றத்தையுடைய ஸ்தாபனங்கள் செய்துவரும் நடவடிக்கைகளே யாகும்.

"இம்மாதிரியான ஸ்தாபனங்கள் பலப்படுத்தப்பட்டால் சமஸ்தான முஸ்லிம்களின் உரிமைகள் பாதிக்கப்படுமென்பதை சமஸ்தான முஸ்லிம்கள் உணர்கிருர்கள். தங்களது உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளவே இந்த அ. இ. சமஸ்தான முஸ்லிம் லீக் ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது.

"எல்லா சமஸ்தானங்களிலும் ஓரே மாதிரியான முறையைப் பின்பற்ற முடியாது. ஒவ்வொரு சமஸ்தானங்களிலும் ஏற்படும் பிரச்னை, அந்தந்தச் சமஸ்தான நிலைமைக்குத் தகுந்தபடி தீர்க்கப்பட வேண்டும்.

"சமஸ்தானங்களில் காங்கிரஸ் தலையிட்டதினால் சில சமஸ்தானாதிபதிகள் சில புதிய அரசியல் சட்டங்கள் பிறப்பித்திருக்கின்றனர். ஆனால் அநேக சமஸ்தானங்களில் முஸ்லிம்களின் உரிமை பாதுகாக்கப்படவே யில்லை.

"ஆனால் மைசூரும், திருவாங்கூரும் முஸ்லிம்களுக்கு தனித் தொகுதியை அளித்திருக்கின்றன.

"எல்லா முஸ்லிம்களுக்கும் திருப்திகரமாக இருக்கக் கூடியது பாகிஸ்தான் திட்டமேயாகும். இந்த லட்சியத்தை யடைய சமஸ்தான முஸ்லிம்கள் பிரிட்டிஷ் இந்திய முஸ்லிம்களுக்குத் தனது பூரண ஒத்துழைப்பை அளிப்பார்கள்."

பின்னர், வருஷாந்திர அறிக்கை படிக்கப்படும்பொழுது, சென்ற வருஷத்தில் அனுமதிக்கப்பட்ட தீர்மானம் வற்புறுத்தப்பட்டது. [அதன்படி சமஸ்தான முஸ்லிம்களின் சம்மதமும் அனுமதியும் இன்றி, இந்தியாவில் அரசியல் மாறுதல் ஒன்றும் செய்யக்கூடாதென்பதே யாகும்.]

தீர்மானங்கள் :

மகாநாடு மீண்டும் அன்று இரவு கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது:

பாகிஸ்தான் திட்டத்திற்கு மனப் பூர்வ ஆதரவளிப்பதாக ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இதர தீர்மானங்களில் முக்கியமானவை வருமாறு:—

"சமஸ்தான முஸ்லிம்களின் உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது. எல்லா சமஸ்தானங்களிலும் தனித் தொகுதித் தேர்தல் முறை அளிக்கப்பட வேண்டும்."

'சமஸ்தானங்களில் அரசியல் திருத்தம் ஏதாவது செய்ய வேண்டி யிருந்தால் சமஸ்தா

ஞதிபதிகள் சமஸ்தான முஸ்லிம்களை கலந்தாலோசிக்க வேண்டிய தவசியம்."

"சமஸ்தான முஸ்லிம்களின் அரசியல், சமூகம், மதம் பொருளாதாரம் ஆகிய பிரச்னைகளை நேரில் கண்டு தெரிந்து கொள்வதன் பொருட்டு, பல சமஸ்தானங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டது."

12. முஸ்லிம் பெண்கள் மகாநாடு

அ. இ. முஸ்லிம் லீக் பெண்கள் மகாநாடு, 13-4-41 மாலை 4 மணிக்கு 'ஜின்னுஹ் ஆபாத்'தில் அ. இ. முஸ்லிம் லீக் 28-வது மகாநாட்டுப் பந்தலில் நடைபெற்றது. பூரண பர்தா ஏற்பாடுகளுடன் நடைபெற்ற இம் மகாநாட்டில், ஆண்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

இம் மகாநாட்டிற்கு தமிழ் நாட்டிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் சுமார் 1500 பெண் மக்கள் விஜயம் செய்திருந்தனர். முஸ்லிம் பெண்கள் மட்டுமின்றி, ஹிந்துப் பெண்களும் திரளாகக் கூடியிருந்தனர்.

பேகம் முஹம்மத் அலி தலைமை வகித்தார். பேகம் யூசுப் ஹாரூன் (ஸர் அப்துல்லா ஹாரூனின் மருமகள்) அழகிய முறையில் கிராஅத் ஓதியபின், பாகிஸ்தான் கீதங்கள் பாடினுர். இதற்குப் பின் சில பெண்கள் பாகிஸ்தான் பற்றிய உர்தூ கீதங்கள் பாடினர்.

வரவேற்புக் கமிட்டித் தலைவியார் பேகம் அப்துல் ஹமீத்கான், தமது வரவேற்புரையை வாசித்தார். முஸ்லிம் பெண்களின் கடமை பற்றி அப் பிரசங்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

வரவேற்புப் பிரசங்கம் முடிந்தவுடன, மகாநாட்டுத் தலைவியார் பேகம் முஹம்மத் அலீ அவர்கள் உர்தூ

மொழியில் செய்த வீரம் செறிந்த நீண்ட பிரசங்கத்திடையே பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"இங்கு இவ்வளவு பெருவாரியான பெண் மக்கள் விஜயம் செய்திருக்கின்றதைக் கண்டு வெகு திருப்தியடைகிறேன். இதிலிருந்து இந்திய முஸ்லிம் பெண்கள் அனைவரும் அ. இ. முஸ்லிம் லீகின் இலக்ஷியத்தை ஆதரிக்கின்றனர் என்பதும், அந்த லக்ஷியத்தை ஏற்று நிற்கத் தயாரா யிருப்பதாகவும், லீகிடம் நம்பிக்கையும், விசுவாசமும், தேசாபிமானமும் கொண்டிருக்கும் விஷயத்தில் பிறர் எவருக்கும் தாழ்ந்துவிடவில்லை யென்பதும் தெளிவாக நிரூபணமாகிறது.

"அகில இந்திய முஸ்லிம் லீகுக்கு பெண்களின் ஆதரவைப் பெறுவதற்காகவென்று "காயிதே ஆஜம்" ஜனுப் முஹம்மத் அலி ஜின்னு அவர்கள், ஒரு பெண்கள் சப் கமிட்டி நியமித்துள்ளார்.

"எனவே, ஒவ்வொரு மாகாணத்திலும், ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் பெண்கள் முஸ்லிம் லீக் பிரசாரம் செய்வதற்காகத் தீவிரக் கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டுவதவசியம். இஸ்லாத்தின் உன்னதமான கொள்கைகளை ஒழுங்காய் அனுசரித்து வருவது தான் முஸ்லிம் சமூகத்தை உயர்த்துவதற்காகத் தொண்டு புரிவதாகும்.

"இந்நாட்டு அரசியலை எடுத்துக் கொள்வோமாயின், சிறுபான்மையோரா யிருக்கும் முஸ்லிம்கள், 7 மாகாணங்களில் காங்கிரஸ்காரர்கள் ஆட்சி புரிந்த போது, மிகக் கேவலமாக நடத்தப் பட்டார்கள். ஆனுலும், அங்ஙனம் முஸ்லிம்கள் கொடுமைக ளிழைக்கப்பட்டது மறைமுகமாக இச்சமூகத்திற்குநன்மைசெய்வதுபோலத்தானுயிற்று. அவர்கள் அவ்வண்ணம் கொடுமைகளிழைத்ததன் காரணமாகவே

இன்று முஸ்லிம்களிடையிலும் முஸ்லிம் பெண்களிடையிலும் கூட ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டது.

"இந்தியாவின் அரசியல் பிரச்னையைத் தீர்க்கவல்ல அனுபவ சாத்தியமான முறை பாகிஸ்தான் திட்டமேயாகும். இந்தத் திட்டம் முஸ்லிம் நாடுகளையும், ஹிந்து நாடுகளையும் தனித் தனியாகப் பிரிப்பதைத் தவிர்த்து வேறில்லை. முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்குமிடங்களில் முஸ்லிம்களின் தனியாட்சி இருக்க வேண்டுமென்பதும், ஹிந்துக்கள் பெரும்பான்மையினராக இருக்குமிடங்களில் ஹிந்துக்களின் தனியாட்சி இருக்க வேண்டுமென்பதும்தான் பாகிஸ்தான் திட்டத்தின் கருத்தாகும். இவ்வாறு இருந்தால் இவ்விரு பெரும் சமூகங்களும் சுயேச்சையாகத் தத்தம் சமூகங்களை அபி விருத்தி யடையச் செய்து கொள்ளலாம்.

"முஸ்லிம்கள் பாகிஸ்தான் கேட்பது ஹிந்துக்களுடன் போராடுவதற்கன்று. சமாதானமாக வாழ்ந்து சமாதானம் எங்கும் நிலவச் செய்ய வேண்டு மென்னும் அவாக் கொண்டே பாகிஸ்தான் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் இல்லாமல் முஸ்லிம்கள் வாழ்தல் முடியாத காரியம்."

பேகம் முஹம்மத் அலீ அவர்கள், தமது தலைமைப் பேருரையின் முடிவில், தமக்குச் சென்னை நகரப் பெண்கள் அளித்த கௌரவத்திற்காக நன்றி கூறுவதாகக் குறிப்பிட்டார்.

தலைமைப் பிரசங்கம் முடிந்தவுடன், "காயிதே ஆஜம்" ஜனாப் ஜின்னாவின் சகோதரி மிஸ் பாத்திமா ஜின்னா அவர்களுக்கு உபசாரப்பத்திரம் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது. அதற்கவர் கூறிய பதிலில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"முஸ்லிம் லீக் நாளுக்கு நாள் மிகுந்த சக்தியுடைய ஸ்தாபனமாகப் பெருகிக் கொண்டே வந்து, இன்று உல

கமே பிரமிக்கக் கூடிய மகத்தான ஸ்தாபனமாகப் பல மடைந்து விட்டது. முஸ்லிம் லீகில் ஆண்கள் மட்டுமின்றி, பெண்களும் சேர்ந்து கொண்டு தொண்டாற்ற வேண்டும். பெண்களால் தான் ஆண் மக்கள் வீரமும், உற்சாகமும், உணர்ச்சியும் பெறவேண்டியிருக்கிறது. இஸ்லாமிய தேச சரித்திரத்தில் முஸ்லிம் பெண் மக்கள் போரில் பங்கெடுத்து வீரச் செயல்கள் ஆற்றியுள்ளதாக வெல்லாம் படித்து அறிந்திருக்கிறோம்.

"இப்பொழுது நம் சமூக உயர்வையும், நலனையும் கருதியே பாகிஸ்தான் கோரப்படுகிறது. பாகிஸ்தான் முஸ்லிம் சமூகத்துக்கு உயிர்நாடி போன்றது. எப்படியாவது பாகிஸ்தானைப் பெற்றே தீருவோம். ஆண்கள் தளர்ந்தாலும் அவர்களுக்கு வீரமூட்டிப் பாகிஸ்தானைப் பெற்றே தீருவோம். பாகிஸ்தானுக்காக முஸ்லிம் பெண்மணிகள் உயிர் விடவும் தயாராயிருக்க வேண்டும். பாகிஸ்தான் நம் பிறப்புரிமை. அதைப்பெறாது உயிர் வாழ்தலில் பயனில்லை."

அதன்பின், ஸுரையா பேகம், நபீஸா பேகம் ஆகிய இருவரும் சமூக சீர்திருத்தப் பாடல்களைப் பாடினர்.

பிறகு, பேகம் ஹபீபுல்லா சாஹிப், பேகம் யார்ஜங் பஹதூர் எஃஜ ரசூல் சாஹிபா, பேகம் அஜ்ஜுத்தீன் சாஹிபா (பம்பாய்,) பேகம் முஹம்மத் ஹுசைன் (டில்லி) ஆகியோர் பாகிஸ்தானை வற்புறுத்தியும், முஸ்லிம் லீக் அவசியத்தை எடுத்துக் காட்டியும், முஸ்லிம்களால், செய்யப்பட்ட பொருள்களையே வாங்கி ஏழை முஸ்லிம் தொழிலாளரை ஆதரிக்க வேண்டுமென்றும், முஸ்லிம் பெண் மக்கள் கல்வி பயின்று, சிக்கனமாகச் செலவுசெய்து சமூக உயர்வுக்கான தொண்டுகளாற்ற வேண்டுமென்றும் அருமையான பிரசங்கங்கள் செய்தனர்.

இதன்பின், பாகிஸ்தானை வற்புறுத்தியும் மற்றும் பல முக்கிய விஷயங்கள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

13. சென்னை அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் பொன் விழா

சென்னை 'அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம்' யத்தீம் கானு 50-வது வருஷ பொன் விழா மகாநாடு 1941-வது வருஷம் ஏப்ரல் மாதம் 13௳ இரவு 9½-மணிக்கு சென்னை ஜின்னுஹ்ஆபாத் முஸ்லிம்லீக் மகாநாட்டுப்பந்தலில் வெகு சிறப்பாக நடைபெற்றது. உள்ளூர், வெளியூர் ஜனங்கள் சுமார் 50,000 பேர் குழுமியிருந்தனர். அம் மகாநாட்டுக்கு ஜனுப் மஹ்மூதாபாத் ராஜா சாஹிப் தலைமை வகித்தார். தலைவர் நீண்ட உருக்கமாக தலைமைப் பிரசங்கத்தை நிகழ்த்தினுர். அதில்,

யத்தீம்கானு (அனுதைச்சாலை) முஸ்லிம்களுக்கு அவசியத்தைப் பற்றியும், அதை ஏற்படுத்துவதால் முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் விளக்கமாகக் குறிப்பிட்டார்.

பின்னர், யத்தீம் கானுவின் கௌரவக் காரியதரிசியான ஜனுப் ஷிபாஉல் முல்க் ஹாஜி ஹக்கீம் ஸய்யித் மஹ்தூம் அஷ்ரப் சாஹிப் அவர்கள் அன்ஜுமன் யத்தீம் கானு வருஷாந்தர ரிப்போர்ட்டை வாசித்தார். அதில்,

50 வருஷமாக இவ்வனுதை சாலை செய்துவந்த வேலைகளை விவரமாகக் கூறப்பட்டிருந்தது.

மேலும், "இந்த யத்தீம்கானு ஆரம்பத்தில் சில அனுதைக் குழந்தைகளைக் கொண்டு நடைபெற்று வந்தது நாளடைவில் இது அபிவிருத்தியடைந்து இப்பொழுது மிக பலமுடைய கியாதிபெற்ற யத்தீம் கானுவாக விளங்குகிறது. இவ்வனுதைச் சாலையில் 300 அனுதைக் குழந்தைகள்

போஷிக்கப்படுகிறார்கள். இதில் ஒரு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் இருக்கிறது. இங்கு படித்த பிள்ளைகள் வேறு ஹைஸ்கூல், காலேஜ், சர்க்கார் கைத்தொழிற் சாலைகள் முதலியவைகளில் பல கல்விகள் கற்று வருகின்றனர். 50 அனாதை யத்தீம் சிறுமிகள் நல்லவிதமாக போஷிக்கப்படுகிறார்கள். இந்த யத்தீம் கானாவை மதராஸ் மாகாண தலைமை யத்தீம் கானாவாகச் செய்யவும், இதன் கிளைகளை சென்னை மாகாணம் முழுவதும் ஸ்தாபிக்கவும் முயற்சிக்கப்பட்டு வருகிறது. இவ் யத்தீம்கானாவுக்காக கார்ப்பொரேஷனிலிருந்து வாங்கப்பட்ட விசாலமான இடத்தில் போதிய கட்டடம் கட்டவும் முயற்சிக்கப்பட்டு வருகிறது. அதற்கு பணவுதவி தேவையாக இருக்கிறது" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்கண்ட ரிப்போர்ட்டை ஆதரித்து நவ்வாப் பஹதூர் யாரஜங் அவர்கள் ஓர் உருக்கமான பிரசங்கம் செய்தார். அதில்,

இந்த யத்தீம்கானாவுக்கு முஸ்லிம்கள் பல உதவி செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசி விட்டு,

“நான் 2 விடுத்தம் இந்த யத்தீம்கானாவை நேரில் கண்கூடாகப் பார்த்தேன். இந்த யத்தீம்கானாவுக்காக விசாலமான கட்டடங் கட்ட வாங்கப்பட்டுள்ள இடத்தையும் பார்வையிட்டேன். இந்த இடம் முக்கியமான ஸ்தலத்தில் அமைந்திருக்கிறது.

“யத்தீம்கானாவின் நிர்வாகம் காரியதரிசி அவர்களால் வாசிக்கப்பட்ட ரிப்போர்ட்டில் கண்டுள்ளதைப்பார்க்கினும் அதிக நல்ல நிலைமையில் நடைபெற்று வருவதை நான் கண்கூடாகக் கண்டேன்,”

எனக்குறிப்பிட்டார். பின்னர் மௌலானா ஜபாலீகான் அவர்களும், லக்னோ மௌலானா அப்துல் பாரீ மர்ஹூம்

அவர்கள் குமாரர் மௌலானா ஜமாலுத்தீன் அவர்களும், மௌலானா அப்துல் ஹாமித் பதாயூனீ அவர்களும் இந்த யத்தீம்கானாவுக்கு பண வுதவி செய்ய வேண்டிய அவசியத்தைப்பற்றி உருக்கமாக பிரசங்கங்கள் செய்து ஜனங்களை யத்தீம்கானாவுக்கு பண வுதவி செய்யும்படி வேண்டிக் கொண்டனர்.

உர்தூ, ஆங்கிலம், தமிழ், தெலுங்கு பாஷைகளிலும் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அம் மகாநாட்டுக் கூட்டத்திலேயே சுமார் 800 ரூபாய் சந்தா சேர்ந்தது.

பின்னர் மகாநாடு வெற்றிகரமாக முடிவு பெற்றது.

மகா நாட்டின் விசேஷங்கள்

(1) சென்னையில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக் 28-வது மகாநாடு, இலட்சத்திற் கதிகமான முஸ்லிம்கள் கூடிய மகாநாடாக இருந்தும், முஸ்லிம்களுக்கிடையேயோ, ஹிந்து முஸ்லிம்களுக்கிடையேயோ எவ்வித சிறு குழப்பமோ, அபிப்பிராய பேதமோ, மகாநாட்டினருக்குக் கவலைதரக் கூடிய வேறு எவ்வித அசம்பாவிதமோ மகாநாடு நடைபெற்ற இச்சென்னையில் மட்டுமின்றி சென்னை மாகாணத்திலேயே எங்கும் தலை காட்டாமல் நிச்சப்தமாகவும், அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

(2) மகாநாட்டின் பந்தல் அமைப்பைப்பற்றி, எல்லைப்புற மாகாண அசெம்பிளிச் சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஷை மாகாண முஸ்லிம் லீக் தலைவருமான ஸர்தார் அவ்ரங்க ஜேப்கான் அவர்கள்,

"நான் எத்துணையோ முஸ்லிம் மகாநாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். இம்மகாநாட்டுப் பந்தல் அமைப்பைப்

போல் அழகிய மொகலாய முறைப்படியாகவும், கம்பீரத் தோற்றத்தை கொடுக்கக் கூடியதாகவும், சுகாதாரத்திற் கேற்றவாறு நாற்றிசைகளிலிருந்தும் சுகமான காற்று வீசக் கூடியதாகவும் அமைக்கப்பட்ட வேறு பந்தல் ஒன்றையும் நான் பார்த்ததில்லை.''

எனக் கூறினர்.

(3) பாகிஸ்தான் திட்டப்படி ஏற்படும் 'முஸ்லிம் இந்தியா' ஆட்சி உண்மையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களில் வதியும் முஸ்லிம்களுக்கே முழு அனுகூலங்களையும், ஆட்சி முறை அதிகாரங்களையும் தரக் கூடியதாகும். முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ள மாகாணங்களில் வதியும் முஸ்லிம்களுக்கு இத்திட்டத்தின் படி மதம், கலை, சுதந்திரம் பாதுகாக்கப்படினும், பெரும்பான்மை முஸ்லிம்களுக்குள்ள அனுகூலங்கள் இவர்களுக்குக் கிடையா என்பதை உணர்ந்திருக்கின்றனர். ஆயினும், 7 சத விகிதமான மிகச் சிறுபான்மையினராக வசிக்கும் சென்னை மாகாண முஸ்லிம்கள், பெரும்பான்மை மாகாண முஸ்லிம்களைப் பார்க்கினும் அதிக ஒற்றுமையாகவும், உற்சாகமாகவும் பாகிஸ்தான் திட்டத்தை ஆதரித்ததானது, பெரும்பான்மை முஸ்லிம் மாகாண வாசிகளான முஸ்லிம்கள் மீது சகோதர வாஞ்சையையும், தன்னலம் கருதாத் தன்மையையும் தியாகத்தையும் தெற்றென விளக்கிக் காட்டியதைக் கண்டு, 'காயிதே ஆஜம்' முதலிய வட இந்திய முஸ்லிம தலைவர்கள் மகிழ்ச்சியும், திருப்தியும் அடைந்தனர். இதன் காரணமாகவே லாகூர் அ. இ. முஸ்லிம் லீக் 27-வது மகாநாட்டில் ஆதரிப்பதாக நிறைவேற்றப்பட்ட பாகிஸ்தான் தீர்மானத்தை, சென்னை இம் மகாநாட்டில் அ. இ. முஸ்லிம் லீக் இலட்சியங்களில் முக்கியமானதென்று தீர்மானிக்கப்பட்டது.

சென்னை மாகாண முஸ்லிம்களின் இத்தியாகத்தைப் பற்றி பலுச்சிஸ்தான் மாகாண முஸ்லிம் லீக் தலைவர், காஜி முஹம்மத் ஈஸா அவர்கள்,

"சிறுபான்மை முஸ்லிம் மாகாணங்களிலுள்ள இரண்டு கோடி முஸ்லிம்கள், பெரும்பான்மை முஸ்லிம் மாகாணங்களிலும், வடமேற்கிலும், வடகிழக்கிலுமுள்ள தங்கள் சகோதரர்களாகிய ஏழு கோடி முஸ்லிம்களும் ஒரே தனிச் சுதந்திரப்பிரதேசத்தைப்பெற வேண்டுமென்பதற்காகத்தங்கள் நலன்களை யெல்லாம் தியாகம் செய்து விட்டிருக்கிறார்கள். இத் தியாகத்தைத் தவிர வேறு சிறந்த தியாகம் என்ன இருக்கிறது?"

என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து சென்னை மாகாண முஸ்லிம்கள், இம்மகாநாட்டின் மூலம் இதர மாகாண முஸ்லிம்களிடம் தனிச் சிறப்பு பெற்றுள்ளன ரென்பது நன்கு நிரூபணமாகிறது.

(4) பாகிஸ்தான் திட்டத்தை விரும்பாத காங்கிரஸ், ஹிந்து மகாசபை, சீக்கியர் முதலிய ஹிந்துக்கள் பாகிஸ்தான் திட்ட விஷயத்தில் இந்திய முஸ்லிம்களுக்குள் பிளவை ஏற்படுத்துவதற்காகச் செய்து வந்ததும், வருவதுமான சூழ்ச்சிப் பிரசாரங்களில், பாகிஸ்தான் திட்டம் சிறுபான்மையினராக முஸ்லிம் வசிக்கும் மாகாண முஸ்லிம்களுக்கு பல கஷ்டங்களிருக்கின்றன வென்று தப்புந் தவறுமாகக் கூறிவந்தனர். இவர்களின் துவறானப் பிரசாரங்களுக்கு, சென்னை மாகாண முஸ்லிம்கள் இம்மகாநாட்டில் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பாகிஸ்தானை தங்கள் இலட்சியமாக ஏற்றுக் கொண்டதானது தக்க வாயாப்பாக ஆகிவிட்டது.

(5) இம் மகாநாட்டில் "காயிதே ஆஜம்" அவர்கள் ஆற்றிய தலைமைப் பேருரை, இந்தியாவில் மட்டுமின்றி,

இங்கிலாந்து முதலிய மேனாடுகளிலும், வேகமாகப் பாய்ந்து அவர்களின் காதுகளில் சீக்கிரமாக ஒலித்தது போல், இதர மகாநாடுகளில் அவர் ஆற்றிய தலைமைப் பிரசங்கம் அவ்வளவு தீவிரமாக அவர்களின் செவிகளில் பாய்ந்து அவர்கள் முஸ்லிம்களின் பலத்தை உணரும்படி செய்ய வில்லையென்பதற்கு கனம் இந்தியா மந்திரி கர்னல் அமெரி அவர்கள்' ஜனாப் ஜின்னாவின் இப்பிரசங்கத் தைக் கேட்டு,

"இப்போது முஸ்லிம் லீக்கின் தலைவரான ஜனாப் ஜின்னா இந்தியாவில் வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளை மற்ற பிரதேசங்களிலிருந்து பிரித்து விட வேண்டுமென வெளியிடும். (பாகிஸ்தான்) கோரிக்கைக்கு ஆதரவு அதிகரித்து, முஸ்லிம் லீக்கின் பலம்வளர்ச்சி யடைந்துவருகிறது.''

என்று கூறி யிருப்பதைச் சான்றாகக் கொள்ளலாம்.

(6) இம் மகாநாட்டுக்கு இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் வந்திருந்த ஏராளமான ஸ்பெஷல் வண்டிகளைப் போல் இதுவரை இந்தியாவில் நடைபெற்ற எந்த அரசியல் மகாநாட்டுக்கும் வந்தது கிடையாதெனக் கூறலாம்.

முடிவுரை

சென்னையில் நடைபெற்ற அ. இ. முஸ்லிம் லீக் மகாநாடு எவ்வளவு வெற்றிகரமாகவும், புகழுக் குரியதாகவும் நடைபெற்றுமுடிந்ததென்பது இம்'மலரி'ல் கண்டுள்ள விவரங்களிலிருந்து நன்கு விளங்கக் கிடக்கின்றது. இம் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியாருக்கு டிக்கட்டு மூலம் வரூலான ரூபாய் சுமார் ஒரு இலட்சமென மதிப்பிடப்படுகிறது. இம் மகாநாட்டுக்கு விஜயம் செய்த பிரதிநிதிகள், விஸிட்டர்கள் சுமார் ஒரு இலட்சம் பேருக்கும் தனித்தனி

யே செலவான ரூபாய்களை மதிப்பிடும்போது, இம்மகாநாடு சம்பந்தமாக இந்திய முஸ்லிம்களின் சுமார் 10 லட்சம் ரூபாய் செலவாகி யிருக்குமென்றே கருத வேண்டியிருக்கிறது. இவ்வளவு பெருந் தொகை செலவிட்டுக் கூடிய மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும், முஸ்லிம் லீக் வேலைத் திட்டங்களையும் அனுஷ்டான பூர்வமாக அமல் நடத்தி வைப்பதற்கு ஒவ்வொரு முஸ்லிமும் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டால்தான், இம் மகாநாட்டிற்குச் செலவு செய்யப்பட்ட லட்சககணக்கான ரூபாய்கள் பயனுடையனவாகு மென்பதை ஒவ்வொரு முஸ்லிம்களும் உணர்ந்து, முஸ்லிம் லீக் வேலைத்திட்டங்களையும், நிர்மாணத் திட்டங்களையும் கடைப்பிடித்து உழைக்க முன் வரும் பாக்கியத்தை அவர்களுக்கு ஆண்டவன் அருள்புரிவானாக" ஆமீன்!

"முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்!"

"பாகிஸ்தான் ஜிந்தாபாத்!!"

வை. இ. சொந்த பிரசுரங்கள்

மார்க்க, சமூக, தேசிய ஞானத்தைப் புகட்டும் அரிய நூற்கள்

கீழ்க்காணும் "ஸைபுல் இஸ்லாம்" சொந்தப் பிரசுர அரிய நூற்கள் கொஞ்சம் பிரதிகளே நம் கைவசமிருக்கின்றன. அவைகள் தீர்ந்து விட்டால் மறுபதிப்பு கடித விலை கூடுதலால் அதிகப்படும். ஆகையால் முஸ்லிம் சகோதரர்களே! இந்நல்ல சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடாமல் இப்பொழுதே ஷை புத்தகங்களைத் தருவித்துக் கொள்ளுங்கள்.

	ரூ.	அ.	ப.
முஸ்லிம் லீக் சரிதை	0	4	0
ஹஜ்ஜு யாத்திரை (2-ம் பதிப்பு)	0	6	0
இஸ்லாமும் உலகமும்	0	12	0
இந்திய முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி	0	8	0
திருக் குர்ஆனும், ஐரோப்பியரும்	0	4	0
திருக் குர்ஆனும், பிற மதத்தாரும்	0	10	0

அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் பாடப் புத்தகங்கள்:—

நபிகள் திலகம் முதல் பாகம் (2-ம் பதிப்பு)	0	4	0
ஷை இரண்டாம் பாகம்	0	4	0
ஷை மூன்றாம் பாகம்	0	5	0

நூதன செந்தமிழ் முஸ்லிம் வாசகம் இரண்டாம் வகுப்புக்கும், மூன்றாம் வகுப்புக்கும் உரியது.

முஸ்லிம் வாசகம் இரண்டாம் வகுப்பு	0	4	0
ஷை மூன்றாம் வகுப்பு	0	4	6

ஸைப. இ. சொந்த பிரசுரங்கள்

	ரூ.	அ.	ப.
நோன்பின்மாட்சி	0	2	0
நஜ்முல் இஸ்லாம் (2-ம் பதிப்பு)	0	4	0
அயோத்திய குபுர்ஸ்தானில் ஒரு நற்பாக்கிய ஆத்மா ..	1	0	0
காபுலின் கன்னிகை	0	10	0
காதியானிகளின் தவறான கொள்கைகள் விளக்கும் மௌலானா ஸையித் அத்தாவுல்லா ஷாஹ் புகாரி வழக்கு	0	8	0
பர்தா பிரமாணம்	0	4	0
வசியத் லா	0	2	0
ஈமான் இஸ்லாம்	0	2	0

தபால் செலவு வேறு.

அதிக புத்தகங்ளுக்கு ஆர்டர் செய்கிறவர்கள் பக்கத்திலுள்ள ரெயில்வே ஸ்டேஷன் விலாசத்தைத் தெரிவித்தால் ரெயில்வே பார்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். ரங்கூன், பர்மா, சிங்கப்பூர், பினுங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. கிடையாது. எனவே, முன் பணமின்றி வரும் ஆர்டர்கள் கவனிக்கப்பட மாட்டா.

குறிப்பு:—நமது "ஸைபுல் இஸ்லாம்" புத்தகசாலையில் மார்க்க சம்பந்தமான இதர புத்தகங்களும், சட்ட புத்தகங்களும் கிடைக்கும். கேட்லாக்கு தேவையானவர்கள் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்:

"ஸைபுல் இஸ்லாம்" புத்தகசாலை,

47, செம்புதாஸ் தெரு, சென்னை.